©
GOVERNMENT OF TAMIL NADU
2024

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 31.20 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

**PUBLISHED BY AUTHORITY**

No. 36] CHENNAI, WEDNESDAY, SEPTEMBER 4, 2024
Aavani 19, Kurothi, Thiruvalluvar Aandu–2055

## Part VI—Section 2

**Notifications of interest to a section of the public issued by Heads of Departments, etc.**

**NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.**

**CONTENTS**

*Pages.*

TAMIL NADU ELECTRICITY REGULATORY COMMISSION, CHENNAI

Amendments to the Tamil Nadu Electricity Regulatory Commission (Renewable Energy Purchase Obligation) Regulations 2023 .. .. .. .. .. .. .. ... 110-111

தமிழ்நாடு மின்வழங்கல் விதித் தொகுப்பு etc .. .. .. .. .. .. .. 112-184

**தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், சென்னை**

**தமிழ்நாடு மின்வழங்கல் விதித் தொகுப்பு**

*(அறிவிக்கை எண் த.மி.ஒ.ஆ./மி.வ.வி /7–48, 02–09–2023 நாளிட்டது)*
*(Lr. No.TNERC/Legal/2601/D.No.1275/2024)*

*(ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டதன் தமிழாக்கம்)*

No. VI(2)/27/2024.

மின்சாரச் சட்டம், 2003–இன் (மத்திய சட்டம் 36 / 2003) 50–ஆம் பிரிவில் அதற்கு வழங்கப்பட்ட அதிகாரங்களையும் செலுத்தி தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் தமிழ்நாடு மின்வழங்கல் விதித் தொகுப்பினை 2004, செப்டம்பர் 1–ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிட்டு, மேலும் அடுத்தடுத்த திருத்தங்களை வெளியிட்டுள்ளது என்பதாலும்;

தமிழ்நாடு மின் வழங்கல் விதித் தொகுப்பிலுள்ள ஒழுங்குமுறை விதிகளுக்கு ஒரு சில திருத்தம் பிறப்பிப்பது அவசியமென கருதுவதால், அத்தகையத் திருத்தம் முந்தைய வெளியீட்டின் வரையறைகளுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும் என்பதற்கிணங்க முந்தைய வெளியீடு செய்யப்பட்டுள்ளது என்பதாலும்;

தற்போது, அதற்காக, மின்சாரச் சட்டம், 2003 இன் (மத்திய சட்டம் 36 / 2003) 181–ஆம் பிரிவுடன் சேர்த்து படிக்கப்படும் 50–ஆம் பிரிவுகளின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களையும் மற்றும் இதன் பொருட்டு அதனை இயல்விக்கும் அனைத்துப் பிற அதிகாரங்களையும் செலுத்தி, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், தமிழ்நாடு மின்பகிர்மான விதித் தொகுப்பில் பின்வரும் திருத்தங்களை செய்கிறது, அதாவது.–

**திருத்தங்கள்**

**மேற்கூறிய ஒழுங்குமுறை விதிகளில்:–**

**1(a) ஒழுங்குமுறை 2–இல், உட்கூறு (s)க்குப் பிறகு, பின்வரும் உட்கூறு சேர்க்கப்படும், அதாவது :–**

*“(t) “அங்கீகரிக்கப்படாத மின் பயன்பாடு” என்பது மின்சார சட்டப்பிரிவு 126–இன் கீழ் குறிப்பிடப்பட்ட அதே பொருளைக் கொண்டதாகும். இச்சட்டத்தின் 135வது பிரிவின் கீழ் கூறப்பட்டுள்ள அங்கீகரிக்கப்படாத மின் பயன்பாடு என்பது மின் திருட்டு / சட்டவிரோத மின் மீட்டுதரலுக்கு மட்டுமே பொருந்தும்.”*

**1(b) ஒழுங்குமுறை விதி 2– இன் இறுதியில் உள்ள சொற்றொடர் பின்வருமாறு மாற்றீடு செய்யப்படும், அதாவது :–**

*“இந்த விதித்தொகுப்பில் பயன்படுத்திய சொற்களும் வாக்கியங்களும் இந்த விதித் தொகுப்பிலோ அல்லது உரிய சட்டத்திலோ அல்லது மின்சாரம் நுகர்வோர் விதிகளின் உரிமைகள் 2020–லோ அல்லது ஆணையத்தின் வேறு ஏதேனும் ஒழுங்குமுறை விதிகள் அல்லது பொது வாக்கிய பிரிவுகள் (general clause ) சட்டம் 1897–லோ (1897 ஆண்டின் 10–வது மத்திய சட்டம்) வரையறுக்கப்படாத பட்சத்தில் அவைகள் நடப்பில் உள்ள பொறியியல் மற்றும் வணிகவியல் துறைகளின் பேச்சு வழக்கில் புரிந்து கொள்ளப்படும் அதே பொருள்களை குறிக்கும்.”*

**2. ஒழுங்குமுறை விதி 3–இன், (3)–ஆம் உள்ஒழுங்குமுறை விதியில், “அதிகப்படியான” என்ற சொல் நீக்கப்படும்.**

**3. ஒழுங்குமுறை விதி 4 -இல், (2) –ஆம் உள் ஒழுங்குமுறை விதியின் கூறு (xvi) க்கு பிறகு பின்வருபவை புகுத்தப்படும்.**

*“(xvii) பெரும் திரளான ஆய்வு (Mass raid) போன்ற வழக்கமான ஆய்வு அல்லாத, காலமுறை சோதனைக்குண்டான ஆய்வு கட்டணம்.*

*(xviii) மின் நுகர்வோரின் கோரிக்கைக்கு இணங்க தற்காலிக மின் துண்டிப்புக்கான கட்டணம்*

*(xix) சான்றளிக்கப்பட்ட நகல்களை நுகர்வோருக்கு வழங்குவதற்கான கட்டணம்”*

**4. ஒழுங்குமுறை விதி 5 -இல், (2)–ஆம் உள் ஒழுங்குமுறை விதி பின்வருமாறு மாற்றீடு செய்யப்படும், அதாவது :–**

**“ (2) மிகை மின் தேவைக் கட்டணம்**

*ஒப்பளித்த (sanctioned) மின்தேவையை மிஞ்சிவிட்டால் நுகர்வோர் செலுத்த வேண்டிய மிகை மின் தேவைக் கட்டணம் பின்வருமாறு:*

*(i) உ.அ (HT) மின் வழங்கலைப் பொறுத்தவரையில், எம்மாத உச்ச மின்தேவைக் கட்டணமும் மின் வழங்கல் இருப்பிடத்தில் குறிப்பிட்ட அம்மாதத்தில் பதிவாகிய உச்ச கி.வோ.ஆ (kVA) தேவை, அவ்வப்போது ஆணையம் அறிவிக்கும் ஒப்பளித்த மின் தேவையின் விழுக்காடு, இவற்றில் எது அதிகமோ, அதன் அடிப்படையில் அமைய வேண்டும். மிஞ்சி விட்ட தேவைக்கு மட்டுமே இயல்புக் கட்டணத்தைப் போன்று இரு மடங்கு கட்டணத்தைக் கணக்கிட வேண்டும்.*

*(ii) தா. அ (LT) மின் வழங்கலைப் பொறுத்த வரையில்;*

*a) கூடுதல் மின் தேவைக் கட்டணம் வீடு மற்றும் வேளாண்மை மின்னிணைப்புகள் தவிர அனைத்து மின் இணைப்புகளுக்கும் பொருந்தும்.*

*b) வீட்டு மின் இணைப்புகளில் பதிவாகும் மின்தேவை, வழக்கமான மதிப்பீட்டின் போது மதிப்பீடு செய்யப்பட வேண்டும். ஏதேனும் கட்டண சுழற்சியில், வழக்கமான மதிப்பீட்டு தேதியின் முந்தைய 12 மாத காலத்தில், மூன்றாவது முறையாக பதிவான மின் தேவையானது, ஒப்பளித்த மின் தேவையை மிஞ்சினால், பின்வரும் விளக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி முறைப்படுத்தப்படும்.*

c) ஒழுங்குமுறை விதியின்படி மிகை மின் தேவைக் கட்டணம் செலுத்த வேண்டிய வகையினத்துக்குள் உள்ள அனைத்து மின் இணைப்புகளிலும், உரிமம்தாரர் மிகை மின் தேவையைப் பதிவு செய்யும் வசதியுள்ள மின்னளவியை பொருத்தவேண்டும். மிகை மின் தேவையைப் பதிவு செய்யும் வசதியுள்ள மின்னளவியை பொருத்தும் வரை, மிகை மின் தேவை கட்டணம் வசூல் செய்யப்படமாட்டாது.

(d) பல்வேறு வகை நுகர்வோருக்கு பொருந்தக் கூடிய மிகை மின் தேவை கட்டணமானது, கீழே அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளபடி, ஒப்பந்த மின் தேவையை விட மிகையாகவுள்ள ஒவ்வொரு கிலோ வாட்(கி.வா.) அளவுக்கும் அல்லது அதன் பகுதிக்கும் மொத்த மின்னாற்றலுக்கான கட்டணத்தின் சதவீத விழுக்காடு இருக்க வேண்டும்:

| *ஒப்பளித்த மின்தேவை* | *ஒப்பளித்த மின்தேவைக்கு மேல்பதிவான மின்தேவை* | *முதல் நிகழ்வு* | *இரண்டாம் நிகழ்வு* | *மூன்றாம் நிகழ்வு* | *பிந்தைய நிகழ்வுகள்* |
|---|---|---|---|---|---|
| 112 கி.வா. வரை | 112 கி.வா. வரை | 1 % | 1 % | 1 % | 3வது நிகழ்வில் முறைப்படுத்தப்பட்டிருக்க வேண்டும் |
| | 112 கி.வா வுக்கு மேல் 150 கி.வா. வரை | 1.5 % | 1.5 % | 3 % | 3வது நிகழ்வில் முறைப்படுத்தப்பட்டிருக்க வேண்டும் மற்றும் தமிழ்நாடு மின்வழங்கல் விதித் தொகுப்பு ஒழுங்குமுறை விதி 3(1) (b) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளும் பொருந்தும் |
| 112 கி.வா வுக்கு மேல் 150 கி.வா. வரை | 150 கி.வா. வரை | 1 % | 1 % | 1 % | 3வது நிகழ்வில் முறைப்படுத்தப்பட்டிருக்க வேண்டும் |
| | 150 கி.வா. வுக்கு மேல் | 1 % | 1.5 % | 3 % | 10 % (உ.அ. மின் இணைப்பு பெறும் வரை) |

**விளக்கம் :**

1. "மொத்த மின்னாற்றல் கட்டணங்கள்" என்பது நிலையான / மின்தேவைக் கட்டணங்கள் மற்றும் மின்னாற்றல் கட்டணங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய மொத்த மின்னாற்றல் வழங்கப் பட்டமைக்கான கட்டணங்களாகும்.

2. மேலே உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முதல், இரண்டாவது, மூன்றாவது மற்றும் அதன் பின் ஏற்படும் நிகழ்வுகள், எந்தவொரு மதிப்பீடு சுழற்சியின் வழக்கமான மதிப்பீட்டின் தேதிக்கு முந்தைய 12 மாதங்களுக்குள் நிகழ்ந்த நிகழ்வுகளைக் குறிக்கும். இந்த காலகட்டம் தொடங்குவதற்கு முன்பு கடந்த காலத்தில் நடந்த மறுநிகழ்வுகளின் எண்ணிக்கையை கணக்கிலெடுக்காமல், பன்னிரெண்டு மாதங்களுக்குள் நடந்த முதல் நிகழ்விலிருந்து மட்டுமே நிகழ்வுகளின் எண்ணிக்கை தொடங்கும்.

3. ஒப்பளித்த மின் தேவைக்கு மேல் மிகை மின்தேவை பதிவாகும் முதல் மற்றும் இரண்டாவது நிகழ்வுகளில் பதிவாகும் மின்தேவையை ஒப்பளித்த மின்தேவைக்குள் கட்டுப்படுத்தும்படி மின்உரிமம்தாரர், மின் நுகர்வோருக்கு ஒரு அறிவிப்பை வழங்க வேண்டும். மின் நுகர்வோருக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும், சரியான நேரத்தில் தீர்வு நடவடிக்கைகளை எடுக்க உணர்த்துவதற்கும், ஏற்றவாறு இந்த உள் ஒழுங்குமுறை விதி தொகுப்பில் அனைத்து விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளும் அறிவிப்பில் அடங்கியிருக்க வேண்டும்.

4. மின்நுகர்வோர், ஒப்பளித்த மின் தேவைக்குள் பதிவாகும் மின் தேவையை கட்டுப்படுத்தவும், மீண்டும் நிகழாமல் தடுக்கவும், உரிய நேரத்தில் தீர்வு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

5. மூன்றாவது நிகழ்வின் போது, மிகை மின் தேவைக் கட்டணம் மதிப்பீடு செய்வதுடன், ஒப்பளித்த மின்தேவையானது பதிவான மின்தேவையளவின் அடுத்த கி.வா. க்கு வட்டமாக கணக்கிடப்பட்டு மாற்றியமைக்கப்படும்.

வீட்டு மின்நுகர்வோருக்கு, மிகை மின் தேவைக் கட்டணம் எந்த நிகழ்வுக்கும் பொருந்தாது. ஆயினும், மூன்றாவது நிகழ்வின் போது, தற்போதுள்ள ஒப்பளித்த மின்தேவை அளவை, மூன்றாவது நிகழ்வின் போது, பதிவான மின் தேவையின் அளவிற்கு அடுத்த கி.வா. க்கு வட்டமாக கணக்கிடப்பட்டு மாற்றியமைக்கப்படும்.

மேலே உள்ள அனைத்து வகைகளிலும், மூன்றாவது நிகழ்வின் போது பதிவான மின்தேவை அடுத்த கி.வா. க்கு வட்டமாக கணக்கிட்டு முறைப்படுத்தப்பட்டவுடன், மிகையாகிவிட்ட மின் தேவையின் அளவிற்கான வளர்ச்சிக் கட்டணங்களை, அடுத்த கணக்கீட்டில் சேர்க்கப்பட்டு, கணக்கிடப்பட்ட மிகை மின் தேவை கட்டணம், பதிவான மின்தேவை அளவிற்கு மின்தேவையை முறைப்படுத்துதல் மற்றும் வளர்ச்சி கட்டணம் ஆகிய விவரங்களடங்கிய அறிவிப்பை மின் நுகர்வோருக்கு வழங்கப்பட வேண்டும்.

6. மிகையான மின் தேவையை முறைப்படுத்துவதற்கு தேவைப்படும் உள்கட்டமைப்பு வளர்ச்சிப்பணிகள் மின் உரிமம்தாரரால் மேற்கொள்ளப்படும்.

7. மிகையான மின் தேவை பதிவான மூன்றாவது நிகழ்வின் போது நடைமுறையில் உள்ள வளர்ச்சிக் கட்டணங்கள் மட்டுமே செலுத்தப்பட வேண்டியதாகும்.

8. பன்னிரெண்டு மாத காலத்தில் மூன்றாவது முறையாக பதிவான தேவை 150 கி.வா. ஐத் தாண்டினால், மிகை மின் தேவைக்கட்டணத்தை வசூலிப்பதோடு, மூன்றாவது நிகழ்வின் போது பதிவான அதிகபட்ச மின் தேவையின் அளவிற்கான அனைத்து கட்டணங்களையும் குறிப்பிட்டு தாழ்வழுத்த மின்னிணைப்பை, உயர் அழுத்த மின் இணைப்பாக மாற்றுவதற்கு 'ஒரு மாத கால அறிவிப்பை' உரிமம்தாரர் மின் நுகர்வோருக்கு வழங்க வேண்டும்.

9. உயர் அழுத்த மின் இணைப்பிற்கு மாறும் வரை, ஒப்பளித்த மின் தேவை 150கி.வா. அளவிற்கு மறு நிர்ணயம் செய்யப்படும். மூன்றாவது நிகழ்வுக்குப் பிறகு அனைத்து பிந்தைய நிகழ்வுகளும் அடுத்து வரும் 12 மாத கால அளவுகளிலும் ஒட்டுமொத்தமாக கணக்கிடப்படும். அதன்படி, மூன்றாவது நிகழ்விற்குப் பிறகு 150கி.வா. தாண்டிய ஒவ்வொரு நிகழ்விலும் 10% அளவுக்கு மிகைமின்தேவை கட்டணம், உயர் அழுத்த மின் இணைப்பு பெறும்வரை செலுத்தப்பட வேண்டும்.

10. இந்த உள் ஒழுங்குமுறை விதியின் கீழ் புதிதாக கொண்டு வரப்படும் அனைத்து மின்னிணைப்புகளுக்கும் இந்த உத்தரவு அறிவிக்கப்பட்ட தேதி அல்லது மின் தேவை பதிவு வசதியுடன் கூடிய மின்னளவி நிறுவப்பட்ட தேதி, எது பிந்தையதோ, அதற்குப் பிறகுதான் தொடர்புடைய வரைமுறைகள் பொருந்தும்.

11. இந்த ஒழுங்குமுறை விதித் தொகுப்பின் அறிவிக்கைக்கு முன்னர் கடந்த காலத்தில் பதிவான மின்தேவை ஒப்பளித்த மின்தேவையை விட அதிகமாகி பின்னர் ஒப்பளித்த மின்தேவையில் திரும்பி தொடர்ந்து பன்னிரெண்டு மாதங்களுக்கு நிலைத்து இருந்து, இந்த அறிவிக்கை வெளியிடப்பட்ட தேதியில் முறைப்படுத்தப்படாமல் இருக்கும் மின்னிணைப்புகள், ஒப்பளித்த மின்தேவையில் தொடரலாம்.

(iii) தற்காலிக மின்னிணைப்புகளில், உ.அ. / தா.அ. மின் விநியோகத்திற்கான மிகைமின் தேவைக் கட்டணங்கள், உள் ஒழுங்குமுறை விதித்தொகுப்பு கூறு (i) மற்றும் (ii) ல் குறிப்பிடப்பட்டுள்ளபடி இருக்கும்.

(iv) எவ்வகை மின்னிணைப்பிலும், மின்தேவை கூட்டுவதற்கோ அல்லது குறைப்பதற்கோ, அதே மின்னிணைப்பில் அல்லது அந்த மின்நுகர்வோரின் மற்ற மின்னிணைப்பில் நிலுவைத்தொகை இருந்தால், ஒப்பளிப்பு வழங்கப்படமாட்டாது.

(v) மேற்கூறிய அனைத்து நிகழ்வுகளிலும், மின் தேவையை கூட்டுதல் / குறைத்தல் / முறைப்படுத்துதல் ஆகியவற்றிற்காக மின் சாதனங்கள் / மின் தொடர் / மின் அளவீட்டு அமைப்பில் மேற்கொள்ளப்படும் மாற்றங்களின் செலவுகள், சட்டம் மற்றும் விதித்தொகுப்பு / ஒழுங்குமுறை விதிகளின் வரைமுறைகளின்படி கையாளப்படும்.''

**5. ஒழுங்குமுறை விதி 5–இன், உள் ஒழுங்குமுறை விதி (5) இல், கூறு (v) பின்வருமாறு மாற்றீடு செய்யப்படும், அதாவது:–**

''(v) மீள்பார்வையின் போது இருப்பிலுள்ள காப்புவைப்புத் தொகை தேவைக்கும் மிகையாக இருப்பது கண்டறியப்பட்டால் எதிர்கால மின்வழங்கலுக்கான இரு பட்டியல்களில் அத்தொகை சரிகட்டப்பட்டு வரவு வைக்கப்படும். அவ்வாறு அத்தகைய இரண்டு பட்டியல்களில் சரிகட்டிய பிறகும் திருப்பித் தரப்படவேண்டிய மீதித் தொகை இருந்தால், அது காசோலையாகவோ அல்லது மின்நுகர்வோர் வங்கி கணக்கு விவரங்கள் தெரிவித்திருந்தால், வங்கிக் கணக்கில் நேரடியாகவோ செலுத்தி மின்நுகர்வோருக்கு தெரிவித்து மூன்றாம் தேவைப்பட்டியல் தொகையைக் கட்ட வேண்டிய காலக் கெடுவுக்குள் நுகர்வோருக்கு அனுப்பி வைக்கப் படவேண்டும். வேறு எந்த ஆவணங்களும் தேவையில்லை. மிகையான காப்பு வைப்பு தொகையை எதிர்கால இரு பட்டியல்களில் சரிகட்ட கோரி மின் நுகர்வோரிடமிருந்து வேண்டுகோள் பெறப்படுமானால், மின் பகிர்மான உரிமம்தாரர் அத்தகைய வேண்டுகோளுக்கு இணங்கவேண்டும்.''

**6(a) ஒழுங்குமுறை விதி 5–இன், உள் ஒழுங்குமுறை விதி (5)–இன் கூறு (vii)(a) இல், "இணைப்பு–III" என்ற சொல் "பின்னிணைப்பு–III" என்று மாற்றீடு செய்யப்படும்,**

**6(b) ஒழுங்குமுறை விதி 5 இன், உள் ஒழுங்குமுறை விதி (5) இன் கூறு (vii)(b) இல், "இணைப்பு–III" என்ற சொல் "பின்னிணைப்பு–III" என்று மாற்றீடு செய்யப்படும்,**

**6(c) ஒழுங்குமுறை விதி 5 இன், உள் ஒழுங்குமுறை விதி (5) இன் கூறு (vii)(c) இல், "இணைப்பு–III" என்ற சொல் "பின்னிணைப்பு–III" என்று மாற்றீடு செய்யப்படும்,**

**7. ஒழுங்குமுறை விதி 5–இல், உள் ஒழுங்குமுறை விதி (12), பின்வருமாறு மாற்றீடு செய்யப்படும், அதாவது:–**

''(12) விண்ணப்பப் பதிவுக் கட்டணம்.

உரிமம்தாரர் நுகர்வோர்களிடமிருந்து, ஆணையம் அவ்வப்போது குறிப்பிடும் வீதங்களில் பின்வரும் விண்ணப்பப்பதிவுக் கட்டணங்களை வசூலிக்க வேண்டும்.

(a) தாழ்வழுத்த / உயர் அழுத்த மின் இணைப்பு விண்ணப்பங்கள்.

(b) தாழ்வழுத்த / உயர் மின் அழுத்த இணைப்புகளுக்கு கூடுதல் / குறைவுதிறன் விண்ணப்பங்கள்.

(c) தற்காலிக மின் இணைப்பிற்கான விண்ணப்பம்.

(d) தாழ்வு மின் அழுத்தத்திலிருந்து உயர் மின் அழுத்தத்திற்கான அல்லது மறுதலையான மாற்றத்திற்கான விண்ணப்பங்கள்.

(e) காப்புத் தொகை பங்களிப்பு முறையில் உயர் / தாழ்வு மின் இணைப்பு மாற்ற விண்ணப்பம்.

(f) காப்புத் தொகை பங்களிப்பு வேலைகள் மூலம் உயர் / தாழ்வு அழுத்த கம்பி / கட்டுமானம் / உபகரணங்கள் இடம் பெயர்வதற்கான விண்ணப்பம்.

(g) மின் கட்டண வீதமாற்றத்திற்கான விண்ணப்பம்.

(h) மூன்றாம் தரப்பினரால் வாகனங்கள் மோதியது போன்றவற்றினால் சேதமடைந்த உரிமம்தாரரின் சொத்துகளை பழுதுபார்ப்பதற்கு அல்லது மாற்றுவதற்கான காப்பு தொகை பங்களிப்பு பணிகளின் கீழ் விண்ணப்பம்''

**8. ஒழுங்குமுறை விதி 7–இல், உள் ஒழுங்குமுறை விதிகள் (1), (2), (3) & (3A) பின்வருமாறு மாற்றீடு செய்யப்படும், அதாவது:–**

'' **(1)** மின்னளவி இல்லாமல் புதிய மின்னிணைப்பு தரப்படாது. அனைத்து தா.அ. மின் இணைப்புகளிலும் மின்தேவை பதிவிடும் வசதியுள்ள மின்னளவியை மின் உரிமம்தாரர் நிறுவவேண்டும்.

(2) புதிய / தற்காலிக மின்னிணைப்பு கோரும்போது, நிர்ணயிக்கப்பட்ட தரநிலைகள், விவரக் குறிப்புகள் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட ஒழுங்குமுறை விதிகளின்படியுள்ள ஒரு மின்னளவியை விண்ணப்பதாரர் தாமாக கொள்முதல் செய்யவோ அல்லது மின் உரிமம்தாரரிடம் இருந்து பெற்றுக் கொள்ளவோ அவருடைய விருப்பப்படி தேர்ந்தெடுக்கலாம். மின்நுகர்வோர் தானே சொந்த மின்னளவியை கொள்முதல் செய்ய தேர்ந்தெடுக்காத வரை, உரிமம்தாரர் சட்டப் பூர்வ தரநிலைகள் மற்றும் தொடர்புடைய ஒழுங்குமுறை விதிகளுக்கு இணங்க மின்னளவியை பொருத்தி, மின்னளவியின் விலைகேற்ப வைப்புத் தொகையினையும், தேவைக்கேற்ப வாடகை கட்டணத்தையும் மின் நுகர்வோரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். மின்நுகர்வோர் தானே சொந்த மின்னளவியை கொள்முதல் செய்ய தேர்ந்தெடுக்கும்போது, அந்த மின்னளவி நிர்ணயிக்கப்பட்ட தரநிலைகள், விவரக்குறிப்புகள் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட ஒழுங்குமுறை விதிகளின்படி உள்ளதை மின் உரிமம்தாரர் உறுதி செய்ய வேண்டும்.

தேவையான மின்னளவிகளை உற்பத்தியாளரின் இடத்தில் உரிமம்தாரரால் சோதிக்கப்பட்டு அவற்றின் வரிசை எண்களை முறையாகப் பதிவு செய்யப்பட்டு பாதுகாப்பு முத்திரையிடப்படும். சோதனை செய்யப்பட்டு முறையாக வரிசை எண் பதிவுசெய்யப்பட்ட மின்னளவிகள் திறந்த சந்தையில் கிடைக்கும்படி செய்ய வேண்டும். வரிசை எண்களின் விவரங்கள், தயாரிப்பு, திறன் மற்றும் விற்பனையாளர் விவரங்கள் மின் நுகர்வோரின் தகவலுக்காக உரிமம்தாரரின் இணைய தளத்தில் வெளியிட வேண்டும். அனைத்து வகையான மின்னளவிகளும் தேவையான அளவு எல்லா நேரத்திலும் சந்தையில் இருக்குமாறு செய்யவேண்டும். சந்தையில் இருந்து விண்ணப்பதாரரால் கொள்முதல் செய்யப்பட்ட மின்னளவிகள் மீண்டும் சோதிக்கப்பட வேண்டிய அவசியமின்றி நேரடியாக நிறுவப்படலாம்.

மின்னளவி உற்பத்தியாளர், கண்காணிப்பு மற்றும் பதிவு செய்யும் மென்பொருள் வழியாக அனைத்து புதிய பாதுகாப்பு முத்திரைகளையும் உற்பத்தி, கொள்முதல், சேமிப்பு, பதிவேடு வைத்தல், நிறுவுதல், தொடர் ஆய்வுகள், அகற்றுதல் மற்றும் அப்புறப்படுத்துதல் ஆகிய பல்வேறு நிலைகளில், அதன் மொத்த நகர்வுகளோடு நிலைகளை கண்காணிக்க வகை செய்திடல் வேண்டும். காப்புரிமை பெற்ற இலச்சினைகள் (இலச்சினைகள் உற்பத்தி செய்ய அதிகாரப்பூர்வ உரிமை உள்ள உற்பத்தியாளரின் இலச்சினைகள் (முத்திரைகள்)) மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். மின்உரிமம்தாரரின் அமைப்பிலிருந்து நிரந்தரமாக நீக்கப்பட்ட பின்னர் மட்டுமே, மின்நுகர்வோர் தாமே கொள்முதல் செய்த மின்னளவியை தனது சொத்தாகக் கோர முடியும்.

வகையின பயன்பாட்டின் மின் தேவைக் கேற்ற வகை, ஒரு முனை / மும்முனை திறன் மதிப்பீடு, அங்கீகரிக்கப்பட்ட மின்னளவி உற்பத்தியாளர்களின் பட்டியல் மற்றும் நுகர்வோர் அவற்றை வாங்கக்கூடிய இடங்களின் தகவல்களுடன் விவரக்குறிப்பு ஆகியவற்றைப் பற்றி உரிமம்தாரர், தங்கள் இணையதளத்தில் வெளியிட்டு, தொடர்ந்து புதுப்பிக்க வேண்டும். இது தா.அ., மின்னோட்ட மாற்றி பொருத்தப்பட்ட தா.அ., உ.அ., LTCT, இறுதிசை அளவீடு, சூரிய மின்னுற்பத்தி, முன்பணம் செலுத்தும் அளவீடு, ToD அளவீடு போன்ற அனைத்து வகைகளையும் நிரந்தர அடிப்படையில் எத்தகைய கட்டுப்பாடுகளின்றி ஒரு பிரிவு / வட்டம் போன்றவற்றால், வாங்குவதற்கான கால அளவு அல்லது மின்னளவியின் அளவு கட்டுபாடின்றி நிரந்தர அடிப்படையில் இருக்க வேண்டும்.

(3) அதிக மின் நுகர்வு / வருவாய் மின் இணைப்புகளுக்கு முன்னுரிமை அளித்து, அதிநவீன முன் பணம் செலுத்தும் (smart pre-paid) அல்லது முன் பணம் (pre-paid) சேவை வசதியுள்ள மின்னளவியைப் படிப்படியாக வழங்க உரிமம்தாரர் முயற்சிக்க வேண்டும். அனைத்து மத்திய / மாநில அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்பு மின்னிணைப்புகளுக்கு முன்பணம் செலுத்தும் வசதியுடன் கூடிய அதிநவீன மின்னளவிகள் வழங்கப்பட வேண்டும். தகவல் தொடர்பு கட்டமைப்பு இல்லாத பகுதிகளில், முன் பணம் செலுத்தும் மின்னளவிகள் வழங்கப்பட வேண்டும். தற்காலிக மின்னிணைப்புகளில், முன்பணம் செலுத்தும் மின்னளவி (மீள்நிரப்பு அட்டை வடிவம்) பொறுத்தப்பட வேண்டும். முன்பணம் செலுத்தும் மின்னளவிகளுக்கு, காப்பு வைப்புத் தொகை செலுத்த தேவையில்லை.

(3A) திறந்த நுழைவுரிமை மின்நுகர்வோரைப் பொறுத்தவரை, மின் சக்தியை இறக்குமதி செய்தல் மற்றும் ஏற்றுமதி செய்தல் மற்றும் மின்கட்டண வகைப்பாட்டின் தேவைக்கேற்ப பிற அளவுருக்களை பதிவு செய்யும் வசதிகளுடன் செயலாற்றும் இடைமுக மின்னளவியானது (interface meter), மின்உற்பத்தியாளர் மற்றும் மின்நுகர்வோர் இடங்களில் மற்றும் தேவையான மற்ற இடங்களில் பொருத்த வேண்டும். மின்னளவிகள் அவ்வப்போது திருத்தப்படும் மத்திய மின்சார அதிகார அமைப்பு (மின்னளவிகள் நிறுவுதல் மற்றும் இயக்குதல்) விதிமுறைகள், 2006–ல் விதிக்கப்பட்டுள்ள தரநிலைகள் மற்றும் விவரக்குறிப்புகளுக்கு இணங்க வேண்டும்.''

**9. ஒழுங்குமுறை விதி 7–இன், உள் ஒழுங்குமுறை விதி (7) இல், கூறு (i) பின்வருமாறு மாற்றீடு செய்யப்படும், அதாவது:–**

"(ii) இந்த ஒழுங்குமுறை விதித் தொகுப்பின் உள் ஒழுங்குமுறை விதி 3(1)(b) இன் படி, 112kW க்கும் அதிகமான தா.அ. மின்னிணைப்புகளுக்கு மேற்கூறிய சூத்திரத்தை பயன்படுத்தும் போது அல்லது மின் வழங்கும் மின்மாற்றியின் திறன் தனிப்பட்ட நுகர்வோரின் ஒப்பந்த தேவையை பூர்த்தி செய்ய தேவையான திறனை விட அதிகமாக இருக்கும் போது, மேற்கூறிய சூத்திரத்தில் 'C' என குறிப்பிடப்படும் மின்மாற்றியின் கி.வோ.ஆ. மதிப்பீடு, உரிமம்தாரரால் தனிநபரின் ஒப்பந்தத் தேவையின் அளவைப் பூர்த்தி செய்யத் தேவைப்படும் மின்மாற்றியின் குறைந்த மின் திறன் அளவிற்கு குறைக்கப்படும்.

மின்நுகர்வு பதிவாகவில்லையென்றாலும் கூட மேற்சொன்ன சூத்திரத்தில் கணக்கிடப்பட்ட இழப்பை மின் நுகர்வுடன் கூட்டிக் கொள்ளப்படும்.''

**10. ஒழுங்குமுறை விதி 7–இல், உள் ஒழுங்குமுறை விதி (9) பின்வருமாறு மாற்றீடு செய்யப்படும், அதாவது:–**

"(9) ஒரு மின்நுகர்வோர் மின்னளவி பழுதுள்ளதாகக் கருதினால் அல்லது மீட்டர் அளவீடுகள் தனது மின்நுகர்வுக்கு ஏற்ப இல்லை என கருதினால், அவர் உரிமம்தாரரின் ஆய்வகத்தில் தனது மின்னளவியினை சோதிக்கும்படி உரிமம்தாரருக்கு விண்ணப்பிக்கலாம். அந்த சோதனையானது 30 நாட்களுக்குள் உரிமம்தாரரால் மேற்கொள்ளப்பட வேண்டும். சோதனைக்கான செலவை, அத்தகைய சோதனையின்போது மின்னளவி பழுதுற்று உள்ளதா அல்லது சரியாக உள்ளதா என்பதைப் பொருத்து, முறையே, உரிமம்தாரர் அல்லது நுகர்வோர் ஏற்க வேண்டும்.

மின்பகிர்மான உரிமம்தாரர், அத்தகைய சோதனை செய்யும் காலத்தில் மின்நுகர்வோர் அவ்விடத்தில் இருப்பதற்கு ஏதுவாக சோதனைக்கான தேதி மற்றும் நேரத்தை மின் நுகர்வோருக்கு தெரிவிக்க வேண்டும். சோதனைக்குப் பிறகு, உரிமம்தாரர் மற்றும் மின் நுகர்வோர் ஆகிய இருவரும் முறையாக கையொப்பமிட்ட சோதனை அறிக்கையின் நகலை மின் நுகர்வோருக்கு வழங்கி, ஒரு நகலை ஒப்புதல் பெற்று வைத்திருக்க வேண்டும். எனினும், மின்நுகர்வோர் சோதனைக்காக தளத்தில் இருக்க விருப்பம்

தெரிவிக்கவில்லை எனில், மின்பகிர்மான உரிமம்தாரர் அத்தகைய சோதனையை மேற்கொண்டு, அறிக்கையின் நகலை மின் நுகர்வோருக்கு அனுப்பவேண்டும். அத்தகைய சோதனையின் முடிவுகளை நுகர்வோர் மறுத்து, அத்தகைய சோதனைக்கான கட்டணங்களை ஏற்றுக்கொள்வதன் மூலம் மூன்றாம் தரப்பினரால் மறு–சோதனை கோரினால், உரிமம்தாரர் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட NABL அங்கீகாரம் பெற்ற மூன்றாம் தரப்பு சோதனை முகமைகளின் பட்டியலில் உள்ள சோதனை ஆய்வகத்தில் சோதனையை மேற்கொள்ள வேண்டும். பிழைகள் குறிப்பிடப்பட்ட வரம்புகளுக்கு அப்பாற்பட்டதாகவும், மின்பகிர்மான உரிமம்தாரர் செய்த சோதனையின் முடிவுகளுக்கு முரணாக இருப்பதாகவும் கண்டறியப்பட்டால், மின்பகிர்மான உரிமம்தாரரின் சோதனை ஆய்வகத்திலும் மற்றும் மூன்றாம் தரப்பு சோதனை ஆய்வகத்திலும் சோதனைகளை மேற்கொள்வதற்கான செலவுகள் மின்பகிர்மான உரிமம்தாரரால் திருப்பிச் செலுத்தப்படும். எனினும், சோதனையின் முடிவுகளும் மின்பகிர்மான உரிமம்தாரர் செய்த சோதனையின் முடிவுகளும் ஒன்றே என்று முடிவானால், அத்தகைய சோதனையை மேற்கொள்வதற்கான செலவு நுகர்வோரால் ஏற்றுக்கொண்டதாக கருதப்படும். மின்னளவி தரவு மற்றும் சோதனை முடிவுகள் மின்நுகர்வோருக்கு வழங்கப்பட்ட பிறகு கூறப்பட்ட முடிவுகள் இறுதியானது மற்றும் மின்நுகர்வோர் மற்றும் மின்பகிர்மான உரிமம்தாரர் இருவரையும் கட்டுப்படுத்த கூடியதும் ஆகும்.

ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட மூன்றாம் தரப்பு சோதனை முகமைகளின் அங்கீகரிக்கப்பட்ட பட்டியல் பல்வேறு மின்பகிர்மான அலுவலகங்களிலும் மின்பகிர்மான உரிமம்தாரரின் இணையதளத்திலும் இருத்தல் வேண்டும்.''

**11. ஒழுங்குமுறை விதி 7–இல், உள் ஒழுங்குமுறை விதி (10) பின்வருமாறு மாற்றீடு செய்யப்படும், அதாவது:–**

***'' (10) பழுதுற்ற, சேதமுற்ற, எரிந்த மின்னளவிகளைப் பதிலிட வேண்டிய வழி முறைகள் பின்வருமாறு:.***

(i) உரிமம்தாரர் அனைத்துப் பழுதுற்ற மின்னளவிகளையும் தனது செலவில் மாற்றப் பொறுப்புடையவராவர். மின்நுகர்வோரின் புகாரின் பேரில் அல்லது மின்பகிர்மான உரிமம்தாரர் ஆய்வு செய்தபின், பதிவு நிறுத்தம், காட்சித்திரை நிறுத்தம், முத்திரை சேதம், எரிதல் அல்லது மின்னளவிக்கு சேதம் போன்ற குறைபாடுகள் உள்ள மின்னளவிகள், ஆணையத்தால் குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் மாற்றப்பட்டு ஒரு புதிய மின்னளவி மூலம் மின்விநியோகத்தை மீட்டுத்தரல் வேண்டும். கழற்றப்பட்ட குறைபாடுள்ள மின்னளவிகள் உரிமம்தாரரின் ஆய்வகத்தில் 30 நாட்களுக்குள் சோதிக்கப்படவேண்டும். சாத்தியமான இடங்களில், தரவு பதிவிறக்கம் செய்யப்பட வேண்டும். அனைத்து குறைபாடுள்ள மின்னளவிகளின் பதிவுகளும் அத்தகைய சோதனை முடிவுகளின் தொடர்புடைய ஆவணங்களுடன் இணைக்கப்பட வேண்டும். பதிவிறக்கம் செய்யப்பட்ட மின்னளவி அளவீடுகள் மற்றும் பட்டியலிடல் தொடர்பான பிற முக்கியமான தரவு ஆவணப்படுத்தப்படும். உரிமம்தாரரின் ஆய்வகத்தில் சோதனை செய்யப்படாமல் குறைபாடுள்ள மின்னளவிகள் எதுவும் கிடங்கில் ஒப்படைக்கப்படமாட்டாது.

(ii) மின்னளவியினைப் பத்திரமாக காக்கும் பொறுப்பு நுகர்வோரை சார்ந்ததால், சேதமுற்ற மின்னளவியை மாற்றும் பணி நுகர்வோர் செலவில் செய்யப்பட வேண்டும்.

(iii) மின்னளவி எரிந்ததற்கான காரணம் நுகர்வோரே என நிரூபனம் செய்யப்படாதவரையில் எரிந்த மின்னளவிகளை மாற்றிட வேண்டியது உரிமம்தாரரின் பொறுப்பாகும்.

விசாரணைக்குப் பிறகு, மின்நுகர்வோர் தொடர்புடைய காரணங்களால் மின்னளவி பழுதடைந்திருப்பது அல்லது எரிந்திருப்பது கண்டறியப்பட்டால், புதிய மின்னளவியின் விலை மற்றும் பிற நிறுவக்கூடிய கட்டணங்கள் மின் நுகர்வோரிடமிருந்து அடுத்தடுத்த பட்டியலின் மூலம் வசூலிக்கப்படும். மின் நுகர்வோர் தெரிவிக்கும் போது அல்லது உரிமம்தாரர் பார்வையிடும்போது மின்னளவி பழுதடைந்ததாகவோ அல்லது எரிந்ததாகவோ கண்டறியப்பட்டால், மின் நுகர்வோரிடமிருந்து கட்டணம் எதுவும் வசூலிக்கப்படாது.

பழுதடைந்த / எரிந்த மின்னளவியை மாற்றுவதற்குக் கூறப்பட்ட கட்டணங்கள் தவிர, குறைபாடு உள்ள அல்லது தவறான நுகர்வுப் பதிவின் காலத்திற்கு தேவையான பட்டியல் திருத்தம், இந்த விதித்தொகுப்பின் வரைமுறைகளின்படி மேற்கொள்ளப்பட்டு, சோதனை முடிவுகள் மற்றும் கணக்கிடும்முறையுடன் எழுத்துப் பூர்வ தகவல்களை மின்நுகர்வோருக்கு அளித்து, மிகுதியான அல்லது குறைவான கட்டணங்கள் அடுத்தடுத்த பட்டியல்களில் நிலுவையில் சரி செய்யப்படும்.

பழுதடைந்த மின்னளவிகளை உரிய நேரத்தில் மாற்றுவதற்கு மின் உரிமம்தாரர் ஒவ்வொரு பிரிவு அலுவலகங்களிலும் தேவைக்கேற்ப சுழற்சிமுறையில் மின்னளவிகளை இருப்பு வைத்திருக்க வேண்டும்.

(iv) நுகர்வோர் தனது சொந்த மின்னளவியையே தொடர்ந்து வைத்திருக்கத் தீர்மானித்தால் அல்லது தேர்ந்தெடுத்தால் அவரது உரிமையிலிருந்த மின்னளவி பழுதுற்றாலோ, சேதமடைந்தாலோ, நுகர்வோரைச் சார்ந்த காரணங்களால் மின்னளவி எரிந்துவிட்டாலோ அந்த மின்னளவியை மாற்ற வேண்டியது நுகர்வோரின் பொறுப்பாகும். அப்படியல்லாவிட்டால், உரிமம்தாரர் மின்னளவியை மாற்றி விட்டு குறிப்பிட்ட வைப்புத் தொகைகள் / நிர்ணயிக்கப்பட்ட தொகைகளை மின்நுகர்வோரிடம் வசூலிக்க வேண்டும். ''

**12. ஒழுங்குமுறை விதி 7–இல், உள் ஒழுங்குமுறை விதி (10) க்குப் பிறகு, பின்வரும் உள் ஒழுங்குமுறை விதி புகுத்தப்படும், அதாவது:–**

''(11) ஒருமுனை மின்னளவிகளில் மின்நுகர்வோர் பக்க மின் அமைப்பில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மின்நுகர்வோரின் பேஸ் அல்லது நியூட்ரல் மின் கம்பிகள் பொதுவானதாகவோ அல்லது ஒன்றோடு ஒன்று இணைக்கப்பட்டோ, இல்லா வண்ணம் மின்நுகர்வோர் உறுதிசெய்திடல் வேண்டும். பொதுவானதாகவோ அல்லது ஒன்றோடு ஒன்று இணைக்கப்பட்டோ, பேஸ் அல்லது நியூட்ரல் மின் கம்பிகள் இருப்பது உரிமம்தாரின் பார்வைக்கு வருமானால் அல்லது எர்த் கசிவு அறிகுறிகள் மின்னளவியில் காணப்பட்டால், சரியான மின்நுகர்வு பதிவுசெய்வதற்கு ஏற்ப அத்தகைய பிழையினை சரிசெய்ய வேண்டி உரிமம்தாரரால் எழுத்துப்பூர்வமாக மின்நுகர்வோருக்கு தெரிவிக்க வேண்டும். ''

**13. ஒழுங்குமுறை விதி 8–இல், உள் ஒழுங்குமுறை (2) க்குப் பிறகு, பின்வரும் உள் ஒழுங்குமுறை விதி (3) புகுத்தப்படும், அதாவது: –**

''(3) மின்பகிர்மான உரிமம்தாரரின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியால் நகர்ப்புறம் மற்றும் கிராமப்புறங்களில், ஒவ்வொரு பட்டியலிடல் சுழற்சி முறையிலும் ஒரு முறையாவது மின்னளவியின் அளவு எடுக்கப்படவேண்டும். அத்தகைய காலகட்டத்தின்

வழக்கமான மதிப்பீட்டில் தற்போதுள்ள மின்னிணைப்புகள், முந்தைய பட்டியலிடல் சுழற்சியில் வழங்கப்பட்ட புதிய மின்னிணைப்புகள் மற்றும் துண்டிக்கப்பட்ட மின்னிணைப்புகள் போன்ற அனைத்து மின்னிணைப்புகளின் தற்போதைய நிலைகள் பதியப்பட வேண்டும். நவீன மின்னளவிகளில் (smart meter), ஒவ்வொரு பட்டியலிடல் சுழற்சி முறையிலும் ஒரு முறையாவது தொலைவிலிருந்து (remote) மின்னளவியின் அளவு எடுத்தல் வேண்டும். மற்ற முன்பணம் செலுத்தும் மின்னளவிகளில் மூன்று மாதங்களுக்கு ஒரு முறையாவது மின்பகிர்மான உரிமம்தாரரின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியால் மின்னளவியின் அளவு எடுத்தல் வேண்டும். தொலைநிலை மதிப்பீடு மற்றும் பட்டியலிடல் தொடர்பான தரவு, இணையதளம் அல்லது கைபேசி செயலி அல்லது குறுஞ்செய்தி மூலம் மின் நுகர்வோருக்குக் கிடைக்கும் படி செய்ய வேண்டும். நவீன முன் பணம் கட்டும் மின்னளவிகளைக் கொண்ட மின்நுகர்வோர் தங்கள் மின் அளவைச் சரிபார்க்க தேவையான தரவு அணுகல் வசதியை வழங்க வேண்டும். ”

**14. ஒழுங்குமுறை விதி 8–இல், தற்போதுள்ள உள் ஒழுங்குமுறை விதி (4), நீக்கப்படும்.**

**15. ஒழுங்குமுறை விதி 8–இல், உள் ஒழுங்குமுறை விதி (5) பின்வருமாறு மாற்றீடு செய்யப்படும், அதாவது:–**

“தாழ்வு அழுத்த மின்னிணைப்புகளைப் பொருத்தவரையில், மின்னளவுகள் எடுத்த பிறகு, மின்னளவுகளின் விவரங்களும், நுகர்வு அளவும் செலுத்த வேண்டிய கட்டணமும் நுகர்வோர் அட்டையில் குறிக்கப்பட வேண்டும்.

மின்னளவி அளவீடுகள், நுகர்வு அளவு, செலுத்த வேண்டிய கட்டணங்கள் மற்றும் கட்டணம் செலுத்துவதற்கான கடைசி தேதி போன்ற விவரங்கள் நுகர்வோருக்கு குறுஞ்செய்தி மற்றும் அஞ்சல் மூலம் பதிவு செய்யப்பட்ட கைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரிக்கு முறையே அனுப்பப்பட்டால், அத்தகைய தகவல் தொடர்பு இந்த ஒழுங்குமுறை விதித்தொகுப்பின் கீழ் உள்ள விதிகள் 8, 13 மற்றும் 14 ல் வரைமுறைகளின் படி பட்டியல் மற்றும் அறிவிப்பாக கருதப்படும்.

எந்த காரணத்திற்காகவும் மின் துண்டிக்கப்பட்டதற்கான தகவல் குறுஞ்செய்தி மூலம் நுகர்வோருக்கு துண்டிக்கப்பட்ட தேதி, இறுதி மின் அளவு, துண்டிக்கப்பட்டதற்கான காரணம் போன்ற விவரங்களுடன் தெரிவிக்கப்படும். ”

**16. ஒழுங்குமுறை விதி 8–இல், உள் ஒழுங்குமுறை விதி (6) பின்வருமாறு மாற்றீடு செய்யப்படும், அதாவது:–**

***“ (6) பட்டியல் தயாரித்தல் மற்றும் வழங்கல் வழிமுறை:***

(a) மேற்கூறப்பட்ட மின்னளவின்படி கணக்கிடப்பட்ட மின்வழங்களுக்கான கட்டணம் உயரழுத்த மின்னழுத்த மின்நுகர்வோருக்கு பட்டியல் வழங்கப்பட்டவுடன் மற்றும் தாழ்வழுத்த மின்நுகர்வோருக்கு மின்நுகர்வு கட்டணத்தை மின்னளவு அட்டையில் பதிவு செய்யப்பட்டவுடன் மின்நுகர்வோரால் செலுத்தப்பட வேண்டும்.

முன்பணம் செலுத்தும் சேவை வசதியுள்ள மின்அளவியை பொருத்தமட்டில், மின் அளவீட்டின் போது, மின்பகிர்மான உரிமம்தாரர் மின்நுகர்வோரின் கோரிக்கையின் பேரில் பட்டியலை வழங்குவார். முன்பணம் செலுத்தும் வசதியுள்ள மின்னளவிகளில் முன்பணம் செய்யப்பட்ட தொகை முழுவதும் செலவழிந்துவிட்டால் தானாகவே மின்விநியோகம் நிற்கும் வகையில் வடிவமைக்கப்படும். இருப்பினும், இது மின்துண்டிப்பாகக் கருதப்படாது மற்றும் மீட்டர் ரீசார்ஜ் செய்யப்படும் போதெல்லாம் மின் விநியோகம் மீண்டும் தொடரும்.

(b) மின்பகிர்மான உரிமம்தாரர், பட்டியல் அனுப்பப்பட்டதை குறுஞ்செய்தி / மின்னஞ்சல் மூலம் உயர் அழுத்த மின்நுகர்வோருக்கு அனுப்ப வேண்டும் மற்றும் தாழ்வழுத்த மின்நுகர்வோருக்கு மதிப்பீடு செய்யப்பட்ட நாளிலிருந்து, நான்கு நாட்களுக்குள் மின்நுகர்வோருக்கு தெரிவிக்க வேண்டும். இந்த தகவலில், செலுத்த வேண்டிய பண விவரமும், செலுத்த வேண்டிய கடைசி தேதியும் குறிப்பிட்டு இருக்க வேண்டும். மின்பகிர்மான உரிமம்தாரர் பட்டியல் உருவாக்கும் நாளில் அதன் இணையதளத்திலும் பட்டியலை பதிவேற்றம் செய்யவேண்டும். அனைத்து மின் நுகர்வோரின் குறைந்தபட்சம் கடந்த ஒரு வருடத்திற்கான பட்டியல் மற்றும் கட்டண விவரங்கள் மின்பகிர்மான உரிமம்தாரரின் இணையதளத்தில் இருத்தல் வேண்டும்.

(c) உரிமம்தாரர், உயர் அழுத்தம், LTCT மற்றும் தற்காலிக மின்னிணைப்புகளுக்கான முதல் பட்டியலை அதே பட்டியல் சுழற்சி காலத்தில் வழங்க வேண்டும். மற்ற வகை மின் இணைப்புகளுக்கு, முடிந்தவரை அதே பட்டியல் சுழற்சி காலத்தில் அல்லது புதிய மின் இணைப்பு வழங்கப்பட்ட தேதியிலிருந்து இரண்டு பட்டியல் சுழற்சி காலத்திற்குள் வழங்க வேண்டும்.

(d) மின் நுகர்வோர் முதல் பட்டியலை குறிப்பிட்ட காலத்திற்குள் அல்லது வழக்கமான பட்டியலை அதற்குப் பிந்தைய காலகட்டங்களில் பெறவில்லையெனில், அவர் எழுத்துப்பூர்வமாக மின்பகிர்மான உரிமம்தாரரிடம் புகார் செய்ய வேண்டும். மின்பகிர்மான உரிமம்தாரர் ஏழு நாட்களுக்குள் பட்டியலை வழங்குவார். மின் நுகர்வோர் தனது பட்டியலின் விவரங்களை மின்பகிர்மான உரிமம்தாரரின் இணையதளத்திலிருந்தும் பெறலாம்.

(e) மின்நுகர்வோர் மின்பகிர்மான உரிமம்தாரரிடமிருந்து நுகரப்படும் மின்சாரத்திற்கான கட்டணத்தை காலம் தவறாமல் முறையாக செலுத்துவதற்கு, சமமாக கடமைப்பட்டவராவார்.

(f) மின்பகிர்மான உரிமம்தாரர் ஒரு நிதியாண்டில் ஒரு மின் நுகர்வோருக்கு இரண்டுக்கும் மேற்பட்ட தற்காலிக பட்டியல்களை உருவாக்குதல் கூடாது. தவிர்க்க முடியாத சூழ்நிலை தவிர இரண்டுக்கும் மேற்பட்ட பட்டியிடல் சுழற்சி காலங்களுக்கு மேல் தற்காலிக பட்டியல் தொடர்ந்தால், மின்பகிர்மான உரிமம்தாரர் மின்னளவியின் உண்மையான மின்னளவினை வழங்கும்வரை மின் நுகர்வோர் நிலுவைத் தொகையை செலுத்த மறுக்கலாம்.

(g) பட்டியல் தொடர்பான குறைகள் அல்லது புகார்களை யாரிடம் தாக்கல் செய்ய அதிகாரமுள்ளதோ அத்தகைய அதிகாரமுள்ளவர் பற்றிய விவரங்களை பட்டியலுடன் இணைத்து வழங்கப்படுவதோடு, அவ்விவரங்கள் மின்பகிர்மான உரிமம்தாரரின் இணையதளத்திலும் இருக்குமாறு செய்ய வேண்டும்.

(h) வளாகம் காலியாகும் நிலையில், மின்பகிர்மான உரிமம்தாரர் மின் நுகர்வோரின் எழுத்துப்பூர்வ கோரிக்கையைப் பெற்றவுடன் மின்னளவியில் சிறப்பு மின் அளவினை எடுப்பதற்கு ஏற்பாடு செய்து, பட்டியல் தேதி வரை அனைத்து நிலுவைத் தொகைகளையும் சேர்த்து இறுதி பட்டியல் வழங்கவும் மற்றும் அத்தகைய இறுதிக் கட்டணம் பெறப்பட்டதிலிருந்து ஏழு நாட்களுக்குள் நிலுவைத் தொகை இல்லாத சான்றிதழையும் வழங்க வேண்டும்.”

**17. ஒழுங்குமுறை விதி 9–இல், உள் ஒழுங்குமுறை விதி (1)க்கு பிறகு பின்வருபவை புகுத்தப்படும், அதாவது:–**

“ஒப்பளித்த மின் தேவையில் மாற்றம் ஏற்படும் போது, முடிந்தவரையில் அந்த மாற்றத்தை அடுத்த மின்னளவு எடுக்கும் காலத்தோடு ஒன்றும்படி நடைமுறைப்படுத்த வேண்டும். இருந்தாலும் அப்படி செய்ய முடியாதபோது, மின்னளவியை மீளமைப்புக்குக் கொண்டு வந்து, முறையே, உரிய கால இடைவெளிகளில் பதிவாகும் பெரும் மின் தேவைகளின் விகிதத்தில், அக்கால இடைவெளிகளுக்குரிய உச்ச மின் தேவைக் கட்டணங்களை கணக்கிட வேண்டும்.

திருத்திய சோதனை அறிக்கை (RTR) மின் தேவையின் தற்காலிகக் குறைப்பு தவிர, மின் தேவை மாற்றத்திற்கான அனைத்து தொடர்புடைய விவரங்களையும் உள்ளடக்கி எடுக்கப்படும். RTR இன் தேதியானது மின் தேவை மாற்றம் நடைமுறைக்கு வரும் தேதியிலிருந்து அமலுக்கு வரும். மின்னளவி விவரங்கள் / மின்னூட்ட மின்மாற்றியின் விவரங்கள் / இருப்பிலுள்ள / நிறுவப்பட்டுள்ள மின்னூட்ட மின்மாற்றியின் விகிதம், பெருக்கல் காரணி / மின்னளவி பெட்டியின் பாதுகாப்பு முத்திரைகள் செய்யப்பட்ட மாற்றங்கள், திருத்திய சோதனை அறிக்கை (RTR) யில் தெளிவாக ஆவணப்படுத்தப்பட வேண்டும். எனினும், மின் அளவீட்டு முறையில் எந்த மாற்றமும் இல்லாமல் மின்நுகர்வோர் கோரியபடி பருவகால அடிப்படையில் தற்காலிகமாக மின் தேவையைக் குறைப்பதற்கு, திருத்திய சோதனை அறிக்கை (RTR) தேவையில்லை.

(1A) பருவகாலத் தேவைக்கு ஏற்ப மாறுகின்ற மின் தேவை குறைப்பு, மின் கட்டண வீதப்படி IIIB இன் கீழ் உள்ள தகவல் தொழில்நுட்ப சேவைகள் தவிர மற்ற தொழில்கள் மற்றும் மின் கட்டண வீதப்படி V இன் கீழ் உள்ள திருமண மண்டபங்களுக்கு பொருந்தும். விருப்பமுள்ள மின்நுகர்வோரின் விண்ணப்பத்தின் அடிப்படையில் மாறுகின்ற மின் தேவையின் குறைப்பு நடைமுறைப்படுத்தப்படும். அத்தகைய விண்ணப்பம் எளிமையான வடிவத்தில் நிகழ்நிலையில் (online) மேற்கொள்ளப்படும். ஆய்வு தேவையில்லை. மின் தேவையை தற்காலிகமாகக் குறைப்பதற்காக அளவீட்டு முறை திறனை குறைக்க வேண்டியதில்லை. விண்ணப்பத் தேதியைத் தொடர்ந்து, மின்னளவீடு மற்றும் உச்சமின்தேவை கணக்கீடு செய்யும் அடுத்த மதிப்பீட்டு தேதியிலிருந்து மின் தேவைக் குறைப்பு நடைமுறைக்கு வரும். ஒப்பந்த மின்தேவை மாற்றப்படாமல் அதே அளவில் சோதனை அறிக்கை மற்றும் ஒப்பந்தத்தில் மாற்றமின்றி தொடரும். திருத்திய சோதனை அறிக்கை தேவையில்லை.

மின் தேவைக் குறைப்பு குறைந்தபட்சம் ஒரு பட்டியல் சுழற்சி காலத்திற்கு பொருந்தும். ஒரு வருட காலதொகுப்பில் நான்கு முறை மின் தேவை குறைப்பு அனுமதிக்கப்படுகிறது. ஒப்பளித்த மின்தேவையிலிருந்து குறைக்கப்பட்ட மின்தேவைக்கு ஒப்புதல் வழங்கப்பட்ட முதல் பட்டியல் சுழற்சி கால தொடக்கத்திலிருந்து, ஒரு வருட காலத்தொகுப்பு கணக்கிடப்படும். ஒரு குறிப்பிட்ட ஒப்புதலுக்குப் பிறகு, மின் நுகர்வோர், மின்தேவைக் குறைப்பு அனுமதிக்கப்பட்ட பட்டியல் சுழற்சி காலம் முடிவடைவதற்குள் விண்ணப்பித்து, மின் தேவைக் குறைப்பு காலத்தை நீட்டிக்க முடியும், மேலும் மின்நுகர்வோரின் விருப்பத்தின்படி ஒப்புதல் அளிக்கப்பட்ட காலம் முடிந்த பின், மின்தேவையை ஒப்பளித்த மின்தேவை அளவிற்குள் அதிகரிக்கலாம். இவ்விரண்டு வகைகளிலும், கால நீட்டிப்புக்கான விண்ணப்பம் அல்லது விரும்பிய மின் தேவைக் குறைப்பைத் திருத்துவது, ஒரு வருடத்தில் அனுமதிக்கப்பட்ட நான்கு எண்ணிக்கையை முறைகளுக்குள் கணக்கிடும் நோக்கத்திற்காக எடுத்துக்கொள்ளப்படும்.

மேற்கூறிய மின் தேவைக் குறைப்புக் காலத்தின் காலாவதியாகிய உடன் குறைக்கப்பட்ட மின் தேவை தானாகவே காலாவதியாகும் தேதியில் ஒப்பந்த மின் தேவையின் அளவிற்கு மீண்டும் மாற்றப்படும். பட்டியல் சுழற்சி காலத்தில் குறைக்கப்பட்ட தற்காலிக மின் தேவையின் அளவை விட பதிவுசெய்யப்பட்ட மின் தேவை அதிகமாக இருந்தால், ஒப்பந்தம் செய்யப்பட்ட முழு மின் தேவைக்கான நிலையான கட்டணங்கள் அந்த பட்டியல் சுழற்சி காலத்திற்கு செலுத்தப்பட வேண்டும். குறிப்பிட்ட ஆண்டில் எந்த நேரத்திலும் ஒப்பந்த மின் தேவையை மீட்டெடுக்காமல் மின் நுகர்வோரால் அந்த வருடத்தின் தொடர்ச்சியான காலத்தில் தற்காலிக மின் குறைப்பு செய்யப்பட்டால் அல்லது நீட்டிக்கப்பட்டால், அத்தகைய ஒரு வருட காலப்பகுதியின் முடிவில் குறைக்கப்பட்ட மின் தேவையானது ஒப்பந்த மின்தேவையாக நிரந்தரமாக்கப்பட்டு திருத்தப்பட்ட RTR மற்றும் ஒப்பந்தத்துடன் நிரந்தரமாக்கப்படும். தேவைப்பட்டால், மின் அளவீட்டு முறையும் திறன் இறக்கம் செய்யப்படும். அதன்பிறகு, கூடுதல் மின் தேவை மின்நுகர்வோருக்கு தேவைப்பட்டால், அவர் கூடுதல் மின் தேவைக்காக புதிதாக விண்ணப்பிக்க வேண்டும், அத்தகைய விண்ணப்பத்தின் போது விதிமுறைகள் மற்றும் செலுத்த வேண்டிய அனைத்து கட்டணங்களும் பொருந்தும். அத்தகைய விண்ணப்பங்களுக்கு தனி முன்னுரிமை வரிசை கிரமம் வழங்கப்படும்.

உரிமம்தாரர் தடையற்ற செயலாக்கம் மற்றும் சீரான நடைமுறைக்காக விண்ணப்பபடிவம் மற்றும் பட்டியலியல் மென்பொருளில் தேவையான மாற்றங்களைச் செய்ய வேண்டும்.”

**18. ஒழுங்குமுறை விதி 10–இல், உள் ஒழுங்குமுறை விதி (5) க்குப் பிறகு, பின்வருபவை புகுத்தப்படும், அதாவது:–**

“(6) எதிர்பாராத இடர்பாடுகளின் காரணமாக உரிமம்தாரரால் மின் மதிப்பீடு செய்ய இயலாத நிலையில் / வலுக்கட்டாய நிகழ்வின் சூழ்நிலையில், மின்னிணைப்பின் பட்டியலுக்காக தேவைப்படும் மின்னளவு மற்றும் தேதியினை குறிப்பிட்டு மின்னளவியில் காணப்படும் மின் அளவீட்டுடன் கூடிய புகைப்படத்தை பதிவு செய்யப்பட்ட கைபேசி அல்லது மின்னஞ்சல் மூலமாக நியமிக்கப்பட்ட அதிகாரிக்கு அனுப்பி வைக்கும் முறையினை உரிமம்தாரர் மின்நுகர்வோருக்கு அளிக்கலாம்.”

**19. ஒழுங்குமுறை விதி 11 -இன், தலைப்பு மற்றும் உள் ஒழுங்குமுறைவிதி (1) பின்வருமாறு மாற்றீடு செய்யப்படும் , அதாவது:–**

***“ 11. மின்னளவி பழுதுற்ற நிலைகளில் பட்டியலிடுவதற்கு மதிப்பீடு செய்தல்.***

**(1)** நிறுவப்பட்ட மின் அளவி பழுதடைந்ததாகவோ அல்லது எரிந்ததாகவோ அல்லது செயல்படுவதை நிறுத்திவிட்டதாக கண்டறியப்பட்டால், மின்திருட்டு அல்லது விதிமீறல் பற்றிய சந்தேகமில்லாத பட்சத்தில், பழுதடைந்த மின்னளவியிலிருந்து CMRI கருவியின் மூலம் இறக்குமதி செய்து ஆய்வு செய்யப்பட்ட தரவுகள், மின் சுமை வளைவு வரைபடம் போன்றவற்றின் மூலமாகவும் தள நிலையைக் கருத்தில் கொண்டும் மின்னளவி பழுதாகியுள்ள காலத்தில் வழங்கப்பட்ட மின்சாரத்தின் அளவு கணக்கிடப்படும். அவ்வாறு தரவிறக்கம் செய்ய முடியாத இடங்களில், மின்னளவி பரிசோதிக்காததற்கான காரணம் அல்லது குறைபாடுள்ள அல்லது எரிந்த மின்னளவியிலிருந்து தரவைப் பதிவிறக்காததற்கான காரணம் பதிவு செய்யப்பட்டு உரிமம்தாரரால் நியமிக்கப்பட்ட அதிகாரியால் கையொப்பமிடப்படும். தரவுகளை பதிவிறக்கம் செய்ய முடியாத இடங்களில், மின்னளவி பழுதடைந்த காலத்தில் வழங்கப்பட்ட மின்சாரத்தின் அளவு, கீழே குறிப்பிடப்பட்டுள்ளபடி மதிப்பிடப்படும். “

**20. ஒழுங்குமுறை விதி 11–இல், உள் ஒழுங்குமுறைவிதி (6)–இன் இறுதியில், பின்வருபவை புகுத்தப்படும், அதாவது:–**

" மேற்கூறிய அனைத்து நிகழ்வுகளிலும், தொடர்புடைய சோதனை முடிவுகள் மற்றும் முந்தைய காலத்திற்கான அதாவது மின்னளவி பழுதடைந்ததாகக் கண்டறியப்பட்ட காலத்திற்கான கணக்கீட்டின் அடிப்படை மற்றும் கணக்கிடும் முறையை விளக்கும் தெளிவான பட்டியலை நுகர்வோருக்கு ஒப்புகையுடன் எழுத்துப்பூர்வமாக தெரிவிக்க வேண்டும். "

**21. ஒழுங்குமுறை விதி 14A பின்வருமாறு மாற்றீடு செய்யப்படும், அதாவது:–**

***"14A தானியங்கி மின் பயனீட்டுக் கணக்கீடு அமைப்பு முறையின் கீழ் நுகர்வோருக்கான அறிவிப்பு:***

இந்த விதித்தொகுப்பின் 5,8,13,14 மற்றும் 16–ம் ஒழுங்குமுறை விதிகளில் அல்லது மின்பகிர்மான விதித் தொகுப்பின் ஏதாவது வகைமுறைகளில் எது எவ்வாறு இருப்பினும், தானியங்கி மின் பயனீட்டுக் கணக்கீடு (AMR) தொழில்நுட்பவியல் மூலமான தானியங்கி மின் பயனீட்டுக் கணக்கீடு அமைப்புமுறை / வினைத்திறமிக்க மின்னளவிகளைப் பயன்படுத்தி மேம்பட்ட மின்னளவியிடல் கட்டமைப்பு (AMI) தொழில்நுட்பவியல் / வினைத்திறமிக்க மின்னளவியைப் பயன்படுத்தும் எதாவது பிற மாதிரி தொழில்நுட்பவியல் அல்லது கணினிமயமாக்கப்பட்ட பட்டியல் ஆகியவைகளை உரிமம்தாரர் எங்கெல்லாம் செயல்படுத்துகிறாரோ அங்கெல்லாம் பட்டியலிடல் விவரங்களான மின்நுகர்வு, மின்நுகர்வுக்கான கட்டணங்கள், கட்டணம் செலுத்துவதற்கான உரிய நாள், கூடுதல் பிணைவைப்புத் தொகைக்கான கேட்பு, ஏதாவது பிற கேட்பு / தகவல், இடம் பெயர்ந்த சிதைவு அறிகுறிகள் முதலியன, பதிவு செய்யப்பட்ட கைபேசி / மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் / குறுஞ்செய்தி வழியாக அல்லது உரிமம்தாரரால் பின்பற்றக்கூடிய ஏதாவது பிற மின்னணு முறைமை ஆகியவற்றின் மூலமாக தெரியப்படுத்தப்படுதல் வேண்டும் மற்றும் அத்தகைய செய்தியளிப்பானது அத்தகைய நோக்கத்திற்காக வெளியிடப்பட்ட அறிவிப்பாக கருதப்படும்.

இந்த நோக்கத்திற்காக, அனைத்து நுகர்வோர்களும் தங்கள் கைபேசி எண் / மின்னஞ்சல் முகவரியை உரிமம்தாரரிடம் பதிவு செய்ய வேண்டும், மேலும் பதிவு செய்யப்பட்ட கைபேசி எண் / மின்னஞ்சல் முகவரியின் சரியான தன்மை மற்றும் அவ்வப்போது புதுப்பிப்பதை உறுதி செய்வது நுகர்வோரின் பொறுப்பாகும். இருப்பினும், உரிமம்தாரர் அத்தகைய சரிபார்ப்பு மற்றும் புதுப்பிப்புக்கு பொருத்தமான வசதியை வழங்க வேண்டும்."

**22. ஒழுங்குமுறை விதி 15 –இல், உள் ஒழுங்குமுறை விதி (1)–இன் தொடக்கத்தில், கீழ்கண்ட சொற்றொடர் சேர்க்கப்படும், அதாவது:–**

"மின்நுகர்வோர் தங்கள் விருப்பத்திற்கேற்ப நிகழ்நிலை (online) அல்லது நேரடியாக மின்கட்டணத்தை செலுத்தலாம்."

**23. ஒழுங்குமுறை விதி 15–இல், உள் ஒழுங்குமுறை விதிகள் (2) மற்றும் (3) பின்வருமாறு மாற்றீடு செய்யப்படும், அதாவது:–**

" (2) இதர கட்டணங்கள் உட்பட அனைத்து உயர் அழுத்த மின் கட்டணங்களும், பட்டியல் தேதியிலிருந்து உரிமம்தாரர் நிர்ணயித்த கடைசி தேதிக்குள் செலுத்தப்படவேண்டும். உயர் அழுத்த மின் நுகர்வோர் 1000/– ரூபாய்க்கு மேல் உள்ள மின்பட்டியல் கட்டணத்தை, RTGS / NEFT / நிகழ்நிலை பணப் பரிமாற்றம் போன்ற மின்னணு முறையில் செலுத்த வேண்டும். சூழ்நிலைகளைப் பொறுத்து, மின்பகிர்மான உரிமம்தாரரின் நியமிக்கப்பட்ட அதிகாரி சிறப்பு சந்தர்ப்பங்கள் மற்றும் தவிர்க்க முடியாத சூழ்நிலைகளில் ரொக்கபணமாக ஏற்பார். பணம் செலுத்த அனுமதிக்கப்பட்ட காலாவதி தேதியிலிருந்து பதினைந்து நாட்களுக்குள் (அறிவிப்பு காலம்) பணம் பெறப்படாவிட்டால், மின்விநியோகம் துண்டிக்கப்படும். எவ்வாறாயினும், இந்த விதித்தொகுப்பில் குறிப்பிடப்பட்டுள்ளபடி தாமதச்செலுத்த உபரி கட்டணம் வசூலுக்கு உட்பட்டு, மின்பகிர்மான உரிமம்தாரரின் நியமிக்கப்பட்ட அதிகாரிக்கு செய்யப்பட்ட விண்ணபத்தின் பேரில், பணம் செலுத்த அனுமதிக்கப்பட்ட அறிவிப்புக் காலத்தின் காலாவதிக்கு அப்பால் நுகர்வோர் பணம் செலுத்துவதற்கு நேரத்தை நீட்டிக்க அனுமதிக்கலாம்.

(3) குறைந்த மின்னழுத்த மின்நுகர்வோர் உரிமம்தரரால் நிர்ணயிக்கப்பட்ட முறையில் நிலுவைத் தொகையை ரொக்கமாகவோ அல்லது நிகழ்நிலையிலோ அல்லது உள்ளூர் வங்கியின் பண ஆணை அல்லது வரைவோலை மூலமாகவோ அல்லது மின்பகிர்மான பிரிவு அலுவலகம் அமைந்துள்ள பகுதியில் உள்ள வங்கியில் வரையப்பட்ட காசோலை மூலமாகவோ அல்லது வங்கியின் கிளை அல்லது தபால் அலுவலக வசூல் மையத்தில் மின்னணு கட்டண மூலம் செலுத்தலாம். எனினும், உள்ளாட்சி அமைப்புகளும், ரயில்வே துறையும் தங்கள் அலுவலகத்தின் இடத்தில் அமைந்துள்ள வங்கிகளில் காசோலையை வழங்கலாம் மற்றும் உரிமம்தாரர் அத்தகைய நுகர்வோரிடமிருந்து வசூல் கட்டணங்கள் ஏதேனும் இருந்தால் கோரலாம். ரூ.1000/–க்கு மிகுதியான செலுத்துதல் கேட்பு வரைவோலை / காசோலை / நிகழ்நிலையாக செலுத்த விரும்பப்படுகிறது. எனினும் சூழ்நிலையை பொறுத்து மின்பகிர்மான உரிமம்தாரரின் நியமிக்கப்பட்ட அதிகாரி செலுத்தல்களை ரொக்கமாகவும் ஏற்றுக்கொள்வதோடு மற்றும் எதிர்காலத்தில் கேட்புவரைவோலை / காசோலை / நிகழ்நிலையாக செலுத்தும்படி நுகர்வோருக்கு அறிவுறுத்த வேண்டும்."

**24. ஒழுங்குமுறைவிதி 16– இல், தற்போதுள்ள பொருளுக்கு பிறகு, பின்வருபவை புகுத்தப்படும், அதாவது:–**

" தொகையின் சிறிய மதிப்பின் பற்றாக்குறையின் காரணமாகவோ சொற்ப நிலுவைத்தொகையை ( பட்டியலிட்ட மின்கட்டண தொகைக்கும் மின்நுகர்வோர் செலுத்திய அதிகப்படியான தொகைக்கும் உள்ள வித்தியாசம் ) மின்நுகர்வோருக்கு வழங்க இயலாவிட்டாலோ அல்லது மின்நுகர்வோர் கவனக்குறைவாக கூடுதல் தொகை காசோலையை தயாரித்திருந்தாலோ, பாக்கி நிலுவைத்தொகை மின்நுகர்வோரின் வாய்மொழி ஒப்புதலுடன் மின்நுகர்வோர் கணக்கின் வைப்புத்தொகையில் வரவு வைக்கப்படும்."

**25. ஒழுங்குமுறை விதி 17–இல், உள் ஒழுங்குமுறை விதி (7) பின்வருமாறு மாற்றீடு செய்யப்படும், அதாவது:–**

"(7) உள் ஒழுங்குமுறை விதியில் குறிப்பிடப்பட்டுள்ளபடி அறிவிப்பைப் பெற்றவுடன், உரிமம்தாரர், பாக்கி தொகையை கழிக்க தேவையுள்ள நிலையில் மின் நுகர்வோர் தனக்குச் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையை நுகர்வோரிடமிருந்து பெறப்பட்ட பாதுகாப்பு வைப்புத்தொகை அல்லது கூடுதல் பாதுகாப்பு வைப்புத்தொகை அல்லது வேறு ஏதேனும் வைப்புத்தொகை இருப்பின் அவைகளிலிருந்து நிலுவைத்தொகை சரிசெய்யப்பட்டு, அவ்வாறு சரி செய்த பின்னர் மீதமுள்ள வைப்புத்தொகை ஏதும் இருப்பின் அதனை, உள் ஒழுங்குமுறை விதி (3)ல் குறிப்பிடப்பட்டுள்ள அறிவிப்புக் காலம் முடிவடைந்த நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் மின் நுகர்வோர் வங்கி கணக்கு விவரங்களை தெரிவித்திருந்தால் மின் நுகர்வோருக்கு தகுந்த அறிவிப்புடன் மின் நுகர்வோரின் வங்கி கணக்கில் நேரடியாக திருப்பிச் செலுத்தப்படும். "

**26. ஒழுங்குமுறை விதி 17– இல், உள் ஒழுங்குமுறை விதி (8) பின்வருமாறு மாற்றீடு செய்யப்படும், அதாவது:–**

“ (8) எந்தவொரு மின் நுகர்வோர் ஒன்றுக்கும் மேற்பட்ட மின் இணைப்புகளை வைத்திருந்தால், சரிபார்க்கப்பட்ட தணிக்கையின் மூலம் சுட்டிக்காட்டப்பட்ட நிலுவைத் தொகைகள், மின் திருட்டு, அங்கீகரிக்கப்படாத மின் பயன்பாடு மற்றும் விதிமீறல் ஆகியவற்றிற்கான கட்டணங்கள், வைப்பு தொகை அளிப்பு பணிகளின் கீழ் தொடர்பான நிலுவைத் தொகைகள் உள்ளிட்ட கட்டணங்கள் போன்ற நிலுவையில் உள்ள கட்டணங்களை மின் நுகர்வோர் ஏதேனும் ஒரு மின் இணைப்பில் செலுத்த தவறினால், உரிமம்தாரர் அத்தகைய நிலுவைத் தொகையை மின் நுகர்வோரின் பெயரில் உள்ள பிற மின் இணைப்பில் (களில்) இணைத்து, அம்மின்னிணைப்பு (களை) மின் இணைப்பை கணக்கீடு முறையுடன் அத்தகைய நிலுவைத் தொகைகள் செலுத்தப்பட வேண்டிய அதிகாரத்தை மேற்கோள் காட்டி உரிய அறிவிப்பை மின்நுகர்வோருக்கு செலுத்தி அந்த மின் நுகர்வோரின் பெயரில் உள்ள அனைத்து மின் இணைப்புகளின் நிலுவைக்கட்டணங்களை முழுவதுமாக செலுத்தும் வரையில் மின் இணைப்புகள் தனித்தனி ஒப்பந்தங்களின் கீழ் உள்ள போதிலும் மின் துண்டிப்பு செய்யலாம். “

**27. ஒழுங்குமுறை விதி 19–இல், உள் ஒழுங்குமுறை விதி (6) பின்வருமாறு மாற்றீடு செய்யப்படும், அதாவது:–**

“(6) இந்தப் பிரிவின் கீழான மதிப்பீட்டை, மதிப்பீடு காலத்தின் போது மின்னளவியில் பதிவாகியிருந்த மின்நுகர்வு / மின்தேவைக்கான, நுகர்வோர் ஏற்கனவே செலுத்தியிருந்த கட்டணங்களை கழித்து, துணைப்பிரிவு (5)–இல் குறிப்பிட்டுள்ள காலத்தில் தவறாக பயன்படுத்தப்பட்ட மின்சுமையின் உபயோகத்திற்கு விதிக்கப்படக்கூடிய கட்டண வீதத்தில் இரண்டு மடங்காக விதிக்கப்படும். “

**28. ஒழுங்குமுறை விதி 22 –இல், உள்ஒழுங்குமுறை விதி (1) பின்வருமாறு மாற்றீடு செய்யப்படும், அதாவது:–**

“ (1) நிர்ணயிக்கப்பட்ட மின் கட்டணம் அல்லது தொடர்புடைய நிலுவைத்தொகை மற்றும் இதர கட்டணங்களை பெறப்பட்டதும் மின்னுரிமதாரர் மின்னிணைப்பிற்கான மின்வழங்கலை உடனடியாக வழங்கவேண்டும்; எந்த சூழ்நிலையிலும் ஆறு பணிக்கால மணி நேரத்திற்கு மிகாமல் வழங்கப்படவேண்டும். “

**29. ஒழுங்குமுறை விதி 22– இன், உள் ஒழுங்குமுறை விதி (6) இல், உட்கூறு (i) பின்வருமாறு மாற்றீடு செய்யப்படும், அதாவது:–**

“(i) உரிமம்தாரரின் அதிகாரம் பெற்ற அலுவலர் நுகர்வோரின் கணக்கை முடித்த பிறகு உள்ள நிலுவை தொகையில் 40% பெற்றுக்கொண்டு தவணை முறையில் செலுத்த அனுமதிக்கலாம். இதில் கீழ்குறிப்பிடப்பட்டவை அடங்கும்:–

(a) கணக்குகள் முடிவடைந்த தேதியில் நிலுவைத் தொகை.

(b) செலுத்தும் தேதி வரை பொருந்தக்கூடிய தாமதச்செலுத்த உபரி கட்டண (BPSC) / வட்டி.

(c) மீதமுள்ள 60% தொகை பத்து மாத தவணைகளில் வசூலிக்கப்படும். மேற்கூறியவற்றைத் தவிர, கணக்குகள் முடிவடைந்த போது சரிசெய்யப்பட்ட பாதுகாப்பு வைப்புத்தொகை முழுவதையும் ஒரே தொகுப்பாக மேற்கூறிய 40% பகுதியுடன், மின்வழங்களை மீட்டுத்தரலுக்கு முன்னர் வசூலிக்கப்படும்.

***விளக்கம்:*** சந்தேகங்களை நீக்கும் நோக்கத்திற்காக, தமிழ்நாடு மின்சார வாரியம் தமிழ்நாடு மின்சார வழங்கல் விதித்தொகுப்பு (திருத்தம்), 2006 ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் தேதிக்கு முன் அதாவது 21 ஜூன் 2006 க்கு முன் உள் ஒழுங்குமுறை விதி(6) ன் அடிப்படையில் கூறப்பட்ட திருத்தத்திற்கு முன், தமிழ்நாடு மின்சார வாரியத்தால் வசூலிக்கப்பட்ட குறைந்தபட்ச கட்டணங்கள் திரும்ப அளிக்கப்பட வேண்டியதில்லை.”

**30. ஒழுங்குமுறைவிதி 23–இல், உள் ஒழுங்குமுறைவிதியில் (AA)–இன், உட்கூறு (7) இல்**

“ நுகர்வோர் வீடுகளில் மின்பகிர்மான உரிமம்தாரரால் நிறுவப்பட்ட மின்னளவியில் நுகரப்பட்ட மின்சாரத்தின் அளவு பதிவு செய்யப்படுமானால், அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், இந்த விதித் தொகுப்பின் பிற்சேர்க்கையில், படிவம் 8ஆ–இல் கொடுக்கப்பட்டுள்ள மின்கணக்கீட்டு சுருக்க விதிமுறையின்படி அத்தகைய மின்நுகர்வினை கணக்கிடுதல் வேண்டும்.“

என்ற சொற்றொடர் பின்வருமாறு மாற்றீடு செய்யப்படும், அதவாது:

“எனினும் மின்திருட்டு தொடர்பான குற்றத்திற்கு கீழ்கண்ட காரணங்களுக்காக மட்டுமே பிரிவு 135 பயன்படுத்தப்படும்:

(i) மின்னளவியில் மின் ஆற்றல் பதிவு செய்யப்படாத / பகுதியாக பதிவு செய்யப்பட்ட காரணங்களுக்காக

(ii) துண்டிக்கப்பட்ட மின்னிணைப்பில் இருந்து சட்டவிரோதமாக மின்வழங்கலை மீட்டுத்தரல் / எந்த வகையிலும் துண்டிக்கப்பட்ட மின்னிணைப்பிற்கு மின்வழங்கலை மீட்டுத்தரல் காரணங்களுக்காக

(iii) விவசாயம் மற்றும் குடிசை மின்னிணைப்புகளில் இருந்து அனுமதிக்கப்படாத மின்சாரத்தை பயன்படுத்துதல் காரணங்களுக்காக.”

**31. பின்னிணைப்பின் படிவம்–8 ல், பகுதி I, கூறு (E) இல், உள்ள உட்கூறு (i) பின்வருமாறு மாற்றீடு செய்யப்படும், அதாவது:–**

***“i) உ.அ. மின்னிணைப்புகளில் மின்தேவை அளவு கட்டணங்கள் மற்றும் தா.அ. மின்னிணைப்புகளில் நிலையான கட்டணங்களை மதிப்பிடுதல்:–***

(a) அனைத்து மின்னிணைப்புகளிலும் உச்ச மின்தேவை, ஒப்பளித்த மின்தேவை / ஒப்பந்தம் பெற்ற மின்தேவை என்ற குறைந்தபட்சத்திற்குட்பட்டு ஆய்வின் போது இணைக்கப்பட்டிருந்த மொத்த சுமையில் 75 விழுக்காடு என மதிப்பிடப்படும். உயர் அழுத்தத்திற்கு 0.90 lag என்கிற காரணி மற்றும் தாழ்வழுத்தத்திற்கு 0.85 lag என்கிற காரணி கிலோவோல்ட் ஆம்பியர் மற்றும் கிலோவாட்டிர்க்கு இடையே மாற்றம் செய்ய பயன்படுத்தப்படும்.

(b) உ.அ. மின்னிணைப்புகளில் மின் தேவை கட்டணங்களை மதிப்பீடு செய்தல்:

உச்ச மின்தேவையில் உரிய உயர் அழுத்த மின்கட்டணவீதத்தில் இரண்டு மடங்கு

(c) தா.அ. மின்னிணைப்புகளில் நிலையான கட்டணங்களை மதிப்பீடு செய்தல்:

நிலையான கட்டங்களுக்கு உரிய தாழ்வு அழுத்த மின்கட்டணவீதத்தில் இரண்டு மடங்கு.''

**32. பின்னிணைப்பின் படிவம்—8ல், தற்போதுள்ள பகுதி II பின்வருமாறு மாற்றீடு செய்யப்படும், அதாவது:—**

"II .மின் துண்டிப்பு செய்யப்பட்டுள்ள மின் இணைப்பில் சட்டப்புறம்பாக மின் வழங்கலை மீட்டுத்தரல் நேர்வில் மின்நுகர்வு அளவினை மதிப்பீடு செய்தல் பின்வருமாறு:—

(A) சட்டப்புறம்பான மின் வழங்கலை மீட்டுத்தரல் நாளுக்கு உடனடியாக முந்திய பன்னிரண்டு மாதங்கள் அல்லது மின் இணைப்பு துண்டிக்கப்பட்ட நாளிலிருந்து சட்டப்புறம்பான மின்வழங்கலை மீட்டுத்தரல் நாள் வரை, இதில் எந்த கால அளவு குறைவானதோ அந்தக்காலம்.

(B) சட்டப்புறம்பான மின்வழங்கலை மீட்டுத்தரலுக்கான மதிப்பீட்டு கட்டணங்களை மதிப்பிடுவதற்கு மற்றும் கணக்கிடுவதற்கு செய்யப்பட்ட மின்னளவானது பின்வருமாறு:

(i) மின்னளவு சரியாக இயங்கும் நிகழ்வில்:— மின்னிணைப்பின் மின்துண்டிப்பு செய்யப்பட்ட நாளிலிருந்து மின்திருட்டு கண்டுபிடிக்கப்பட்ட நாள் வரை பதிவான யூனிட்டுகள்.

மதிப்பீடானது, மின்னாற்றல் மற்றும் மின்தேவை / நிலையான கட்டணங்கள் இரண்டையும் உள்ளடக்கிய நிர்ணயிக்கப்பட்ட மின் கட்டண வீதத்தின் இரு மடங்கு இருத்தல் வேண்டும். மதிப்பீடு செய்யப்பட்ட காலத்தில் மின்னளவியில் பதிவான யூனிட்டுகள் / மின்தேவைக்கான மின் கட்டணங்கள் வசூலிக்கப்படாது. அவ்வாறு வசூலிக்க பட்டிருந்தால், அவை மின்நுகர்வோரின் கணக்கில் வரவு வைக்கப்படும்.

(ii) மின்னளவி குறைபாடுடையதாக கண்டறியப்படும் நிகழ்வில்:— சட்டப்புறம்பான மின்வழங்கலின்போது நுகர்வு செய்யப்பட்ட மின்னளவினை மேற்குறிப்பிடப்பட்ட பகுதி I ன் சூத்திரத்தின்படி கணக்கீடு செய்யப்படும்.

(C) மதிப்பீடானது மின்னாற்றல் மற்றும் மின்தேவை / நிலையான கட்டணங்கள் இரண்டையும் உள்ளடக்கிய நிர்ணயிக்கப்பட்ட மின் கட்டண வீதத்தின் இரு மடங்கு இருத்தல் வேண்டும்.

(D) மேற்கூறப்பட்ட மதிப்பீட்டுக் கட்டணங்கள் தவிர, குற்ற நிறுத்திசைவு (compounding of offence) தொடர்பான நிபந்தனைகள் உட்பட மின்வழங்கல் விதித்தொகுப்பின் உள் ஒழுங்குமுறை விதி 23 (AA) கீழ் வகுக்கப்பட்ட நடைமுறைகள் பின்பற்றப்படவேண்டும்.

**குறிப்பு:** மதிப்பீட்டிற்குக் குறிப்பிடப்பட்டுள்ள பொருந்தக்கூடிய மின் கட்டணமானது, அத்தகைய மதிப்பீட்டு காலத்தில் படிவம் 8—ல் கையாளப்பட்ட அனைத்து வகைகளுக்குமான மின்கட்டணமாகும்.''

**33. மின்வழங்கல் விதித்தொகுப்பின் பின்னிணைப்பில் தற்போதுள்ள படிவம் 8—A பின்வருமாறு மாற்றீடு செய்யப்படும், அதாவது:—**

**"படிவம் 8-A**

**[ஒழுங்குமுறை 19 (6) ஐப் பார்க்கவும்]**

**மின்சார சட்டம், 2003 , 126-ஆம் பிரிவின்படி அனுமதியளிக்கப்படாத மின் பயன்பாட்டின் கணக்கிடுவதற்கான சூத்திரம்**

**(i) தவறாகப் பயன்படுத்தப்பட்ட மின்சாரத்தின் அளவு:**

U = a x ( b / c) கிலோ வாட் மணி (kWh)

இதில்

a — விதிமீறல் கண்டறியப்பட்ட முந்தைய காலத்தில் வரையறுக்கப்பட்ட காலவரம்பிற்கான மொத்த மின் நுகர்வு

b – ஆய்வின் போது கண்டறியப்பட்ட தவறாகப் பயன்படுத்தப்பட்ட மின் சுமை

c – ஆய்வின் போது கண்டறியப்பட்ட மொத்த இணைக்கப்பட்ட மின் சுமை

**(ii) அனுமதியளிக்கப்படாத மின் பயன்பாட்டின் மதிப்பீடு அளவு**

= [(2 x U x d) – (U x e)] + [(2 x b x F1 ) – (b x F2 )]

இதில்

U – தவறாகப் பயன்படுத்தப்பட்ட மின் அளவு, **கிலோ வாட் மணி (kWh)**

d – அனுமதியளிக்கப்படாத பயன்பாட்டின் மின் கட்டணம்

e – அனுமதியளிக்கப்பட்ட பயன்பாட்டின் மின் கட்டணம்

F1– அனுமதியளிக்கப்படாத பயன்பாட்டின் மின் தேவை / நிலையான கட்டணங்கள்

F2– அனுமதியளிக்கப்பட்ட பயன்பாட்டின் மின் தேவை / நிலையான கட்டணங்கள்

b – கிவா / கிவோஆ –இல் அனுமதியளிக்கப்படாத மின் தேவை அளவு

**(iii) அனுமதியளிக்கப்படாத மின் பயன்பாட்டின் கால அளவு**

அதிகாரம் அளிக்கப்பட்ட அதிகாரி கீழ்கண்டவற்றின் அடிப்படையில் குறைந்தபட்ச காலத்திற்கான அனுமதியளிக்கப்படாத மின்சார பயன்பாட்டை கணக்கிடலாம்:

(a) பன்னிரண்டு மாத கால அளவிற்கு

(b) உரிமம்தாரரின் அதிகாரியின் முந்தைய ஆய்வு தேதி ஏதேனும் இருப்பின் அந்த தேதியில் இருந்து அனுமதியளிக்கப்படாத மின் உபயோகம் கண்டறியப்பட்ட தேதி வரையிலான காலத்திற்கு

(c) மின் இணைப்பு வழங்கப்பட்ட தேதியிலிருந்து அனுமதியளிக்கப்படாத மின் உபயோகம் கண்டறியப்பட்ட தேதி வரையிலான காலத்திற்கு

(d) எங்கெல்லாம் மின்னணு மின்னளவிகள் பொருத்தப்பட்டு மற்றும் மின்சுமை சுழற்சிகள் அவ்வப்போது ஆய்வு செய்யப்படுகின்றதோ அவ்விடத்தில் அனுமதியளிக்கப்படாத பயன்பாடு அறிவியல் ரீதியாக துல்லியமாக கண்டறியப்பட்ட காலஅளவு

(e) குற்றம் சாட்டப்பட்டவரால் வழங்கப்பட்ட செல்லத்தக்க ஆவணத்தின் அடிப்படையில்

(f) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் நியாயமான தீர்ப்பின் அடிப்படையில் மதிப்பிடப்பட்ட கால அளவு

**குறிப்பு:** கட்டணத்தை மதிப்பிடுவதற்காக மேற்கூறப்பட்ட சூத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அங்கீகரிக்கப்படாத மின்பயன்பாட்டிற்கான மின்கட்டணமானது (d) மதிப்பீடு காலத்தில் நடைமுறையில் உள்ள மின்கட்டணத்தை குறிக்கும்.''

**34. மின்வழங்கல் விதித்தொகுப்பின் பின்னிணைப்பில் தற்போதுள்ள படிவம் 9 பின்வருமாறு மாற்றீடு செய்யப்படும், அதாவது:–**

**"படிவம் 9**

**(ஒழுங்குமுறைவிதி 23 (AA) (8) ஐப் பார்க்கவும்)**

**மின்சாரச் சட்டம், 2003, பிரிவு *135 / 138-இன் படி மின் திருட்டிற்கான / சட்டவிரோதமாக மின் வழங்கலை மீட்டுத்தரலுக்கான, தற்காலிக கணக்கீட்டு ஆணை**

அனுப்புநர்

(அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்)

பெறுநர்

(எவருடைய பெயரில் மின்னிணைப்பு<br>உள்ளதோ அந்த நபரின் அல்லது<br>குடியிருப்பவரின் அல்லது<br>அனுபோகதாரர், முதலியோரின் முழு முகவரி)

கடிதஎண் ________________________________ நாளிட்டது

ஐயா,

**பொருள் -*மின் திருட்டு / சட்டவிரோதமாக மின் வழங்கலை மீட்டுத்தரல் - கண்டுபிடிக்கப்பட்டது உயர்வழுத்த/ தாழ்வழுத்த மின் இணைப்பு எண் ...............மின்கட்டணவீதம் ......... தற்காலிக கணக்கீட்டு ஆணை - குறித்து.**

குறிப்புரை – ...........................நாளிட்ட ஆய்வு அறிக்கை

xxxx

1.0. *................ அன்று (ஆய்வு செய்யப்பட்ட நாள், மாதம், ஆண்டு) ............ (நேரம்) மணியளவில், கதவு எண், எஸ். எப். எண்......... (மின்னிணைப்பின் முழு முகவரி) இல் உள்ள, திரு/திருமதி........................ ............ பெயரில் இருக்கின்ற/ *இருந்த, .........அவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கின்ற/உபயோகப்படுத்தப்படுகின்ற மின் இணைப்பு எண்.............என்னால், தங்கள் / தங்களுடைய சார்பாளர் திரு/திருமதி........... முன்னிலையில் ஆய்வு செய்யப்பட்டது.

2.0. *ஆய்வின் போது மின் திருட்டு / சட்டமுரணாக மின் வழங்கலை மீட்டுத்தரல் செய்யப்பட்டுள்ள குற்றம் கண்டுபிடிக்கப்பட்டது. .......... (மின் திருட்டில் / துண்டிக்கப்பட்ட மின் இணைப்பிலிருந்து சட்ட விரோதமாக மின் வழங்கலை மீட்டுத்தரலில், பயன்படுத்தப்பட்ட செயற்கை வழியின் விவரங்களுடன் மின் திருட்டு முறையினை விவரிக்கவும்). மேற்சொன்ன குற்றத்தைச் செய்ததன் மூலம், நீங்கள் உரிமம்தாரரை மோசடி செய்யும் உட்கருத்துடன் நேர்மையின்றி மின்சாரத்தைத் திருடியுள்ளீர்கள், நுகர்ந்துள்ளீர்கள் மற்றும் பயன்படுத்தியுள்ளீர்கள்.

மேலே சொன்ன சட்டவிரோத மின் திருட்டு, நுகர்வு மற்றும் பயன்பாடு, மின்சாரச் சட்டம், 2003, *135/138–ஆம் பிரிவின்படி தண்டனைக்குரியதாகும்.

மேற்கண்ட குற்றம் கண்டறியப்பட்ட தேதியில் மின்னிணைப்பு துண்டிக்கப்பட்டது.

3.0 சட்டவிரோதமாக, மின்சாரம் திருடப்பட்டுள்ளது / சட்டவிரோதமாக மின் வழங்கலை மீட்டுத்தரல் செய்ததன் பொருட்டு தங்களால் ஏற்பட்ட தோராய இழப்பு தமிழ்நாடு மின்சார வழங்கல் விதித் தொகுப்பின் ஒழுங்குமுறை விதிகளின் படி ரூ......... (.................. ரூபாய்) ஆகும். இதனுடன் கணக்கீடு விவரம் இணைக்கப்பட்டுள்ளது.

4.0 மேலே சுட்டப்பட்டவாறான கணக்கீட்டுத் தொகை இந்த ஆணை பெறப்பட்ட தேதியிலிருந்து 7 நாட்களுக்குள் செலுத்தப்படுதல் வேண்டும்.

5.0 தாங்கள், தற்காலிகக் கணக்கீட்டிற்கு எதிராக, மறுப்புரைகள், எவையேனுபிருப்பின், அவற்றைத்தாக்கல் செய்ய விரும்புவீரானால், இந்த ஆணையைப் பெற்றத் தேதியிலிருந்து ஏழு நாட்களுக்குள் போதுமான நிரூபணத்துடன் கீழே கையொப்பமிட்டவரின் முகவரிக்குத் தங்களுடைய விளக்கத்தினை தாங்கள் அனுப்பலாம். தாங்கள், கீழே கையொப்பமிட்டவரின் முன்பு விசாரணைக்காக தொடர்புடைய ஆவணங்களுடன் நேரடியாகவோ அல்லது அதிகாரமளிக்கப்பட்ட சார்பாளர் மூலமாகவோ ஆஜராவதற்குத் இந்த உத்தரவு கிடைக்கப்பெற்ற நாளிலிருந்து 10 நாட்களுக்குள் தேர்ந்தெடுக்கவும் செய்யலாம்.

6.0. தாங்கள் உடனடியாக, இந்த ஆணையை பெற்றதற்கான ஒப்புகை அளிக்குமாறு கோரப்படுகிறீர்கள்.

தங்கள் உண்மையுள்ள,

(அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்)

**இணைப்பு :**

1. ஆய்வு அறிக்கை
2. பதிவுச் செய்யப்பட்ட விவர அறிக்கை (ஏதாவது இருப்பின்)
3. மகஜர்
4. படிவம் 8–இன் படி கணக்கீட்டு விவரம்.

நகல் அனுப்பப்படுநர்......................

நகல் பெறுநர்............................

இந்த ஆணை குற்றம் சுமத்தப்பட்டவருக்கு நாளிட்ட ஒப்புகையுடன் சார்பு செய்யப்படுவதற்கு ஏற்பாடு செய்யுமாறும் மற்றும் இந்த அலுவலகத்திற்கு ஒப்புகையை அனுப்புமாறும் அவர் அறிவுறுத்தப்படுகிறார்.

*எது பொருந்தத்தகாததோ அதனை அடித்து விடவும். (மின்திருட்டு குற்றம் என்றால், பிரிவு 135 பொருந்தும், பிரிவு 138ஐ அடித்துவிடவும். சட்டவிரோத மின் வழங்கலை மீட்டுத்தரல் என்றால், பிரிவு 135 மற்றும் 138 ஆகிய இரண்டும் பொருந்தும்.)''

**35. மின்வழங்கல் விதித்தொகுப்பின் பின்னிணைப்பில் தற்போதுள்ள படிவம் 10 பின்வருமாறு மாற்றீடு செய்யப்படும், அதாவது:-**

**"படிவம் 10**

**(ஒழுங்குமுறை விதி 23 (AA) (15) ஐப் பார்க்கவும்)**

**மின்சாரச் சட்டம், 2003, பிரிவு *135 / 138-இன் படி மின் திருட்டிற்கான / சட்டவிரோதமாக மின் வழங்கலை மீட்டுத்தரலுக்கான இறுதி கணக்கீட்டு ஆணை**

| | |
|---|---|
| அனுப்புநர் | பெறுநர் |
| (அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்) | (எவருடைய பெயரில் மின்னிணைப்பு உள்ளதோ அந்த நபரின் அல்லது குடியிருப்பவரின் அல்லது அனுபோகதாரர், முதலியோரின் முழு முகவரி) |

கடிதஎண் ________________________________ நாளிட்டது

ஐயா,

**பொருள் -*மின் திருட்டு / சட்டவிரோதமாக மின் வழங்கலை மீட்டுத்தரல் - கண்டுபிடிக்கப்பட்டது உயர்வழுத்த/ தாழ்வழுத்த மின் இணைப்பு எண் ...............மின்கட்டணவீதம் ......... இறுதிக் கணக்கீட்டு ஆணை - குறித்து.**

குறிப்புரை – 1. தற்காலிக கணக்கீட்டு ஆணை..................

2. தங்கள் பதிலுரை..............................

XXXX

1.0. *................ அன்று (ஆய்வு செய்யப்பட்ட நாள், மாதம், ஆண்டு) ............ (நேரம்) மணியளவில், கதவு எண், எஸ். எப். எண்......... (மின்னிணைப்பின் முழு முகவரி)இல் உள்ள, திரு/திருமதி....................... ............ பெயரில் இருக்கின்ற/ *இருந்த, .........அவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கின்ற/உபயோகப்படுத்தப்படுகின்ற மின் இணைப்பு எண்............என்னால், தங்கள் / தங்களுடைய சார்பாளர் திரு/திருமதி............ முன்னிலையில் ஆய்வு செய்யப்பட்டது.

2.0. *ஆய்வின் போது மின் திருட்டு / சட்டமுரணாக மின் வழங்கலை மீட்டுத்தரல் செய்யப்பட்டுள்ள குற்றம் கண்டுபிடிக்கப்பட்டது. ......................................................................... (மின் திருட்டில் / துண்டிக்கப்பட்ட மின் இணைப்பிலிருந்து சட்ட விரோதமாக மின் வழங்கலை மீட்டுத்தரலில், பயன்படுத்தப்பட்ட செயற்கை வழியின் விவரங்களுடன் மின் திருட்டு முறையினை விவரிக்கவும்). மேற்சொன்ன குற்றத்தைச் செய்ததன் மூலம், நீங்கள் உரிமம்தாரரை மோசடி செய்யும் உட்கருத்துடன் நேர்மையின்றி மின்சாரத்தைத் திருடியுள்ளீர்கள், நுகர்ந்துள்ளீர்கள் மற்றும் பயன்படுத்தியுள்ளீர்கள். மேலே சொன்ன சட்டவிரோத மின் திருட்டு, நுகர்வு மற்றும் பயன்பாடு, மின்சாரச் சட்டம், 2003, *135/138—ஆம் பிரிவின்படி தண்டனைக்குரியதாகும்.

3.0 பார்வையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள தற்காலிகக் கணக்கீட்டு ஆணை தங்களுக்கு வழங்கப்பட்டது மற்றும் தமிழ்நாடு மின் வழங்கல் விதித் தொகுப்பின் ஒழுங்குமுறை விதிகளுக்கிணங்க, தங்களுடைய மறுப்புரைகளைத் தாக்கல் செய்வதற்கும் மற்றும் விசாரணையில் ஆஜராவதற்கும் தாங்கள் அனுமதிக்கப்பட்டீர்கள்.

4.0 நீங்கள் எந்த ஆட்சேபனையும் அல்லது விண்ணப்பமும் செய்யாததால் / தங்களுடைய கடிதத்தில் / நேர்முக விசாரணையின் போது தங்களால் கொடுக்கப்பட்ட விளக்கம், அளிக்கப்பட்ட பொருண்மைகள் மற்றும் பதிவுருக்களைப் விவரமான ஆய்வின் மூலம் மற்றும் கவனமாக பரிசீலித்ததன் பேரில், கீழே விவரிக்கப்பட்டுள்ளபடி இறுதி ஆணை இங்கே வழங்கப்படுகிறது :—

(கண்டறியப்பட்ட மின்திருட்டு, ஆய்வு அறிக்கை, வழங்கப்பட்ட விளக்கம் மற்றும் கண்டுபிடிப்புகள், முதலியன பற்றிய முழுமையான பகுப்பாய்விற்குபின் சம்பந்தப்பட்ட அலுவலரால் பிறப்பிக்கப்படவுள்ள நியாயமான / தெளிவான விவரமான ஆணை, மின்திருட்டு செய்யப்பட்டுள்ளதாக கோரப்பட்டதற்கு ஆதரவான தடையங்கள் / ஆவணங்கள் பற்றிய குறிப்பு, கூறப்பட்ட மின்திருட்டு தொடர்பாக மின்நுகர்வோரின் ஈடுபாடு அல்லது பங்கு, மின் நுகர்வோரின் கடமைகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பான விதிகள் மற்றும் ஒழுங்குமுறைவிதிகள், குற்றம் சாட்டப்பட்ட நபர் தனது எழுத்துப்பூர்வ பதிலில் சமர்பித்த சமர்ப்பிப்புகள் மற்றும் அவரது தனிப்பட்ட விசாரணையின் போது, அவர் சமர்ப்பித்த ஆவணங்கள் / பொருட்கள் போன்றவை மற்றும் அதை ஏற்றுக்கொள்வதற்கும் நிராகரிப்பதற்கும் காரணங்கள் அடங்கிய விவரமான மற்றும் காரணங்களை உள்ளடக்கிய ஆணை சம்பந்தப்பட்ட அலுவலரால் வழங்கப்பட வேண்டும்)

5.0 தமிழ்நாடு மின் வழங்கல் விதித் தொகுப்பின் ஒழுங்குமுறைவிதிகளுக்கிணங்க, மின்திருட்டு / சட்டவிரோதமாக மின் வழங்கல் மீட்டுதரலின் காரணமாக ஏற்பட்டுள்ள இழப்பின் கணக்கீட்டுத் தொகை இறுதியாக ரூ...........— ரூபாய்.............— ) என்று கணக்கிடப்பட்டுள்ளது. இதற்கான கணக்கீட்டு விவரம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இந்த இறுதி கணக்கீட்டுத் தொகை, இந்த ஆணை பெறப்பட்ட தேதியிலிருந்து ஏழு நாட்களுக்குள் செலுத்தப்படுதல் வேண்டும்.

6.0. தாங்கள் உடனடியாக இந்த ஆணையை பெற்றதற்கான ஒப்புகை அளிக்குமாறு கோரப்படுகிறீர்கள்.

தங்கள் உண்மையுள்ள,

(அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்)

**இணைப்பு :**

1. ஆய்வு அறிக்கை
2. பதிவுச் செய்யப்பட்ட விவர அறிக்கை (ஏதாவது இருப்பின்)
3. மகஜர்
4. தற்காலிக கணக்கீட்டு ஆணை.
5. படிவம் 8—இன் கணக்கீட்டு விவரம்

நகல் அனுப்பப்படுநர்.....................

பிரிவு அலுவலர்...........................

இந்த ஆணை குற்றம் சுமத்தப்பட்டவருக்கு நாளிட்ட ஒப்புகையுடன் சார்பு செய்யப்படுவதற்கு ஏற்பாடு செய்யுமாறும் மற்றும் இந்த அலுவலகத்திற்கு ஒப்புகையை அனுப்புமாறும் அவர் அறிவுறுத்தப்படுகிறார்.

*எது பொருந்தத்தகாததோ அதனை அடித்து விடவும். (மின்திருட்டு குற்றம் என்றால், பிரிவு 135 பொருந்தும், பிரிவு 138ஐ அடித்துவிடவும். சட்டவிரோதமாக மின் வழங்கலை மீட்டுத்தரல் என்றால், பிரிவு 135 மற்றும் 138 ஆகிய இரண்டும் பொருந்தும்.)”

**36. மின்வழங்கல் விதித் தொகுப்பின் பின்னிணைப்பில் தற்போதுள்ள படிவம் 11 பின்வருமாறு மாற்றீடு செய்யப்படும், அதாவது:-**

**படிவம் -11**

**(ஒழுங்குமுறை விதி 23 (AA) (22)ஐப் பார்க்கவும்)**

**மின்சாரச் சட்டம் 2003, 152-ஆம் பிரிவின்படி குற்ற நிறுத்திசைவு (Compounding of offence)**

அனுப்புநர்

(அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்)

பெறுநர்

(எவருடைய பெயரில் மின்னிணைப்பு
உள்ளதோ அந்த நபரின் அல்லது
குடியிருப்பவரின் அல்லது
அனுபோகதாரர், முதலியோரின் முழு முகவரி)

கடிதஎண் ______________________________ நாளிட்டது

ஐயா,

**பொருள் -* மின் திருட்டு / சட்டவிரோதமாக மின் வழங்கலை மீட்டுத்தரல் - கண்டுபிடிக்கப்பட்டது உயர்வழுத்த/ தாழ்வழுத்த மின் இணைப்பு எண் .........மின்கட்டணவீதம் ......... இறுதிக் கணக்கீட்டு ஆணை - குறித்து.**

1.0. *................ அன்று (ஆய்வு செய்யப்பட்ட நாள், மாதம், ஆண்டு) ............ (நேரம்) மணியளவில், கதவு எண், எஸ். எப். எண்......... (மின்னிணைப்பின் முழு முகவரி)இல் உள்ள, திரு/திருமதி........................ ............ பெயரில் இருக்கின்ற/ *இருந்த, .........அவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கின்ற/உபயோகப்படுத்தப்படுகின்ற மின் இணைப்பு எண்............என்னால், தங்கள் / தங்களுடைய சார்பாளர் திரு/திருமதி........... முன்னிலையில் ஆய்வு செய்யப்பட்டது.

2.0. *ஆய்வின் போது மின் திருட்டு / சட்டமுரணாக மின் வழங்கலை மீட்டுத்தரல் செய்யப்பட்டுள்ள குற்றம் கண்டுபிடிக்கப்பட்டது. ............... (மின் திருட்டில் / துண்டிக்கப்பட்ட மின் இணைப்பிலிருந்து சட்ட விரோதமாக மின் வழங்கலை மீட்டுத்தரலில், பயன்படுத்தப்பட்ட செயற்கை வழியின் விவரங்களுடன் மின் திருட்டு முறையினை விவரிக்கவும்).

3.0 மேலே சொன்ன சட்ட விரோத மின் திருட்டு, நுகர்வு மற்றும் பயன்பாடு மின்சாரச் சட்டம் 2003–ன், *135 / 138–ஆம் பிரிவின்படி தண்டனைக்குரியதாகும்.

4.0 மின்சாரச் சட்டம், 2003, 152–ஆம் பிரிவின்படி குற்ற நிறுத்திசைவுக்கு தாங்கள் விருப்பம் தெரிவித்துள்ளதால், மேலே சொல்லப்பட்ட குற்ற நிறுத்திசைவுக்காக, ரூ... .......... (ரூபாய் ............. ) செலுத்துமாறு தாங்கள் கோரப்படுகிறீர்கள்.

தங்கள் உண்மையுள்ள,

(அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்)

இணைப்பு : கணக்கு விவரம்

நகல் பெறுநர்...........

* எது பொருந்தத்தகாததோ அதனை அடித்து விடவும். (மின்திருட்டு குற்றம் என்றால், பிரிவு 135 பொருந்தும், பிரிவு 138ஐத் அடித்துவிடவும். சட்டவிரோத மின் வழங்கலை மீட்டுத்தரல் குற்றம் என்றால், பிரிவு 135 மற்றும் 138 ஆகிய இரண்டும் பொருந்தும்.)

**37. மின்வழங்கல் விதித் தொகுப்பின் பின்னிணைப்பில் தற்போதுள்ள படிவம் 12 பின்வருமாறு மாற்றீடு செய்யப்படும், அதாவது:-**

**படிவம் – 12**

**(ஒழுங்குமுறை விதி 19 (A) (4) ஐப் பார்க்கவும்)**

**மின்சார சட்டம், 2003, 126-ஆம் பிரிவின் கீழ் அனுமதிக்கப்படாத மின்பயன்பாட்டிற்கான தற்காலிக மதிப்பீட்டு ஆணை**

அனுப்புநர்

(அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்)

பெறுநர்

(எவருடைய பெயரில் மின்னிணைப்பு
உள்ளதோ அந்த நபரின் அல்லது
குடியிருப்பவரின் அல்லது
அனுபோகதாரர், முதலியோரின் முழு முகவரி)

கடிதஎண் ______________________________ நாளிட்டது.

XXXX

அய்யா,

**பொருள் :** அனுமதிக்கப்படாத மின்பயன்பாடு மின்னிணைப்பு எண் ————————————— உயர் மின்னழுத்தம் / தாழ் மின்னழுத்தம் மின் கட்டண வீதம் எண் ——————————— மின்சாரச் சட்டம், 2003, 126 ஆம் பிரிவின்படி தற்காலிக கணக்கீட்டு ஆணை வழங்குதல் – தொடர்பாக

**பார்வை:** ஆய்வு அறிக்கை நாள் ........................

XXX

1.0. **................** அன்று (ஆய்வு செய்யப்பட்ட நாள், மாதம், ஆண்டு) ............ (நேரம்) மணியளவில், கதவு எண், எஸ். எப். எண்......... (மின்னிணைப்பின் முழு முகவரி)இல் உள்ள, திரு/திருமதி........................ ............ பெயரில் இருக்கின்ற/ இருந்த, .........அவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கின்ற/உபயோகப்படுத்தப்படுகின்ற மின் இணைப்பு எண்............என்னால், தங்கள் / தங்களுடைய சார்பாளர் திரு/திருமதி........... முன்னிலையில் ஆய்வு செய்யப்பட்டது.

2.0. ஆய்வின் போது பின்வருமாறு அனுமதிக்கப்படாத மின்பயன்பாடு கண்டறிப்பட்டது ....... (சட்டத்தின் 126–ஆம் பிரிவின்படி அனுமதியற்ற மின்பயன்பாட்டின் உள்ளபடியான வகையினை விவரிக்கவும்) மேற்சொன்ன அனுமதிப்படாத மின்பயன்பாடு மின்சாரச் சட்டம், 2003, 126–ஆம் பிரிவின் கீழ் தண்டனைக்குரியதாகும்.

3.0 ஆய்வறிக்கையின் நகல் ஒன்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. தங்களின் வளாகத்தில் தயார் செய்யப்பட்டு தங்கள் பிரதிநிதியின் ஒப்புகை பெறப்பட்ட மகஜரின் நகல் தங்களுக்கு / தங்களின் பிரதிநிதிக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது. தங்களிடம் / தங்கள் பிரதிநிதியிடம் பெறப்பட்ட தங்களால் / தங்களின் பிரதிநிதியால் ஒப்பமிடப்பட்ட வாக்குமூல நகலும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

4.0 அனுமதிக்கப்படாத மின்சாரப் பயன்பாட்டிற்கு காரணமான தளவடங்களை, அகற்றியிராவிட்டால் உடனே அவற்றை அகற்றி, எழுத்துப்பூர்வ அறிவிப்பின் மூலம் அதனை உறுதிசெய்யுமாறு தாங்கள் இதன் மூலம் அறிவுறுத்தப்படுகிறீர்கள்.

5.0 மின்சார சட்டம், 2003, 126–ஆம் பிரிவு (5) மற்றும் (6)–ஆம் உட்பிரிவுகளின்படி மேற்கண்ட அனுமதிக்கப்படாத மின்சார பயன்பாட்டிற்கு தங்களால் செலுத்தப்படவேண்டியுள்ள கட்டணங்கள் ரூ.................. என தற்காலிகமாக கணக்கிடப்பட்டுள்ளது. இந்த ஆணை பெற்றுக்கொண்ட ஏழு நாட்களுக்குள் இந்த தொகை செலுத்தப்படுதல்வேண்டும். இல்லையெனில் மின்னிணைப்பு துண்டிக்க நேரிடும்.

6.0 தற்காலிக மதிப்பீட்டிற்கு எதிராக தாங்கள் ஆட்சேபனைகள் எதாவது தாக்கல் செய்ய விரும்பினால், தாங்கள் தங்களின் விருப்பத்தினை போதுமான ஆதாரங்களுடன் கீழ்க் கையொப்பமிட்டவரின் முகவரிக்கு இந்த ஆணை பெறப்பட்ட ஏழு நாட்களுக்குள் அனுப்பி வைக்கலாம். தங்கள் நேரிலோ அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி மூலமாகவோ தொடர்புடைய ஆவணங்களுடன் கீழ்க் கையொப்பமிட்டவரின் முன்னிலையில் அதே ஏழு நாட்களுக்குள் விசாரணைக்கு ஆஜராகத் தேர்வு செய்யலாம்.

7.0 இந்த தற்காலிகமான மதிப்பீட்டு ஆணைக்கு எதிராக ஆட்சேபனை அல்லது விண்ணப்பம் குறிப்பிட்ட நாட்களுக்குள் பெறப்படவில்லையென்றால் இறுதி மதிப்பீட்டு ஆணை பிறப்பிக்கப்படும்.

8.0 இந்த ஆணையினை பெற்று கொண்டமைக்கான ஒப்புகையினை உடனடியாக அளிக்கும்படி தாங்கள் கேட்டு கொள்ளப்படுகிறீர்கள்.

தங்கள் உண்மையுள்ள,

(மதிப்பீட்டு அலுவலர்)

**இணைப்பு:** நகல்கள்

1. ஆய்வு அறிக்கை

2. பதிவு செய்யப்பட்ட வாக்குமூலம் (ஏதாவது இருப்பின்)

3. மகஜர்

4. படிவம் 8 ஆ–இன் கணக்கீட்டு விவரம்

நகல் அனுப்பப்படுநர்......................

பிரிவு அலுவலர்

இவர் இந்த ஆணையினை மின் நுகர்வோர் / குடியிருப்பவர் / அனுபவதாரரிடம் சார்பு செய்து, சார்பு செய்த நாளினை குறிப்பிட்டு ஒப்புகை சீட்டு பெற்று ஒப்புகை சீட்டினை இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்கும்படி அறிவுறுத்தப்படுகிறார்.

**38. மின்வழங்கல் விதித் தொகுப்பின் பின்னிணைப்பில் தற்போதுள்ள படிவம் 13 பின்வருமாறு மாற்றீடு செய்யப்படும், அதாவது:-**

**படிவம் 13**

**(ஒழுங்குமுறை விதி 19 (3) மற்றும் 19 (A) (4) ஐப் பார்க்கவும்)**

**மின்சார சட்டம், 2003, 126-ஆம் பிரிவின் கீழ் அனுமதிக்கப்படாத மின் பயன்பாட்டிற்கான இறுதி மதிப்பீட்டு ஆணை**

அனுப்புநர்
(அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்)

பெறுநர்
(எவருடைய பெயரில் மின்னிணைப்பு உள்ளதோ அந்த நபரின் அல்லது குடியிருப்பவரின் அல்லது அனுபோகதாரர், முதலியோரின் முழு முகவரி)

கடித எண் ..........................................................

நாள் ...............................

அய்யா,

**பொருள் :** அனுமதியற்ற மின்பயன்பாடு உயர் மின்னழுத்தம் / தாழ் மின்னழுத்தம் மின்னிணைப்பு எண் ---------- மின் கட்டணவீதம் எண் -------2003-ஆம் ஆண்டு மின்சார சட்டத்தின் 126-ஆம் பிரிவின்படி முடிவான மதிப்பீட்டு ஆணை பிறப்பித்தல் - தொடர்பாக

**பார்வை:** 1. தற்காலிகமான மதிப்பீட்டு ஆணை கடித எண் .........................

2.*தங்களின் விளக்க கடிதம் நாள் .....................................

1.0. *................ அன்று (ஆய்வு செய்யப்பட்ட நாள், மாதம், ஆண்டு) ............ (நேரம்) மணியளவில், கதவு எண், எஸ். எப். எண்......... (மின்னிணைப்பின் முழு முகவரி)இல் உள்ள, திரு / திருமதி........................ ............ பெயரில் இருக்கின்ற/ *இருந்த, .........அவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கின்ற / உபயோகப்படுத்தப்படுகின்ற மின் இணைப்பு எண்............என்னால், தங்கள் / தங்களுடைய சார்பாளர் திரு/திருமதி............ முன்னிலையில் ஆய்வு செய்யப்பட்டது.

2.0. ஆய்வின் போது பின்வருமாறு அனுமதிக்கப்படாத மின்பயன்பாடு கண்டறிப்பட்டது ........ (சட்டத்தின் 126-ஆம் பிரிவின்படி அனுமதியற்ற மின்பயன்பாட்டின் உள்ளபடியான வகையினை விவரிக்கவும்) மேற்சொன்ன அனுமதிக்கப்படாத மின்பயன்பாடு மின்சாரச் சட்டம், 2003, 126-ஆம் பிரிவின் கீழ் தண்டனைக்குரியதாகும்.

3.0 ஒரு தற்காலிக மதிப்பீட்டு ஆணை குறிப்பு (1)............ மேற்கோள் காட்டப்பட்டுள்ளபடி வழங்கப்பட்டது ........................................ மற்றும் உங்கள் ஆட்சேபனைகள் ஏதேனும் இருந்தால் அதைத் தாக்கல் செய்யவும் மேலும் தமிழ்நாடு மின்சாரம் மின் வழங்கல் விதித்தொகுப்பின்படி விசாரணைக்கு ஆஜராகவும் உங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டது.

4.0 தாங்கள் எந்த ஆட்சேபனையும் அல்லது விண்ணப்பமும் செய்யாததால் / தங்களுடைய கடிதத்தில் / நேர்முக விசாரணையின் போது தங்களால் கொடுக்கப்பட்ட விளக்கம், அளிக்கப்பட்ட பொருண்மைகள் மற்றும் பதிவுருக்களை விவரமான ஆய்வின் மூலம் மற்றும் கவனமாக பரிசீலித்ததன் பேரில், கீழே விவரிக்கப்பட்டுள்ளபடி இறுதி ஆணை இங்கே வழங்கப்படுகிறது:-

(கண்டறியப்பட்ட அனுமதிக்கப்படாத மின்பயன்பாடு, ஆய்வு அறிக்கை, வழங்கப்பட்ட விளக்கம் மற்றும் கண்டுபிடிப்புகள், முதலியன பற்றிய முழுமையான பகுப்பாய்விற்குபின் சம்பந்தப்பட்ட அலுவலரால் பிறப்பிக்கப்படவுள்ள நியாயமான / தெளிவான விவரமான ஆணை, அனுமதிக்கப்படாத மின்பயன்பாடு செய்யப்பட்டுள்ளதாக கோரப்பட்டதற்கு ஆதரவான தடையங்கள் / ஆவணங்கள் பற்றிய குறிப்பு, கூறப்பட்ட அனுமதிக்கப்படாத மின்பயன்பாடு தொடர்பாக மின்நுகர்வோரின் ஈடுபாடு அல்லது பங்கு, மின் நுகர்வோரின் கடமைகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பான விதிகள் மற்றும் ஒழுங்குமுறைவிதிகள், குற்றம் சாட்டப்பட்ட நபர் தனது எழுத்துப்பூர்வ பதிலில் சமர்பித்த சமர்ப்பிப்புகள் மற்றும் அவரது தனிப்பட்ட விசாரணையின் போது அவர் சமர்ப்பித்த ஆவணங்கள் / பொருட்கள் போன்றவை மற்றும் அதை ஏற்றுக்கொள்வதற்கும் நிராகரிப்பதற்கும் உண்டான காரணங்கள் அடங்கிய விவரமான மற்றும் காரணங்களை உள்ளடக்கிய ஆணை, சம்பந்தப்பட்ட அலுவலரால் வழங்கப்படவேண்டும்)

5.0 மின்சார சட்டம், 2003, 126-ஆம் பிரிவு (5) மற்றும் (6)-ஆம் உட்பிரிவுகளின்படி தங்களால் செலுத்தப்படவேண்டியுள்ள இறுதி மதிப்பீடு கட்டணங்கள் ரூ.---------------- (ரூபாய் ------------------ மட்டும் ) எனக் கணக்கிடப்பட்டுள்ளது. விரிவான கணக்கீட்டுதாள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது மேற்சொன்ன தொகை இந்த அறிவிப்பு பெறப்பட்ட 15 நாட்களுக்குள் செலுத்தப்படுதல் வேண்டும் தவறினால், மேலும் பதினைந்து நாட்கள் அறிவிப்பு காலத்திற்கு பின் மின் இணைப்பு துண்டிக்கப்பட நேரிடும்.

6.0 இந்த ஆணைக்கு எதிராக தாங்கள் மேல்முறையீடு செய்வதற்கு தேர்வு செய்தால் மின்சார சட்டம், 2003, 127-ஆம் பிரிவின் (2)-ஆம் உட்பிரிவின்படி மின் உரிமம்தாரரிடம் மதிப்பீட்டுத் தொகையில் பாதித்தொகையினை செலுத்தி ரூ.100 க்கான கேட்பு வரைவோலையுடன் இந்த ஆணை பெறப்பட்ட 30 நாட்களுக்குள் தமிழ்நாடு மின் வழங்கல் படிவம் 6-இல் மேல் முறையீட்டு அலுவலரிடம் மேல்முறையீடு (செயற்பொறியாளர் / மேற்பார்வைபொறியாளர் / இயக்கம்.....................(மேல் முறையீட்டு அலுவலரின் முகவரி)) செய்து கொள்ளலாம். கேட்பு வரவோலை ---- பெயரில் எடுக்கப்பட்டு ---- கொடுக்கத்தக்கதாக இருத்தல் வேண்டும்.

7.0 இந்த இறுதி மதிப்பீட்டு ஆணையை பெற்று கொண்டமைக்கான ஒப்புகையினை உடனடியாக அளிக்கும்படி தாங்கள் கேட்டு கொள்ளப்படுகிறீர்கள்

தங்கள் உண்மையுள்ள,

(மதிப்பீட்டு அலுவலர்)

**இணைப்பு :**

1. ஆய்வு அறிக்கை
2. பதிவு செய்யப்பட்ட வாக்குமூலம் (ஏதாவது இருப்பின்)
3. மகஜர்
4. தற்காலிக மதிப்பீட்டு ஆணை
5. படிவம் 8 ஆ—இன் படி பணித்தாள்

நகல் அனுப்பப்படுநர்.....................

இந்த ஆணை குற்றம் சுமத்தப்பட்டவருக்கு நாளிட்ட ஒப்புகையுடன் சார்பு செய்யப்படுவதற்கு ஏற்பாடு செய்யுமாறும் மற்றும் இந்த அலுவலகத்திற்கு ஒப்புகையை அனுப்புமாறும் அவர் அறிவுறுத்தப்படுகிறார்.

*எது பொருந்தத்தகாததோ அதனை அடித்து விடவும்.

(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)

சென்னை—600 032,
2024 ஆகஸ்ட் 22.

**சி. வீரமணி,**
*செயலாளர்,*
*தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்.*

**விளக்க அறிக்கை**

தமிழ்நாடு மின்வழங்கல் விதித் தொகுப்பின் 27வது விதியின் கீழ் உருவாக்கப்பட்ட மற்றும் அதிகாரம் அளிக்கப்பட்ட விதித் தொகுப்பு மறுஆய்வுக் குழுவின் பரிந்துரைகள் மற்றும் இந்திய அரசின் மின்சார அமைச்சகம், மின்சாரம் (நுகர்வோர் உரிமைகள்) விதிகள், 2020 மற்றும் அதன் திருத்தங்களைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு மின்வழங்கல் விதித் தொகுப்பு 2004 இன் தற்போதைய ஒழுங்குமுறை விதிகளில் பின்வரும் திருத்தங்கள் செய்யப்பட வேண்டியுள்ளது.

செயற்பொறியாளர் மற்றும் மற்றொருவர் Vs M/s சீதாராம் அரிசி ஆலை வழக்கில் {2011 இன் 8859 (2012) 2 SCC 108} இல் தெரிவிக்கப்பட்டது. மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பின்படி பிரத்தியேக வரையறையின்படி, மின்சாரத்தின் அனுமதிக்கப்படாத பயன்பாடு மற்றும் விநியோக வகைகள் குறித்து மேலும் தெளிவுபடுத்தப்பட வேண்டியுள்ளது.

மின்வழங்கல் விதித்தொகுப்பு மற்றும் மின்கட்டண வீத உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ள உரிமம்தாரரால் வசூலிக்கப்படும் பல்வேறு வகைக் கட்டணங்கள் மற்றும் பதிவுக் கட்டணங்கள் ஒன்றுக்கொன்று இணக்கமாக இருக்குமாறு செய்ய வேண்டியுள்ளது.

அனுமதிக்கப்பட்ட மின் தேவைக்கு மேலான மிகை மின் தேவையை நிர்வகிக்கும் ஒழுங்குமுறையை, அனுமதிக்கப்பட்ட மின் தேவைக்குள் மின் தேவையை கட்டுப்படுத்த நுகர்வோருக்கு அதிக வாய்ப்பை வழங்குவதற்கும், சிறந்த சுமை மேலாண்மை, மின் தேவை கட்டுப்பாடு மற்றும் தாழ்வழுத்த மின்வலை, மின் அளவி முறையில் ஒழுங்குபடுத்தப்பட்ட திறன்களை போதுமான அளவிற்கு பொருந்தக்கூடியவாறு நுகர்வோர் மத்தியில் ஒழுக்கத்தை கொண்டு வருவதற்கும் திருத்தியமைக்க வேண்டியுள்ளது.

புதிய மற்றும் தற்காலிக மின் இணைப்புக்காக நுகர்வோர் மின்னளவிகளை வாங்குவது தொடர்பான விதிகள், மின்னளவி தொடர்பான மின் நுகர்வோர் மற்றும் உரிமம்தாரரின் பல்வேறு கடமைகள், மின்நுகர்வோரின் விருப்பத்துக்கேற்ப மின்னளவியின் துல்லியத்தை மறுத்து சவால் சோதனையில் ஈடுபடும் நடைமுறைகள், நேர வரம்புகள், குறைபாடுள்ள/சேதமடைந்த/எரிந்த மின்னளவிகளை மாற்றுவதற்கான நடைமுறைகள், உயர் அழுத்த மின்னிணைப்புகளின் தாழ் அழுத்த மின் அளவீட்டில் கணக்கீடப்படும் இழப்பு போன்றவைகளை, மின்நுகர்வோருக்கு பிழையின்றியும் மற்றும் திறம்பட செயல்பட்டும் மின்நுகர்வோருக்கு சரியான சேவையை உறுதி செய்வதற்காக, திருத்தப்பட்டும் விரிவாகவும் மாற்ற வேண்டியுள்ளது.

மதிப்பீடு, பட்டியலிடல், பட்டியலிடல் வழங்குவதற்கான கால வரம்புகள் மற்றும் இவற்றிற்கான மின் உரிமம்தாரர் மற்றும் மின்நுகர்வோரின் கடமை தொடர்பான நடைமுறைகளை முறையான பட்டியலிடுவதற்கும் மின்நுகர்வோருக்கு சிறந்த சேவை வழங்குவதற்காகவும் திருத்தப்பட்டு விவரிக்கப்பட வேண்டியுள்ளது.

மதிப்பீடு மற்றும் பட்டியலிடல் போன்றவற்றில் சாத்தியமான குறைபாடுகளைத் தவிர்ப்பதற்கு திருத்தப்பட்ட மின்தேவைக்கான ஆவணங்களின் செயல்முறை, மிக திட்டவட்டமாக இருத்தல் வேண்டும். பருவகால தொழிற்சாலையின் நிதிச்சுமையை குறைக்கும் வகையில் அவ்வப்போது மின்சுமை குறைப்பை நடைமுறைப்படுத்தும் முறை அறிமுகப்படுத்தப்படுகிறது.

மின்னளவி பழுதடைந்த நிலையில், திருத்தத்திற்கான அடிப்படையில் பழுதடைந்த மின்னளவியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட தரவுகளுக்கு முன்னுரிமை அளித்து பட்டியலிடல் திருத்தத்திற்கான நடைமுறை திருத்தப்பட வேண்டியுள்ளது.

நேரடியாக பணம் செலுத்தும் முறையின் காரணமாக நுகர்வோருக்கு ஏற்படும் சிரமத்தைத் தவிர்க்க மின்னணு மூலம் கட்டணம் செலுத்தும் முறையை ஊக்குவிக்க வேண்டியுள்ளது.

மின்நுகர்வோரின் வங்கிக் கணக்கில் நேரடியாக வரவு வைக்கும் வகையில் பாதுகாப்பு வைப்புத்தொகையை திரும்பச் செலுத்தும் முறையினை நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளது.

மின்னுரிமதாரருக்கான நிலுவைத் தொகையை உரிய நேரத்தில் பெறுவதை உறுதி செய்யும் வகையில், மின்கட்டணம் செலுத்தாதவரின் மற்ற மின்னிணைப்புகளின் அனைத்து வகையான நிலுவை தொகையினை சேர்ப்பதற்கான வழிமுறையினை விரிவு படுத்த வேண்டியுள்ளது.

மின் நுகர்வோருக்கு உடனடியான சேவையை உறுதி செய்யும் வகையில் மின் வழங்கல் மீட்டுத்தரலுக்கான கால வரம்பு நிர்ணயிக்கப்பட வேண்டியுள்ளது.

அனுமதிக்கப்படாத மின் பயன்பாடு (மின் கட்டண வீதத்தை தவறாகப் பயன்படுத்தல், அங்கீகரிக்கப்படாத மின் விநியோக நீட்டிப்பு முதலியன) மற்றும் மின்திருட்டு தொடர்பான விதிகளின் தொடர்ச்சியான தவறான புரிதலின் காரணமாக, மின்னுரிமதாரரின் அதிகாரிகள், மின் திருட்டு விதிகளின் கீழ் அனைத்து மீறல்களையும் பதிவு செய்யும் தவறான அணுகுமுறையினை தடுக்கும் பொருட்டும் மற்றும் மின்நுகர்வோருக்கு ஏற்படும் சிரமங்களைத் தடுக்கவும், மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் 2021ம் ஆண்டின் 05.05.2022 ம் தேதி ப.ம. எண் 28 ன் உத்தரவின்படி இணங்கும்படி அனுமதிக்கப்படாத மின் பயன்பாடு மற்றும் மின்திருட்டு தொடர்பான விதிகளை தெளிவாக்கப்பட வேண்டியுள்ளது.

கணக்கிடுதல், காரண அறிவிப்பு / தற்காலிக மதிப்பீடு / இறுதி மதிப்பீடு / குற்ற நிறுத்திசைவு அறிவிப்புகள் முதலியன தொடர்பான படிவங்கள், மின்சார சட்டம், 2003 மற்றும் ஆணையத்தின் விதிமுறைகளுக்கு ஏற்ப முழுமையாக மறுபரிசீலனை செய்து சீர் திருத்த வேண்டியுள்ளது.

அதன்படி, இந்தத் திருத்தம், மேற்கண்ட விதிகளை ஆணையத்தின் விதிமுறைகளில் ஏற்படுத்த விழைகிறது.

(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)

சென்னை—600 032,
2024 ஆகஸ்ட் 22.

**சி. வீரமணி,**
*செயலாளர்,*
*தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்.*

**இணைப்பு**

**தமிழ்நாடு மின்சார வழங்கல் விதித்தொகுப்பு**

| *வ எண்.* | *இருந்துவரும் வகைமுறை* | *திருத்தத்தினை உள்ளடக்கிய வகைமுறை* |
|---|---|---|
| 1a. | **2. வரையறைகள்**<br>(a) to (s) xxx | **2. வரையறைகள்**<br>(a) to (s) xxx<br>(t) “அங்கீகரிக்கப்படாத மின் பயன்பாடு” என்பது மின்சார சட்டப்பிரிவு 126—இன் கீழ் குறிப்பிடப்பட்ட அதே பொருளைக் கொண்டதாகும். இச்சட்டத்தின் 135வது பிரிவின் கீழ் கூறப்பட்டுள்ள அங்கீகரிக்கப்படாத மின் பயன்பாடு என்பது மின் திருட்டு / சட்டவிரோத மின் மீட்டுதரலுக்கு மட்டுமே பொருந்தும். |
| 1b. | (இந்த விதித்தொகுப்பிலோ அல்லது உரிய சட்டத்திலோ அல்லது பொது வாக்கிய பிரிவுகள் (general clause) சட்டம் 1897—இலோ (1897 ஆண்டின் 10வது மையச் சட்டம்) பயன்படுத்தப்படாத சொற்களும் வாக்கியங்களும் நடப்பில் அமைந்த பொறியியல் மற்றும் வணிகவியல் துறைகளின் வழக்கில் புரிந்து கொள்ளப்படும் அதே பொருள்களை குறிப்பிடும். | இந்த விதித்தொகுப்பில் பயன்படுத்திய சொற்களும் வாக்கியங்களும் இந்த விதித்தொகுப்பிலோ அல்லது உரிய சட்டத்திலோ அல்லது மின்சாரம் நுகர்வோர் விதிகளின் உரிமைகள் 2020—லோ அல்லது ஆணையத்தின் வேறு ஏதேனும் ஒழுங்குமுறை விதிகள் அல்லது பொது வாக்கிய பிரிவுகள் (general clause) சட்டம் 1897—லோ (1897 ஆண்டின் 10—வது மத்திய சட்டம்) வரையறுக்கப்படாத பட்சத்தில் அவைகள் நடப்பில் உள்ள பொறியியல் மற்றும் வணிகவியல் துறைகளின் பேச்சு வழக்கில் புரிந்து கொள்ளப்படும் அதே பொருள்களை குறிக்கும். |
| 2. | **3. மின் வழங்கல் வகைகள்**<br>(1) xxx<br>(2) xxx<br>(3) குறித்துரைக்கப்பட்ட அளவைவிட குறைந்தளவு மின்தேவைக்காக, மின்நுகர்வோர் உயரளவு மின்னழுத்தத்தை தெரிவு செய்வாரானால், மின்நுகர்வோர், அத்தகைய உயரளவு மின்னழுத்தில் மின்வழங்கலுக்காக உரிமம்தாரரால் செய்ய நேர்ந்த அதிகப்படியான செலவுகளை ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். | **3. மின் வழங்கல் வகைகள்**<br>(1) xxx<br>(2) xxx<br>(3) குறித்துரைக்கப்பட்ட அளவைவிட குறைந்தளவு மின்தேவைக்காக, மின்நுகர்வோர் உயரளவு மின்னழுத்தத்தை தெரிவு செய்வாரானால், மின்நுகர்வோர், அத்தகைய உயரளவு மின்னழுத்தில் மின்வழங்கலுக்காக உரிமம்தாரரால் செய்ய நேர்ந்த செலவுகளை ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். |

| வ எண். | இருந்துவரும் வகைமுறை | திருத்தத்தினை உள்ளடக்கிய வகைமுறை |
|---|---|---|
| 3. | **4. உரிமம்தாரர் வசூலிக்கக்கூடிய கட்டணங்கள்**<br>(1) XXX<br>(2) பல்வகைக் கட்டணங்கள் என்னவெனில் :–<br>(I) மின்கொண்மி (Capacitor) ஈட்டுத் தொகைக் கட்டணம்<br>(II) கூடுதல் மின் தேவைக்கட்டணம்<br>(III) கூடுதல் ஒப்பந்தச்சுமைக் கட்டணம்<br>(IV) தாமதச்செலுத்த உபரிக் கட்டணம்<br>(V) அவ்வப்போது கட்டும்படி விதிக்கும் கூடுதல் காப்பு வைப்புத்தொகை<br>(VI) மின்னிணைப்பு / மின் தொடர் / கட்டமைப்பு மற்றும் சாதனங்கள் மாற்றல் கட்டணம்<br>a) தற்காலிகமாகவோ / நிரந்தரமாகவோ பிரித்தெடுப்பதற்கான செலவினம்<br>b) தற்காலிக பிரித்தெடுத்தலின் பொழுது மறுநிறுவுதல் செலவினம்.<br>(VII) பெயர் மாற்றல் கட்டணம்<br>(VIII) மறு இணைப்பு கட்டணம்<br>(IX) மின்னளவி அட்டை பதிலீட்டுக் கட்டணம்<br>(X) திருப்பப்பட்ட காசோலை சேவைக் கட்டணம்<br>(XI) மின்னளவி சார்ந்த கட்டணங்கள்<br>(XII) விண்ணப்பப் பதிவுக் கட்டணம்<br>(XIII) மின்னிணைப்புக் கட்டணங்கள்<br>(XIV) மின் வழங்கல் கட்டுப்பாடு வரையறையின்போது கூடுதல் தேவைக் கட்டணங்கள் மற்றும் கூடுதல் மின் கட்டணங்கள்<br>(XV) காசோலை மூலம் பணம் செலுத்தும் வசதி – மறு பயனாக்க செலவுகள்<br>(XVI) உபகரணங்கள் / அமைப்புகளின் சோதனை செலவினம் | **4. உரிமம்தாரர் வசூலிக்கக்கூடிய கட்டணங்கள்**<br>(1) XXX<br>(2) பல்வகைக் கட்டணங்கள் என்னவெனில் :–<br>(I) மின்கொண்மி (Capacitor) ஈட்டுத் தொகைக் கட்டணம்.<br>(II) கூடுதல் மின் தேவைக்கட்டணம்.<br>(III) கூடுதல் ஒப்பந்தச்சுமைக் கட்டணம்.<br>(IV) தாமதச்செலுத்த உபரிக் கட்டணம்.<br>(V) அவ்வப்போது கட்டும்படி விதிக்கும் கூடுதல் காப்பு வைப்புத்தொகை.<br>(VI) மின்னிணைப்பு / மின் தொடர் / கட்டமைப்பு மற்றும் சாதனங்கள் மாற்றல் கட்டணம்.<br>(a) தற்காலிகமாகவோ/ நிரந்தரமாகவோ பிரித்தெடுப்பதற்கான செலவினம்.<br>(b) தற்காலிக பிரித்தெடுத்தலின் பொழுது மறுநிறுவுதல் செலவினம்.<br>(VII) பெயர் மாற்றல் கட்டணம்.<br>(VIII) மறு இணைப்பு கட்டணம்.<br>(IX) மின்னளவி அட்டை பதிலீட்டுக் கட்டணம்.<br>(X) திருப்பப்பட்ட காசோலை சேவைக் கட்டணம்.<br>(XI) மின்னளவி சார்ந்த கட்டணங்கள்.<br>(XII) விண்ணப்பப் பதிவுக் கட்டணம்.<br>(XIII) மின்னிணைப்புக் கட்டணங்கள்.<br>(XIV) மின் வழங்கல் கட்டுப்பாடு வரையறையின்போது கூடுதல் தேவைக் கட்டணங்கள் மற்றும் கூடுதல் மின் கட்டணங்கள்.<br>(XV) காசோலை மூலம் பணம் செலுத்தும் வசதி – மறு பயனாக்க செலவுகள்<br>(XVI) உபகரணங்கள் / அமைப்புகளின் சோதனை செலவினம்.<br>(XVII) பெரும் திரளான ஆய்வு (Mass Raid) போன்ற வழக்கமான ஆய்வு அல்லாத, காலமுறை சோதனைக்குண்டான ஆய்வு கட்டணம்.<br>(XVIII) மின் நுகர்வோரின் கோரிக்கைக்கிணங்க தற்காலிக மின் துண்டிப்புக்கான கட்டணம்.<br>(XIX) சான்றளிக்கப்பட்ட நகல்களை நுகர்வோருக்கு வழங்குவதற்கான கட்டணம். |

| *வ எண்.* | *இருந்துவரும் வகைமுறை* | *திருத்தத்தினை உள்ளடக்கிய வகைமுறை* |
|---|---|---|
| 4. | **5. பல்வகைக் கட்டணங்கள்**<br>(1) XXX<br>(2) மிகைமின்தேவைக்கட்டணம்<br>ஒப்பளித்த (Sanctioned) மின்தேவையை மிஞ்சிவிட்டால் நுகர்வோர் செலுத்த வேண்டிய மிகை மின் தேவைக்கட்டணம் பின்வருமாறு: | **5. பல்வகைக் கட்டணங்கள்**<br>(1) XXX<br>(2) மிகை மின் தேவைக் கட்டணம்<br>ஒப்பளித்த (sanctioned) மின்தேவையை மிஞ்சிவிட்டால் நுகர்வோர் செலுத்த வேண்டிய மிகை மின் தேவைக் கட்டணம் பின்வருமாறு: |
| | I) உ.அ (HT) மின்வழங்கலைப் பொறுத்த வரையில், எம்மாதப் பெரும மின்தேவைக் கட்டணமும் மின் வழங்கல் இருப்பிடத்தில் குறிப்பிட்ட அம்மாதத்தில் பதிவாகிய பெரும கி.வோ.ஆ (KVA) தேவை, அவ்வப்போது ஆணையம் அறிவிக்கும் ஒப்பளித்த மின் தேவையின் விழுக்காடு, இவற்றில் எது அதிகமோ, அதன் அடிப்படையில் அமைய வேண்டும். மிஞ்சி விட்ட தேவைக்கு மட்டுமே இயல்புக் கட்டணத்தைப் போன்று இரு மடங்க கட்டணத்தைக் கணக்கிட வேண்டும். | i) உ.அ (HT) மின் வழங்கலைப் பொறுத்தவரையில், எம்மாத உச்ச மின்தேவைக் கட்டணமும் மின் வழங்கல் இருப்பிடத்தில் குறிப்பிட்ட அம்மாதத்தில் பதிவாகிய உச்ச கி.வோ.ஆ (kVA) தேவை, அவ்வப்போது ஆணையம் அறிவிக்கும் ஒப்பளித்த மின் தேவையின் விழுக்காடு, இவற்றில் எது அதிகமோ, அதன் அடிப்படையில் அமைய வேண்டும். மிஞ்சி விட்ட தேவைக்கு மட்டுமே இயல்புக் கட்டணத்தைப் போன்று இரு மடங்கு கட்டணத்தைக் கணக்கிட வேண்டும். |
| | II) தா.அ (LT) மின் வழங்கலைப் பொறுத்த வரையில் | (ii) தா. அ (LT) மின் வழங்கலைப் பொறுத்த வரையில்; |
| | A) வீட்டு, வேளாண்மை மின்னிணைப்புகளுக்கு மிகைமின் தேவைக்கட்டணம் பொருந்தாது. | a) கூடுதல் மின் தேவைக் கட்டணம் வீட்டு மற்றும் வேளாண்மை மின்னிணைப்புகள் தவிர அணைத்து மின் இணைப்புகளுக்கும் பொருந்தும். |
| | B) 18.6KW (25HP)—க்குச் சமமான அல்லது அதைவிடக் குறைந்த ஒப்பந்தம் பெற்றத் தேவையுடன் பிறவகையான தாழ் மின்னழுத்த மின்னிணைப்பிற்காக, ஒப்பந்தம் பெற்றத் தேவைக்குச் சமமான அல்லது அதைவிடக் குறைவாக இணைந்த சுமை இருக்கிடவிடத்து, மிகத் தேவைக் கட்டணங்கள் பொருந்தததக்கதாகாது. | b) வீடு மின் இணைப்புகளில் பதிவாகும் மின்தேவை, வழக்கமான மதிப்பீட்டின் போது மதிப்பீடு செய்யப்பட வேண்டும். ஏதேனும் கட்டண சுழற்சியில், வழக்கமான மதிப்பீட்டு தேதியின் முந்தைய 12 மாத காலத்தில், மூன்றாவது முறையாக பதிவான மின் தேவையானது, ஒப்பளித்த மின் தேவையை மிஞ்சினால், பின்வரும் விளக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி முறைப்படுத்தப்படும். |
| | **குறிப்பு**<br>I) 18.6 KW (25HP)—க்கு குறைவான அல்லது சமமான ஒப்பந்தம் பெற்றத் தேவையுடனான மின்னிணைப்புகளுக்காக, நுகர்வோரின் இணைந்த சுமை ஒப்பந்தம் பெற்றத் தேவைக்கு மேற்படுகிறவிடத்தெல்லாம், உரிமம்தாரர், தேவையைப் பதிவு செய்யும் வசதியுடனான மின்னளவியைப் பொருத்துதல் வேண்டும் மற்றும் நுகர்வோரை, மிகைத் தேவைக்காக விதிக்கத்தக்க வகையின் கீழ் கொண்டு வருதல் வேண்டும். மின்னளவியைப் பொருத்திய பின்பு, பதிவு செய்யப்பட்ட தேவையானது, ஒப்பந்தம் பெற்றத் தேவைக்கு மேற்படுமானால், தற்போதுள்ள தேவை, நுகர்வோருக்குத் தகவல் கொடுத்த பின்பு, பதிவு செய்யப்பட்ட தேவை அளவுக்கு மாற்றப்படுதல் வேண்டும் மற்றும் கூடுதல் தேவை நீட்டிப்பிற்காகப் பொருந்தத்தக்க தொடர்புடைய கட்டணங்கள் அனைத்தும், அடுத்த பட்டியலில் சேர்க்கப்படுதல் வேண்டும். உரிமம்தாரர் தேவையைப் பதிவு செய்யும் வசதியுடனான மின்னளவியைப் பொருத்தும் வரையில், மிகைத் தேவைக் கட்டணம் எதுவும் வசூலிக்கத்தக்கதாகாது மற்றும் மிகைத் தேவைக்காக விதித்தத் தக்க வகையின் கீழ் நுகர்வோரைக் கொண்டு வருதல் ஆகாது. | c) ஒழுங்குமுறை விதியின்படி மிகை மின் தேவைக் கட்டணம் செலுத்த வேண்டிய வகையினத்துக்குள் உள்ள அனைத்து மின் இணைப்புகளிலும், உரிமம்தாரர் மிகை மின் தேவையைப் பதிவு செய்யும் வசதியுள்ள மின்னளவியைப் பொருத்த வேண்டும். மிகை மின் தேவையைப் பதிவு செய்யும் வசதியுள்ள மின்னளவியை பொருத்தும் வரை, மிகை மின் தேவை கட்டணம் வசூல் செய்யப்படமாட்டாது.<br>(d) பல்வேறு வகை நுகர்வோருக்கு பொருந்தக்கூடிய மிகை மின் தேவை கட்டணமானது, கீழே அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளபடி, ஒப்பந்த மின் தேவையை விட மிகையாகவுள்ள ஒவ்வொரு கிலோ வாட்(கி.வா.) அளவுக்கும் அல்லது அதன் பகுதிக்கும் மொத்த மின்னாற்றலுக்கான கட்டணத்தின் சதவீத விழுக்காடு இருக்க வேண்டும் : |

| வ எண். | இருந்துவரும் வகைமுறை | திருத்தத்தினை உள்ளடக்கிய வகைமுறை |
|---|---|---|

**இருந்துவரும் வகைமுறை**

(c)மேலே துணைப்பிரிவுகள் a, b ஆகியவற்றில் குறிப்பிட்டவற்றைத் தவிர பிற தா.அ. மின்னிணைப்புகளுக்கு, ஒப்பந்த மின் தேவை 18.6 கி.வா (25 ப.தி) அளவுக்கு அதிகமாகவும் ஒப்பந்த மின் தேவை 18.6 கி.வா (25 ப.தி) அளவுக்குக் குறைந்திருந்தாலும் மின் தேவைப் பதிவு வசதி பெற்றுள்ளவர்களுக்குக் கட்ட வேண்டிய மின் தேவைக் கட்டணம் கட்ட வேண்டும்.

(I) ஒப்பளிக்கப்பட்ட மின்தேவை 112 கிவா அளவுக்கு குறைவாகவும் மற்றும் 112 கிவா வரையிலும் இருக்கும்போது.

(A) பதிவு செய்யப்பட்ட மின்தேவை 112 கிவா அளவுக்கு மிகையாகாமல் இருக்கும்போது ஒப்பளிக்கப்பட்ட மின்தேவையை விட மிகையாகும். ஒவ்வொரு கிவா அல்லது அதனுடைய பகுதி ஒவ்வொன்றிக்கும், மொத்த மின்னாற்றல் கட்டணங்களில் 1 விழுக்காடு வீதம்.

விளக்கம்: மொத்த மின்னாற்றல் கட்டணங்கள் என்ற சொற்றொடர் மின்னாற்றல் வழங்கப்பட்டமைக்கான கட்டணங்கள் என்ற சொற்றொடருக்கான அதே பொருளைக் கொண்டுள்ளதாக இருத்தல் வேண்டும். இது நிலையான / மின்தேவைக் கட்டணங்கள் மற்றும் மின்னாற்றல் கட்டணங்கள் ஆகிய இரண்டினையும் உள்ளடக்கும்.

(B) பதிவுசெய்யப்பட்ட மின்தேவை 112 கிவா அளவுக்கு மேற்படுகிறவிடத்து, ஒப்பளிக்கப்பட்ட மின்தேவைக்கு மிகையான கிவா அல்லது, அதனுடைய பகுதி ஒவ்வொன்றிற்கும்:——

– 112 கிவா வரை ஒவ்வொரு கிவா அல்லது அதனுடைய பகுதி ஒவ்வொன்றிற்கும் வழங்கப்பட்ட மின்சாரத்திற்கான கட்டணங்களில் 1 விழுக்காடு வீதம்

–மற்றும் 112 கிவா அளவுக்கு மிகையான முதல் இரண்டு நிகழ்வுகளுக்கு, ஒவ்வொரு கிவா அல்லது அதனுடைய பகுதி ஒவ்வொன்றிற்கும். 1.5 விழுக்காடு வீதம்

–மற்றும் 112 கிவா அளவுக்கு மிகையான மூன்றாவது நிகழ்வுக்கு, ஒவ்வொரு கிவா அல்லது அதனுடைய பகுதி ஒவ்வொன்றிற்கும் 3 விழுக்காடு வீதம்

–மற்றும் அதன்பின்பு, அதாவது 112 கிவா அளவுக்கு மிகையான நான்காவது மற்றும் பிந்திய நிகழ்வுகளுக்கு ஒவ்வொரு கிவா அல்லது அதனுடைய பகுதி ஒவ்வொன்றிற்கும் 10 விழுக்காடு வீதம் ;–

(II) ஒப்பளிக்கப்பட்ட மின்தேவை 112 கிவா அளவுக்கு அதிகமாகவும் ஆனால் 150 கிவா அளவுக்கு குறைவாகவும் அல்லது சமமாகவும் இருக்கும்போது:

(A) பதிவுசெய்யப்பட்ட மின்தேவை 150 கிவா அளவுக்கு மிகையாகாமல் இருக்கும்போது, ஒப்பளிக்கப்பட்ட மின்தேவையைவிட மிகுதியான கிவா அல்லது அதனுடைய பகுதி ஒவ்வொன்றிற்கும் வழங்கப்பட்ட மின்சாரத்திற்கான கட்டணங்களில் 1 விழுக்காடு வீதம். இந்த விதித்தொகுப்பின் 3 ஆம் ஒழுங்குமுறைவிதியின் (i) ஆம் உள் ஒழுங்குமுறைவிதியின் (b) கூறின் வரம்புரையின்படி "வழங்கப்பட்ட மின்சாரத்திற்கான கட்டணங்கள்" என்பது நிலையான / மின்தேவைக் கட்டணங்கள் மற்றும் மின்னாற்றலுக்கான கட்டணங்கள் ஆகும்.

**திருத்தத்தினை உள்ளடக்கிய வகைமுறை**

| ஒப்பளித்த மின்தேவை | ஒப்பளித்த மின்தேவைக்கு மேல் பதிவான மின்தேவை | முதல் நிகழ்வு | இரண்டாம் நிகழ்வு | மூன்றாம் நிகழ்வு | பிந்தைய நிகழ்வுகள் |
|---|---|---|---|---|---|
| 112 கி.வா. வரை | 112 கி.வா. வரை | 1 % | 1% | 1% | 3வது நிகழ்வில் முறைப்படுத்தப் பட்டிருக்க வேண்டும் |
| | 112 கி.வா வுக்கு மேல் 150 கி.வா. வரை | 1.5 % | 1.5% | 3% | 3வது நிகழ்வில் முறைப்படுத்தப்ப ட்டிருக்க வேண்டும் மற்றும் தமிழ்நாடு மின்வழங்கல் விதித்தொகுப்பு ஒழுங்குமுறை விதி 3(1)(b) இன் கீழ் குறிப்பிடப் பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளும் பொருந்தும் |
| 112 கி.வா வுக்கு மேல் 150 கி.வா. வரை | 150 கி.வா. வரை | 1 % | 1% | 1% | 3வது நிகழ்வில் முறைப்படுத்தப் பட்டிருக்க வேண்டும் |
| | 150 கி.வா. வுக்கு மேல் | 1 % | 1.5% | 3% | 10 % (உ.அ. மின் இணைப்பு பெறும் வரை) |

**விளக்கம் :**

1. மொத்த மின்னாற்றல் கட்டணங்கள்என்பது நிலையான / மின்தேவைக் கட்டணங்கள் மற்றும் மின்னாற்றல் கட்டணங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய மொத்த மின்னாற்றல் வழங்கப் பட்டமைக்கான கட்டணங்களாகும்.

2. மேலே உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முதல், இரண்டாவது, மூன்றாவது மற்றும் அதன் பின் ஏற்படும் நிகழ்வுகள், எந்தவொரு மதிப்பீடு சுழற்சியின் வழக்கமான மதிப்பீட்டின் தேதிக்கு முந்தைய 12 மாதங்களுக்குள் நிகழ்ந்த நிகழ்வுகளைக் குறிக்கும். இந்த காலகட்டம் தொடங்குவதற்கு முன்பு கடந்த காலத்தில் நடந்த மறுநிகழ்வுகளின் எண்ணிக்கையை கணக்கிலெடுக்காமல், பன்னிரெண்டு மாதங்களுக்குள் நடந்த முதல் நிகழ்விலிருந்து மட்டுமே நிகழ்வுகளின் எண்ணிக்கை தொடங்கும்.

3. ஒப்பளித்த மின் தேவைக்கு மேல் மிகை மின்தேவை பதிவாகும் முதல் மற்றும் இரண்டாவது நிகழ்வுகளில் பதிவாகும் மின்தேவையை ஒப்பளித்த மின்தேவைக்குள் கட்டுப்படுத்தும்படி மின் உரிமம்தாரர், மின் நுகர்வோருக்கு ஒரு அறிவிப்பை வழங்க வேண்டும். மின் நுகர்வோருக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும், சரியான நேரத்தில் தீர்வு நடவடிக்கைகளை எடுக்க உணர்த்துவதற்கும், ஏற்றவாறு இந்த உள் ஒழுங்குமுறை விதி தொகுப்பில் அனைத்து விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளும் அறிவிப்பில் அடங்கியிருக்க வேண்டும்.

4. மின்நுகர்வோர், ஒப்பளித்த மின் தேவைக்குள் பதிவாகும் மின் தேவையை கட்டுப்படுத்தவும், மீண்டும் நிகழாமல் தடுக்கவும், உரிய நேரத்தில் தீர்வு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

| வ எண். | இருந்துவரும் வகைமுறை | திருத்தத்தினை உள்ளடக்கிய வகைமுறை |
|---|---|---|
| | (B) பதிவுசெய்யப்பட்ட மின்தேவை 150 கிவா.அளவுக்கு மிகையாகும்போது, ஒப்பளிக்கப்பட்ட மின்தேவைக்கு மிகையான கிவா அல்லது அதனுடைய பகுதி ஒவ்வொன்றிற்கும்:—<br>—150 கிவா வரையிலும் வழங்கப்பட்ட மின்சாரத்திற்கான கட்டணங்களின் 1 விழுக்காடு வீதம்<br>— மற்றும் முதல் இரண்டு நிகழ்வுகளுக்கு, 150 கிவா அளவுக்குக் கூடுதலான கிவா அல்லது அதனுடைய பகுதி ஒவ்வொன்றிற்கும் 1.5 விழுக்காடு வீதம்<br>— மற்றும் மூன்றாவது நிகழ்வுக்கு, 150 கிவா அளவுக்குக் கூடுதலான கிவா அல்லது அதனுடைய பகுதி ஒவ்வொன்றிற்கும் 3 விழுக்காடு வீதம்<br>—மற்றும் அதன்பின்பு, அதாவது நான்காவது நிகழ்வு மற்றும் பிந்திய நிகழ்வுக்கு 150 கிவா அளவுக்குக் கூடுதலான கிவா அல்லது அதனுடைய பகுதி ஒவ்வொன்றிற்கும் 10 விழுக்காடு வீதம்<br>(III) 112 கிவா மற்றும் அதற்கு குறைவான ஒப்பளிக்கப்பட்ட மின்தேவையுடைய நுகர்வோரின் ஒப்பளிக்கப்பட்ட மின்தேவையை திருத்தியமைத்தல், 112 கிவா அளவுக்குக் கூடுதலான தாழ்வழுத்த வகை ஆனால் 150 கிவா அளவுக்குக் குறைவான அல்லது அதற்கு சமமான உயரழுத்த வகைக்கு மாற்றுதல்:<br>இரண்டாவது மற்றும் பிந்திய நிகழ்வுகளில் பதிவுசெய்யப்பட்ட மின்தேவை ஒப்பளிக்கப்பட்ட மின்தேவையைவிட மிகையாகும் 112 கிவா மற்றும் அதற்கு குறைவாக ஒப்பளிக்கப்பட்ட மின்தேவை அளவுடைய நுகர்வோருக்கு, —<br>(A) பதிவுசெய்யப்பட்ட மின்தேவை 112 கிவா அளவுக்கு மிகையாகாத நிகழ்வில், நுகர்வோருக்கு தகவல் அளித்துவிட்டு இருந்துவரும் மின்சுமை ஒப்பளிப்பு இரண்டாவது நிகழ்விலிருந்து ஒரு மாதத்திற்குள் பதிவுசெய்யப்பட்ட பேரளவு மின்தேவையின் அளவுக்கு மாற்றியமைக்கப்பட்டு மற்றும் கூடுதல் மின்சுமைக்கு பொருந்தக்கூடிய தொடர்புடைய கட்டணங்கள் அடுத்த மின்கட்டண பட்டியலில் சேர்க்கப்படுதல் வேண்டும்.<br><br>(B) பதிவுசெய்யப்பட்ட மின்தேவை 112 கிவா அளவுக்கு அதிகமாக ஆனால் 150 கிவா அளவுக்குள் அல்லது அதற்கு சமமாக இருக்கும் நிகழ்வுகளில் (3) ஆம் ஒழுங்குமுறைவிதியின் (1) ஆம் உள் ஒழுங்குமுறைவிதியின் (b) கூறின் வரம்புரையிலுள்ள நிபந்தனைகளை ஏற்பதற்குட்பட்டு பொருந்தக்கூடிய தொடர்புடைய அனைத்து கட்டணங்களையும் செலுத்தும் நேர்வில், இருந்துவரும் மின்சுமை ஒப்பளிப்பு பதிவுசெய்யப்பட்ட பேரளவு மட்டம் வரையிலும் திருத்தியமைக்கப்படுதல் வேண்டும். எனினும், 3 ஆம் ஒழுங்குமுறைவிதியின் (1) ஆம் உள் ஒழுங்குமுறைவிதியின் (b) கூறின் வரம்புரையின் கீழ், நுகர்வோர் தாழ்வழுத்த வகை வரம்பான 150 கிவா அளவுக்கு மாறுதலுக்கு விருப்பத்தேர்வு செய்யவில்லை யெனில், நுகர்வோருக்கு தகவல் அளித்துவிட்டு, இருந்துவரும் மின்சுமை ஒப்பளிப்பு இரண்டாவது நிகழ்விலிருந்து ஒரு மாதத்திற்குள் 112 கிவா அளவிற்கு மாற்றியமைக்கப்படுதல் வேண்டும் மற்றும் கூடுதல் மின்சுமைக்கு பொருந்தக்கூடிய தொடர்புடைய அனைத்து கட்டணங்களும் அடுத்த மின்கட்டண பட்டியலில் சேர்க்கப்படுதல் வேண்டும் | 5. மூன்றாவது நிகழ்வின் போது, மிகை மின் தேவைக் கட்டணம் மதிப்பீடு செய்வதுடன், ஒப்பளித்த மின்தேவையானது பதிவான மின்தேவையளவின் அடுத்த கி.வா. க்கு வட்டமாக கணக்கிடப்பட்டு மாற்றியமைக்கப்படும்.<br>வீட்டு மின்நுகர்வோருக்கு, மிகை மின் தேவைக் கட்டணம் எந்த நிகழ்வுக்கும் பொருந்தாது. ஆயினும் , மூன்றாவது நிகழ்வின் போது, தற்போதுள்ள ஒப்பளித்த மின்தேவை அளவை, மூன்றாவது நிகழ்வின் போது, பதிவான மின் தேவையின் அளவிற்கு அடுத்த கி.வா. க்கு வட்டமாக கணக்கிடப்பட்டு மாற்றியமைக்கப்படும்.<br>மேலே உள்ள அனைத்து வகைகளிலும், மூன்றாவது நிகழ்வின் போது பதிவான மின்தேவை அடுத்த கி.வா. க்கு வட்டமாக கணக்கிட்டு முறைப்படுத்தப்பட்டவுடன், மிகையாகிவிட்ட மின் தேவையின் அளவிற்கான வளர்ச்சிக் கட்டணங்களை, அடுத்த கணக்கீட்டில் சேர்க்கப்பட்டு, கணக்கிடப்பட்ட மிகை மின் தேவை கட்டணம், பதிவான மின்தேவை அளவிற்கு மின்தேவையை முறைப்படுத்துதல் மற்றும் வளர்ச்சி கட்டணம் ஆகிய விவரங்களடங்கிய அறிவிப்பை மின் நுகர்வோருக்கு வழங்கப்பட வேண்டும்.<br>6. மிகையான மின் தேவையை முறைப்படுத்துவதற்கு தேவைப்படும் உள்கட்டமைப்பு வளர்ச்சிப்பணிகள் மின் உரிமம்தாரரால் மேற்கொள்ளப்படும்.<br>7. மிகையான மின் தேவை பதிவான மூன்றாவது நிகழ்வின் போது நடைமுறையில் உள்ள வளர்ச்சிக் கட்டணங்கள் மட்டுமே செலுத்தப்பட வேண்டியதாகும்.<br>8. பன்னிரெண்டு மாத காலத்தில் மூன்றாவது முறையாக பதிவான தேவை 150 கி.வா. ஐத் தாண்டினால், மிகை மின் தேவைக்கட்டணத்தை வசூலிப்பதோடு, மூன்றாவது நிகழ்வின் போது பதிவான அதிகபட்ச மின் தேவையின் அளவிற்கான அனைத்து கட்டணங்களையும் குறிப்பிட்டு தாழ்வழுத்த மின்னிணைப்பை, உயர் அழுத்த மின் இணைப்பாக மாற்றுவதற்கு 'ஒரு மாத கால அறிவிப்பை' உரிமம்தாரர் மின் நுகர்வோருக்கு வழங்க வேண்டும்.<br>9. உயர் அழுத்த மின் இணைப்பிற்கு மாறும் வரை, ஒப்பளித்த மின் தேவை 150 கி.வா. அளவிற்கு மறு நிர்ணயம் செய்யப்படும். மூன்றாவது நிகழ்வுக்குப் பிறகு அனைத்து பிந்தைய நிகழ்வுகளும் அடுத்து வரும் 12 மாத கால அளவுகளிலும் ஒட்டுமொத்தமாக கணக்கிடப்படும். அதன்படி, மூன்றாவது நிகழ்விற்குப் பிறகு 150 கி.வா. தாண்டிய ஒவ்வொரு நிகழ்விலும் 10% அளவுக்கு மிகைமின்தேவை கட்டணம், உயர் அழுத்த மின் இணைப்பு பெறும்வரை செலுத்தப்பட வேண்டும்.<br>10. இந்த உள் ஒழுங்குமுறை விதியின் கீழ் புதிதாக கொண்டு வரப்படும் அனைத்து மின்னிணைப்புகளுக்கும் இந்த உத்தரவு அறிவிக்கப்பட்ட தேதி அல்லது மின் தேவை பதிவு வசதியுடன் கூடிய மின்னளவி நிறுவப்பட்ட தேதி, எது பிந்தையதோ, அதற்குப் பிறகுதான் தொடர்புடைய வரைமுறைகள் பொருந்தும்.<br>11. இந்த ஒழுங்குமுறை விதித் தொகுப்பின் அறிவிக்கைக்கு முன்னர் கடந்த காலத்தில் பதிவான மின் தேவை ஒப்பளித்த மின்தேவையை விட அதிகமாகி பின்னர் ஒப்பளித்த மின்தேவையில் திரும்பி தொடர்ந்து பன்னிரெண்டு மாதங்களுக்கு நிலைத்து இருந்து, இந்த அறிவிக்கை வெளியிடப்பட்ட தேதியில் முறைப்படுத்தப்படாமல் இருக்கும் மின்னிணைப்புகள், ஒப்பளித்த மின்தேவையில் தொடரலாம். |

| வ எண். | இருந்துவரும் வகைமுறை | திருத்தத்தினை உள்ளடக்கிய வகைமுறை |
|---|---|---|
| | ஒப்பளிக்கப்பட்ட மின்தேவையான 112 கிவா அளவைவிட பதிவு செய்யப்பட்ட மின்தேவை மிகுதியாகும் மூன்றாவது மற்றும் அடுத்துவரும் நிகழ்வுகளுக்கு பதிவு செய்யப்பட்ட மின்தேவை அளவில் உயரழுத்த மின்னிணைப்புக்கு செலுத்தப் படவேண்டிய தொடர்புடைய அனைத்து கட்டணங்களையும் குறிப்பிட்டு தாழ்வழுத்த மின்னிணைப்பினை உயரழுத்த மின்னிணைப்பாக மாற்றுவதற்கான ஒருமாத அறிவிப்பினை உரிமம்தாரர் வெளியிடுதல் வேண்டும்.<br><br>(IV) 112 கிவா அளவுக்குக் கூடுதலாக ஆனால் 150 கிவா அளவுக்கு குறைவாகவும் அல்லது சமமாகவும் உள்ள நுகர்வோருக்கான ஒப்பளிக்கப்பட்ட மின்தேவை திருத்தியமைத்தல், உயரழுத்த வகைக்கு மாற்றுதல்:<br><br>112 கிவா அளவுக்குக் கூடுதலாக ஆனால் 150 கிவா அளவுக்கு குறைவாகவும் அல்லது சமமாகவும் உள்ள நுகர்வோருக்கு பதிவுசெய்யப்பட்ட மின்தேவை ஒப்பளிக்கப்பட்ட மின்தேவையை விட மிகையாகும் இரண்டாவது மற்றும் அடுத்துவரும் நிகழ்வுகளில்<br><br>(A) பதிவுசெய்யப்பட்ட மின்தேவை 150 கிவா அளவுக்கு மிகையாகாத நிகழ்வில், நுகர்வோருக்கு தகவல் அளித்துவிட்டு, இருந்துவரும் மின்சுமை ஒப்பளிப்பு இரண்டாவது நிகழ்விலிருந்து ஒரு மாதத்திற்குள் பதிவுசெய்யப்பட்ட பேரளவு மட்டம் வரை மாற்றியமைக்கப்பட்டு மற்றும் கூடுதல் மின்சுமைக்கு பொருந்தக்கூடிய தொடர்புடைய கட்டணங்கள் அடுத்த மின்கட்டண பட்டியலில் சேர்க்கப்படுதல் வேண்டும்.<br><br>(B) பதிவுசெய்யப்பட்ட மின்தேவை 150 கிவா அளவுக்கு மிகையாகும் நிகழ்வில், நுகர்வோருக்கு தகவல் அளித்துவிட்டு, இருந்துவரும் மின்சுமை ஒப்பளிப்பு இரண்டாவது நிகழ்விலிருந்து ஒரு மாதத்திற்குள் 150 கிவா மட்டம் வரை மாற்றியமைக்கப்பட்டு மற்றும் கூடுதல் மின்சுமைக்கு பொருந்தக்கூடிய தொடர்புடைய கட்டணங்கள் அடுத்த மின்கட்டண பட்டியலில் சேர்க்கப்படுதல் வேண்டும். எனினும், பதிவுசெய்யப்பட்ட மின்தேவை 150 கிவா அளவுக்கு மிகையாகும் மூன்றாவது அல்லது கூடுதலான எண்ணிக்கையிலான நிகழ்வுகளில், பதிவுசெய்யப்பட்ட மின்தேவை அளவில் உயரழுத்த மின்னிணைப்புக்கு செலுத்தப்பட வேண்டிய தொடர்புடைய அனைத்து கட்டணங்களையும் குறிப்பிட்டு தாழ்வழுத்த மின்னிணைப்பினை உயரழுத்த மின்னிணைப்பாக மாற்றுவதற்கான ஒருமாத அறிவிப்பினை உரிமம்தாரர் வெளியிடுதல் வேண்டும்."<br><br>iii) தற்காலிக மின்வழங்கலை பொறுத்தவரையில், உ அ / தா அ மின் வழங்கலுக்கான மிகை மின்தேவை கட்டணங்கள் இந்த ஒழுங்குமுறை விதியின் (i) மற்றும் (ii) ஆம் கூறுகளில் குறித்துரைக்கப்பட்டவாறு இருக்கலாம்.<br><br>(iv) தாழ்வழுத்த (LT) மின்னிணைப்பை பொறுத்த வரை, சுமையில் கூடுதல் அல்லது குறைப்பு எதுவும் மற்றும் உயர் அழுத்த (HT) மின்னிணைப்பை பொறுத்தவரை தேவையில் கூடுதல் அல்லது குறைப்பு எதுவும் அதே மின்னிணைப்பில் நிலுவையில் உள்ள தொகை செலுத்தப்பட்டிருந்தால் அன்றி ஒப்பளிக்கப்படாதிருக்கலாம்.<br><br>(v) மேலேயுள்ள நேர்வுகள் அனைத்திலும் மின் அளவிடுதலில் உள்ள மாற்றமைவுகள் எதனாலும் ஏற்படும் செலவு மின்சுமைகளின் கூடுதல் / குறைவின் பொருட்டு அதிகரிக்கப்படுபவை பொறுத்து இந்த சட்டத்தின் மற்றும் அதன் படி இயற்றப்படும் விதித்தொகுப்புகளின் / ஒழுங்குமுறை விதிகளின் வகைமுறைகளுக்கிணங்க நடவடிக்கை எடுக்கப்படலாம்.<br><br>(3), (4), 5(i) to 5(iv) xxx | (III) தற்காலிக மின்னிணைப்புகளில், உ.அ. / தா.அ. மின் விநியோகத்திற்கான மிகைமின் தேவைக் கட்டணங்கள், உள் ஒழுங்குமுறை விதித்தொகுப்பு கூறு (I) மற்றும் (II) ல் குறிப்பிடப்பட்டுள்ளபடி இருக்கும்.<br><br>(IV) எவ்வகை மின்னிணைப்பிலும், மின்தேவை கூட்டுவதற்கோ அல்லது குறைப்பதற்கோ, அதே மின்னிணைப்பில் அல்லது அந்த மின்நுகர்வோரின் மற்ற மின்னிணைப்பில் நிலுவைத்தொகை இருந்தால், ஒப்பளிப்பு வழங்கப்படமாட்டாது.<br><br>(V) மேற்கூறிய அனைத்து நிகழ்வுகளிலும், மின் தேவையை கூட்டுதல் / குறைத்தல் / முறைப்படுத்துதல் ஆகியவற்றிற்காக மின் சாதனங்கள் / மின் தொடர் / மின் அளவீட்டு அமைப்பில் மேற்கொள்ளப்படும் மாற்றங்களின் செலவுகள், சட்டம் மற்றும் விதித்தொகுப்பு / ஒழுங்குமுறை விதிகளின் வரைமுறைகளின்படி கையாளப்படும்.<br><br>(3), (4), 5(I) TO 5(IV) XXX |

| வ எண். | இருந்துவரும் வகைமுறை | திருத்தத்தினை உள்ளடக்கிய வகைமுறை |
|---|---|---|
| 5. | 5.<br>5(v) மீள்பார்வையின்போது, இருப்பிலுள்ள காப்புவைப்புத்தொகை தேவைக்கும் மிகையாக இருப்பதாக கண்டறியப்பட்டால் மின் வழங்கலுக்கான எதிர்கால இரு பட்டியல்களில் அத்தொகை சரிகட்டப்பட்டு வரவு வைக்கப்படுதல் வேண்டும், அவ்வாறு அத்தகைய இரண்டு பட்டியல்களில் சரிகட்டிய பிறகும் திருப்பித் தருவதற்கான மீதித் தொகை இருக்குமானால், அது காசோலையாக மூன்றாம் கேட்புத் தொகையைச் செலுத்த வேண்டிய உரிய நாளுக்குள் திருப்பி வழங்கப்படுதல் வேண்டும். மேற்சொன்ன மிகையான காப்பு வைப்புத் தொகையினை வருங்காலத்தில் இரண்டு கேட்புத் தொகைகளுக்கும் கூடுதலாக கேட்புத் தொகைகளுக்காக சரிகட்ட கோரி மின்நுகர்வோரிடமிருந்து வேண்டுகோள் பெறப்படுமானால் மின்பகிர்மான உரிமம்தாரர் அத்தகைய வேண்டுகோள்களுக்கு இணங்குதல் வேண்டும். | 5.<br>5(v) மீள்பார்வையின் போது இருப்பிலுள்ள காப்புவைப்புத் தொகை தேவைக்கும் மிகையாக இருப்பது கண்டறியப்பட்டால் எதிர்கால மின்வழங்கலுக்கான இரு பட்டியல்களில் அத்தொகை சரிகட்டப்பட்டு வரவு வைக்கப்படும். அவ்வாறு அத்தகைய இரண்டு பட்டியல்களில் சரிகட்டிய பிறகும் திருப்பித் தரப்படவேண்டிய மீதித் தொகை இருந்தால், அது காசோலையாகவோ அல்லது மின்நுகர்வோர் வங்கிக் கணக்கு விவரங்கள் தெரிவித்திருந்தால், வங்கி கணக்கில் நேரடியாகவோ செலுத்தி மின்நுகர்வோருக்கு தெரிவித்து மூன்றாம் தேவைப்பட்டியல் தொகையைக் கட்ட வேண்டிய காலக் கெடுவுக்குள் நுகர்வோருக்கு அனுப்பி வைக்கப் படவேண்டும். வேறு எந்த ஆவணங்களும் தேவையில்லை. மிகையான காப்பு வைப்பு தொகையை எதிர்கால இரு பட்டியல்களில் சரிகட்ட கோரி மின் நுகர்வோரிடமிருந்து வேண்டுகோள் பெறப்படுமானால், மின் பகிர்மான உரிமம்தாரர் அத்தகைய வேண்டுகோளுக்கு இணங்கவேண்டும். |
| 6(a) | 5.<br>(5) (vi) xxx<br>(5) (vii)<br>(அ) வளாகத்தின் உரிமையாளர்களாக இராத மற்றும் மின் வழங்கலை பயன்படுத்தும் வளாகத்தின் உரிமையாளர்களிடம் இருந்து மின் பகிர்மான விதித்தொகுப்பின் III ஆம் இணைப்பின் 5 ஆம் படிவத்தில் உள்ள இசைவுக் கடிதத்தினை பெற்று தாக்கல் செய்ய முடியாதிருக்கிற மாதாந்திர பட்டியலிடப்படும் மின்நுகர்வோருக்கு பிணைய வைப்புத் தொகையானது, ஏப்ரலுக்கு முன் சென்ற பனிரெண்டு மாதங்களுக்கான மின்சார கட்டணங்கள் மாதாந்திர சராசரியின் நான்கு மடங்கிற்கு சமமாக இருத்தல் வேண்டும். | 5.<br>(5) (vi) xxx<br>(5) (vii)<br>(அ) வளாகத்தின் உரிமையாளர்களாக இராத மற்றும் மின் வழங்கலை பயன்படுத்தும் வளாகத்தின் உரிமையாளர்களிடம் இருந்து மின் பகிர்மான விதித்தொகுப்பின் III–ஆம் பின்னிணைப்பின் 5–ஆம் படிவத்தில் உள்ள இசைவுக் கடிதத்தினை பெற்று தாக்கல் செய்ய முடியாதிருக்கிற மாதாந்திர பட்டியலிடப்படும் மின்நுகர்வோருக்கு பிணைய வைப்புத் தொகையானது, ஏப்ரலுக்கு முன் சென்ற பனிரெண்டு மாதங்களுக்கான மின்சார கட்டணங்கள் மாதாந்திர சராசரியின் நான்கு மடங்கிற்கு சமமாக இருத்தல் வேண்டும். |
| 6(b) | ஆ) வளாகத்தின் உரிமையாளர்களாக இராத மற்றும் மின் வழங்கலை பயன்படுத்தும் வளாகத்தின் உரிமையாளர்களிடம் இருந்து மின் பகிர்மான விதித்தொகுப்பின் III ஆம் இணைப்பின் 5 ஆம் படிவத்திலுள்ள இசைவுக் கடிதத்தினை பெற்று தாக்கல் செய்ய முடியாதிருக்கிற இரண்டு மாதத்திற்கு ஒருமுறை பட்டியலிடப்படும் மின்நுகர்வோருக்கு பிணைய வைப்புத் தொகையானது, ஏப்ரலுக்கு முன் சென்ற பன்னிரெண்டு மாதாந்திர சராசரியின் ஆறு மடங்கிற்குச் சமமானதாக இருத்தல் வேண்டும், மற்றும் | ஆ) வளாகத்தின் உரிமையாளர்களாக இராத மற்றும் மின் வழங்கலை பயன்படுத்தும் வளாகத்தின் உரிமையாளர்களிடம் இருந்து மின் பகிர்மான விதித்தொகுப்பின் III–ஆம் பின்னிணைப்பின் 5–ஆம் படிவத்திலுள்ள இசைவுக் கடிதத்தினை பெற்று தாக்கல் செய்ய முடியாதிருக்கிற இரண்டு மாதத்திற்கு ஒருமுறை பட்டியலிடப்படும் மின்நுகர்வோருக்கு பிணைய வைப்புத் தொகையானது, ஏப்ரலுக்கு முன் சென்ற பன்னிரெண்டு மாதாந்திர சராசரியின் ஆறு மடங்கிற்குச் சமமானதாக இருத்தல் வேண்டும், மற்றும் |
| 6(c) | (இ) மேலேயுள்ள (அ), (ஆ) ஆகியவற்றிலுள்ள வகைமுறைகள், பிணை வைப்புத்தொகை குறித்து மறு ஆய்வு செய்யப்படும்போது, தற்போதுள்ள மின்னிணைப்புகளுக்குப் பொருந்தக்கூடியதாகும். விண்ணப்பதாரர் வளாகத்தின் உரிமையாளராக இராதவிடத்தும் மற்றும் மின் வழங்கலைப் பயன்படுத்தும் வளாகத்தின் உரிமையாளரிடமிருந்து மின்பகிர்மான விதித்தொகுப்பின் IIIஆம் இணைப்பின் 5–ஆம் படிவத்திலுள்ள இசைவுக்கடிதத்தைப் பெற்று தாக்கல் செய்ய முடியாதிருக்கிறவிடத்தும், புதிய மின்னிணைப்புகளைச் செயற்படுத்துவது பொறுத்து, பிணை வைப்புத் தாகை வசூலித்தல், அவ்வப்போது திருத்தம் செய்யப்படும் ஆணையத்தின் பல்வகைக் கட்டணங்கள் தொடர்பான மின்கட்டணமல்லாத கட்டணங்கள் மீதான ஆணைகளின் மூலமாகவும் தமிழ்நாடு மின்பகிர்மான விதித்தொகுப்பின் 27 (4) ஒழுங்குமுறைவிதியின் மூலமாகவும் முறைப்படுத்தப்படும். அத்தகைய புதிய மின்நுகர்வோருக்கு மேலேயுள்ள (அ) அல்லது, நேர்வுக்கேற்ப, (ஆ) வின்படி போதுமான பிணை வைப்புத் தொகை திருத்தியமைக்கப்படுதல் வேண்டும். | (இ) மேலேயுள்ள (அ), (ஆ) ஆகியவற்றிலுள்ள வகைமுறைகள், பிணை வைப்புத்தொகை குறித்து மறு ஆய்வு செய்யப்படும்போது, தற்போதுள்ள மின்னிணைப்புகளுக்குப் பொருந்தக்கூடியதாகும். விண்ணப்பதாரர் வளாகத்தின் உரிமையாளராக இராதவிடத்தும் மற்றும் மின் வழங்கலைப் பயன்படுத்தும் வளாகத்தின் உரிமையாளரிடமிருந்து மின்பகிர்மான விதித்தொகுப்பின் III–ஆம் பின்னிணைப்பின் 5–ஆம் படிவத்திலுள்ள இசைவுக்கடிதத்தைப் பெற்று தாக்கல் செய்ய முடியாதிருக்கிறவிடத்தும், புதிய மின்னிணைப்புகளைச் செயற்படுத்துவது பொறுத்து, பிணை வைப்புத் தாகை வசூலித்தல், அவ்வப்போது திருத்தம் செய்யப்படும் ஆணையத்தின் பல்வகைக் கட்டணங்கள் தொடர்பான மின்கட்டணமல்லாத கட்டணங்கள் மீதான ஆணைகளின் மூலமாகவும் தமிழ்நாடு மின்பகிர்மான விதித்தொகுப்பின் 27(4) ஒழுங்குமுறைவிதியின் மூலமாகவும் முறைப்படுத்தப்படும். அத்தகைய புதிய மின்நுகர்வோருக்கு மேலேயுள்ள (அ) அல்லது, நேர்வுக்கேற்ப, (ஆ) வின்படி போதுமான பிணை வைப்புத் தொகை திருத்தியமைக்கப்படுதல் வேண்டும். |

| வ எண். | இருந்துவரும் வகைமுறை | திருத்தத்தினை உள்ளடக்கிய வகைமுறை |
|---|---|---|
| 7. | 5.<br>(6) – லிருந்து (11) வரை XXX<br>(12) விண்ணப்பப்பதிவுக் கட்டணம்.<br>உரிமம்தாரர் நுகர்வோர்களிடமிருந்து, ஆணையம் அவ்வப்போது குறிப்பிடும் வீதங்களில் பின்வரும் விண்ணப்பப்பதிவுக் கட்டணங்களை வசூலிக்க வேண்டும்.<br>(A) தாழ்வழுத்த / உயர் அழுத்த மின் இணைப்பு விண்ணப்பங்கள்<br>(B) தாழ்வழுத்த / உயர் மின் அழுத்த இணைப்புகளுக்கு கூடுதல் / குறைவுதிறன் விண்ணப்பங்கள்<br>(C) தற்காலிக மின் இணைப்பிற்கான விண்ணப்பம்<br>(D) தாழ்வு மின் அழுத்தத்திலிருந்து உயர் மின் அழுத்தத்திற்கான அல்லது தலைகீழான மாற்றத்திற்கான விண்ணப்பங்கள்.<br>(E) தாழ்வு / உயர் மின் இணைப்பு மாற்ற விண்ணப்பம்.<br>(F) சரியானதாழ்வு / உயர் மின் அழுத்தகட்டணத்தில் காப்புதொகை பங்களிப்பு வேலைகள் DCW மூலம் கம்பி / கட்டுமானம் / உபகரணங்கள் மாற்றத்திற்கான விண்ணப்பம்.<br>(G) மின் கட்டண வீதமாற்றத்திற்கான விண்ணப்பம்.<br>(H) பழுதுபட்ட மின் அளவி மாற்றத்திற்கான விண்ணப்பம். | 5.<br>(6) – லிருந்து (11) வரை XXX<br>(12) விண்ணப்பப் பதிவுக் கட்டணம்.<br>உரிமம்தாரர் நுகர்வோர்களிடமிருந்து, ஆணையம் அவ்வப்போது குறிப்பிடும் வீதங்களில் பின்வரும் விண்ணப்பப் பதிவுக் கட்டணங்களை வசூலிக்க வேண்டும்.<br>(A) தாழ்வழுத்த / உயர் அழுத்த மின் இணைப்பு விண்ணப்பங்கள்<br>(B) தாழ்வழுத்த / உயர் மின் அழுத்த இணைப்புகளுக்கு கூடுதல் / குறைவுதிறன் விண்ணப்பங்கள்<br>(C) தற்காலிக மின் இணைப்பிற்கான விண்ணப்பம்<br>(D) தாழ்வு மின் அழுத்தத்திலிருந்து உயர் மின் அழுத்தத்திற்கான அல்லது மறுதலையான மாற்றத்திற்கான விண்ணப்பங்கள்.<br>(E) காப்புத்தொகை பங்களிப்பு முறையில் உயர் / தாழ்வு மின் இணைப்பு மாற்ற விண்ணப்பம்.<br>(F) காப்புத்தொகை பங்களிப்பு வேலைகள் மூலம் உயர் / தாழ்வு அழுத்த கம்பி / கட்டுமானம் / உபகரணங்கள் இடம் பெயர்வதற்கான விண்ணப்பம்.<br>(G) மின் கட்டண வீதமாற்றத்திற்கான விண்ணப்பம்.<br>(H) மூன்றாம் தரப்பினரால் வாகனங்கள் மோதியது போன்றவற்றினால் சேதமடைந்த உரிமம்தாரரின் சொத்துகளை பழுதுபார்ப்பதற்கு அல்லது மாற்றுவதற்கான காப்பு தொகை பங்களிப்பு பணிகளின் கீழ் விண்ணப்பம் |
| 8. | **7. மின்னளவி நிறுவுதல்:**<br>(1) மின்னளவி பயன்பாடு பற்றிய விதி வகுக்கும் சட்டத்தின் சட்டப்பிரிவு 55 இன் துணைப்பிரிவு (i) பின்வருமாறு கூறுகிறது.<br>“அமர்த்தப்பட்ட இரண்டாண்டுகள் முடிந்த பிறகு எந்த உரிமம்தாரரும் இது தொடர்பாக உரிய அதிகாரத்தால் உருவாக்கப்பட்ட ஒழுங்கு முறை விதிகளின்படி சரியான மின்னளவியை நிறுவாமல் மின்சாரம் வழங்கக் கூடாது. நுகர்வோர் தானே மின்னளவி நிறுவ தேர்ந்தெடுத்தால் ஒழிய, மின்னளவி விலைக்கான காப்பு வைப்புத் தொகையைச் செலுத்தும்படி உரிமம்தாரர் நுகர்வோரிடமிருந்து கோரலாம் எனவும் மேலும் அதை மின்னளவி வாடகை இசைவுப் பத்திரத்திலும் பதியலாம் எனவும் விதிக்கப்படுகிறது.”<br>மாநில ஆணையம், அறிக்கை மூலம், மேலே சொன்ன இரண்டாண்டு கால வரம்பை ஆணைய அறிவிப்பு குறிப்பிட்டுள்ள வட்டாரத்துக்கோ அல்லது தனி உரிமம்தாரர் வகைக்கோ அல்லது வகைகளுக்கோ நீட்டிக்கலாம் எனவும் விதிக்கப்படுகிறது. | **7. மின்னளவி நிறுவுதல்:**<br>(1) மின்னளவி இல்லாமல் புதிய மின்னிணைப்பு தரப்படாது. அனைத்து தா.அ. மின் இணைப்புகளிலும் மின்தேவை பதிவிடும் வசதியுள்ள மின்னளவியை மின் உரிமம்தாரர் நிறுவவேண்டும்.<br>(2) புதிய / தற்காலிக மின்னிணைப்பு கோரும்போது, நிர்ணயிக்கப்பட்ட தரநிலைகள், விவரக் குறிப்புகள் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட ஒழுங்குமுறை விதிகளின்படியுள்ள ஒரு மின்னளவியை விண்ணப்பதாரர் தாமாக கொள்முதல் செய்யவோ அல்லது மின்உரிமம்தாரரிடம் இருந்து பெற்றுக் கொள்ளவோ அவருடைய விருப்பப்படி தேர்ந்தெடுக்கலாம். மின் நுகர்வோர் தானே சொந்த மின்னளவியை கொள்முதல் செய்ய தேர்ந்தெடுக்காத வரை, உரிமம்தாரர் சட்டப்பூர்வ தரநிலைகள் மற்றும் தொடர்புடைய ஒழுங்குமுறை விதிகளுக்கு இணங்க மின்னளவியை பொருத்தி, மின்னளவியின் விலைகேற்ப வைப்புத் தொகையினையும், தேவைக்கேற்ப வாடகை கட்டணத்தையும் மின் நுகர்வோரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். மின் நுகர்வோர் தானே சொந்த மின்னளவியை கொள்முதல் செய்ய தேர்ந்தெடுக்கும்போது, அந்த மின்னளவி நிர்ணயிக்கப்பட்ட தரநிலைகள், விவரக்குறிப்புகள் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட ஒழுங்குமுறை விதிகளின்படி உள்ளதை மின் உரிமம்தாரர் உறுதி செய்ய வேண்டும். |

| வ எண். | இருந்துவரும் வகைமுறை | திருத்தத்தினை உள்ளடக்கிய வகைமுறை |
|---|---|---|
| 8. | (2) அனைத்து புதிய மின் இணைப்புகளும் மின்னளவி வைத்தே தரப்படவேண்டும். எல்லா குறைந்த மின் அழுத்த மின்இணைப்புகளுக்கும் உரிமம்தாரர் மின் அளவிகளை, மின்தேவை பதிவுகளோடு நிறுவ வேண்டும்.<br>(3) நுகர்வோரே தனது சொந்த மின்னளவியை வாங்கி வைக்க தேர்ந்தெடுத்தால் ஒழிய, உரிமம்தாரர் உயர் தரமும் உயர் துல்லியமும் உயர் சரித்தன்மையும் உள்ள மின்னளவியை நிறுவிட வேண்டும். அதற்காக அவர் நுகர்வோரிடம் மின்னளவியின் விலையளவுக்கு காப்பீடும் வாடகைக் கட்டணமும் தரும்படி கோரலாம். நுகர்வோர் தனது சொந்த மின்னளவியை வாங்கி வைக்க தேர்ந்தெடுக்கும் போது, உரிமம்தாரர், அம்மின்னளவி உயர் தரமும், உயர் துல்லியமும், உயர் சரித்தன்மையும் உள்ளபடி உறுதிப்படுத்துவதோடு நுகர்வோர் செலவில் அதை மீள் அளவீடு செய்ய ஏற்பாடு செய்யவும் வேண்டும்.<br>(3A) திறந்த நுழைவுரிமை மின்நுகர்வோரைப் பொறுத்தவரை, மின் சக்தியை உள்இழுத்தல் மற்றும் வெளியேற்றுதலை பதிவு செய்யும் வசதிகளுடன் கிடைக்கக் கூடியவற்றின் அடிப்படையிலான மின்கட்டணத்திற்கு (ABT) இணங்க செயலாற்றும் மின்னளவியானது, 2006ஆம் ஆண்டு மத்திய மின்சார அதிகாரஅமைப்பு (மின்னளவிகள் நிறுவுதல் மற்றும் இயக்குதல்) ஒழுங்குமுறை விதிகளுக்கிணங்க, மின்உற்பத்தியாளர் மற்றும் மின்நுகர்வோர் இடங்களில் பொருத்தப்படுதல் வேண்டும். | தேவையான மின்னளவிகளை உற்பத்தியாளரின் இடத்தில் உரிமம்தாரரால் சோதிக்கப்பட்டு அவற்றின் வரிசை எண்களை முறையாகப் பதிவு செய்யப்பட்டு பாதுகாப்பு முத்திரையிடப்படும். சோதனை செய்யப்பட்டு முறையாக வரிசை எண் பதிவுசெய்யப்பட்ட மின்னளவிகள் திறந்த சந்தையில் கிடைக்கும் படி செய்ய வேண்டும். வரிசை எண்களின் விவரங்கள், தயாரிப்பு, திறன் மற்றும் விற்பனையாளர் விவரங்கள் மின் நுகர்வோரின் தகவலுக்காக உரிமம்தாரரின் இணைய தளத்தில் வெளியிட வேண்டும். அனைத்து வகையான மின்னளவிகளும் தேவையான அளவு எல்லா நேரத்திலும் சந்தையில் இருக்குமாறு செய்யவேண்டும். சந்தையில் இருந்து விண்ணப்பதாரரால் கொள்முதல் செய்யப்பட்ட மின்னளவிகள் மீண்டும் சோதிக்கப்பட வேண்டிய அவசியமின்றி நேரடியாக நிறுவப்படலாம்.<br>மின்னளவி உற்பத்தியாளர், கண்காணிப்பு மற்றும் பதிவு செய்யும் மென்பொருள் வழியாக அனைத்து புதிய பாதுகாப்பு முத்திரைகளையும் உற்பத்தி, கொள்முதல், சேமிப்பு, பதிவேடு வைத்தல், நிறுவுதல், தொடர் ஆய்வுகள், அகற்றுதல் மற்றும் அப்புறப்படுத்துதல் ஆகிய பல்வேறு நிலைகளில், அதன் மொத்த நகர்வுகளோடு நிலைகளை கண்காணிக்க வகை செய்திடல் வேண்டும். காப்புரிமை பெற்ற இலச்சினைகள் (இலச்சினைகள் உற்பத்தி செய்ய அதிகாரப்பூர்வ உரிமை உள்ள உற்பத்தியாளரின் இலச்சினைகள் (முத்திரைகள்)) மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். மின்உரிமம்தாரரின் அமைப்பிலிருந்து நிரந்தரமாக நீக்கப்பட்ட பின்னர் மட்டுமே, மின்நுகர்வோர் தாமே கொள்முதல் செய்த மின்னளவியை தனது சொத்தாகக் கோர முடியும்.<br>வகையின பயன்பாட்டின் மின் தேவைக் கேற்ற வகை, ஒரு முனை / மும்முனை திறன் மதிப்பீடு, அங்கீகரிக்கப்பட்ட மின்னளவி உற்பத்தியாளர்களின் பட்டியல் மற்றும் நுகர்வோர் அவற்றை வாங்கக்கூடிய இடங்களின் தகவல்களுடன் விவரக்குறிப்பு ஆகியவற்றைப் பற்றி உரிமம்தாரர், தங்கள் இணையதளத்தில் வெளியிட்டு, தொடர்ந்து புதுப்பிக்க வேண்டும். இது தா.அ., மின்னோட்ட மாற்றி பொருத்தப்பட்ட தா.அ., உ.அ. LT CT, இறுதிசை அளவீடு, சூரிய மின்னுற்பத்தி, முன்பணம் செலுத்தும் அளவீடு, ToD அளவீடு போன்ற அனைத்து வகைகளையும் நிரந்தர அடிப்படையில் எத்தகைய கட்டுப்பாடுகளின்றி ஒரு பிரிவு / வட்டம் போன்றவற்றால், வாங்குவதற்கான கால அளவு அல்லது மின்னளவியின் அளவு கட்டுபாடின்றி நிரந்தர அடிப்படையில் இருக்க வேண்டும்.<br>(3) அதிக மின் நுகர்வு / வருவாய் மின் இணைப்புகளுக்கு முன்னுரிமை அளித்து, அதிநவீன முன் பணம் செலுத்தும் (smart pre–paid) அல்லது முன் பணம் (pre–paid) சேவை வசதியுள்ள மின்னளவியைப் படிப்படியாக வழங்க உரிமம்தாரர் முயற்சிக்க வேண்டும். அனைத்து மத்திய / மாநில அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்பு மின்னிணைப்புகளுக்கு முன்பணம் செலுத்தும் வசதியுடன் கூடிய அதிநவீன மின்னளவிகள் வழங்கப்பட வேண்டும். தகவல் தொடர்பு கட்டமைப்பு இல்லாத பகுதிகளில், முன் பணம் செலுத்தும் மின்னளவிகள் வழங்கப்பட வேண்டும். தற்காலிக மின்னிணைப்புகளில், முன்பணம் செலுத்தும் மின்னளவி (மீள்நிரப்பு அட்டை வடிவம்) பொறுத்தப்பட வேண்டும். முன்பணம் செலுத்தும் மின்னளவிகளுக்கு, காப்பு வைப்புத் தொகை செலுத்த தேவையில்லை. |

| *வ எண்.* | *இருந்துவரும் வகைமுறை* | *திருத்தத்தினை உள்ளடக்கிய வகைமுறை* |
|---|---|---|
| | | (3A) திறந்த நுழைவுரிமை மின்நுகர்வோரைப் பொறுத்தவரை, மின் சக்தியை இறக்குமதி செய்தல் மற்றும் ஏற்றுமதி செய்தல் மற்றும் மின்கட்டண வகைப்பாட்டின் தேவைக்கேற்ப பிற அளவுருக்களை பதிவு செய்யும் வசதிகளுடன் செயலாற்றும் இடைமுக மின்னளவியானது (interface meter), மின்உற்பத்தியாளர் மற்றும் மின்நுகர்வோர் இடங்களில் மற்றும் தேவையான மற்ற இடங்களில் பொருத்த வேண்டும். மின்னளவிகள் அவ்வப்போது திருத்தப்படும் மத்திய மின்சார அதிகார அமைப்பு (மின்னளவிகள் நிறுவுதல் மற்றும் இயக்குதல்) விதிமுறைகள், 2006—ல் விதிக்கப்பட்டுள்ள தரநிலைகள் மற்றும் விவரக்குறிப்புகளுக்கு இணங்க வேண்டும். |
| 9. | 7.<br><br>(4) முதல் (6) வரை XXX<br><br>(7) எல்லா உயர் மின் அழுத்த மின் இணைப்புகளுக்கும், உயர் மின் அழுத்த மின்னளவிகள் பொருத்தப்பட வேண்டும். ஏற்கனவே இருக்கும் உயர் மின் அழுத்த இணைப்பில் உள்ள மின்னளவிகள், எங்கெல்லாம் தாழ்வழுத்த புறத்தில் உள்ளதோ, அதாவது மின்மாற்றியின் துணைப்பக்கத்தில் உள்ளதோ, அங்கெல்லாம்:—<br><br>(I) மின்மாற்றியின் சராசரி இழப்பைப் பின்வருமாறு கணக்கிட்டு மின்னளவி பதிவு செய்யும் ஆற்றல் நுகர்வுடன் கூட்டிக் கொள்ள வேண்டும்.<br><br>சராசரி இழப்பு = $\dfrac{720 \text{ X } 1.0 \text{ X C}}{100 \text{ மாதத்திற்கான மின்னலகுகள்}}$<br><br>இங்கு C = மின்மாற்றியின் கி.வோ.ஆ அளவில் உள்ள வரையளவு<br><br>(II) பதிவான நுகர்வு இல்லை யென்றாலும் கூட மேற்சொன்ன வாய்பாட்டால் கணக்கிடப்பட்ட இழப்பைக் கூட்டிக் கொள்ள வேண்டும்.<br><br>(III) XXX | 7.<br><br>(4) முதல் (6) வரை XXX<br><br>(7) எல்லா உயர் மின் அழுத்த மின் இணைப்புகளுக்கும், உயர் மின் அழுத்த மின்னளவிகள் பொருத்தப்பட வேண்டும். ஏற்கனவே இருக்கும் உயர் மின் அழுத்த இணைப்பில் உள்ள மின்னளவிகள், எங்கெல்லாம் தாழ்வழுத்த புறத்தில் உள்ளதோ, அதாவது மின்மாற்றியின் துணைப்பக்கத்தில் உள்ளதோ, அங்கெல்லாம்:—<br><br>(I) மின்மாற்றியின் சராசரி இழப்பைப் பின்வருமாறு கணக்கிட்டு மின்னளவி பதிவு செய்யும் ஆற்றல் நுகர்வுடன் கூட்டிக் கொள்ள வேண்டும்.<br><br>சராசரி இழப்பு = $\dfrac{720 \text{ X } 1.0 \text{ X C}}{100 \text{ மாதத்திற்கான மின்னலகுகள்}}$<br><br>இங்கு C = மின்மாற்றியின் கி.வோ.ஆ அளவில் உள்ள வரையளவு<br><br>II) இந்த ஒழுங்குமுறை விதித் தொகுப்பின் உள் ஒழுங்குமுறை விதி 3(1)(B) இன் படி, 112KW க்கும் அதிகமான தா.அ. மின்னிணைப்புகளுக்கு மேற்கூறிய சூத்திரத்தை பயன்படுத்தும் போது அல்லது மின் வழங்கும் மின்மாற்றியின் திறன் தனிப்பட்ட நுகர்வோரின் ஒப்பந்த தேவையை பூர்த்தி செய்ய தேவையான திறனை விட அதிகமாக இருக்கும் போது, மேற்கூறிய சூத்திரத்தில் 'C' என குறிப்பிடப்படும் மின்மாற்றியின் கி.வோ.ஆ. மதிப்பீடு, உரிமம்தாரரால் தனிநபரின் ஒப்பந்தத் தேவையின் அளவைப் பூர்த்தி செய்யத் தேவைப்படும் மின்மாற்றியின் குறைந்த மின் திறன் அளவிற்கு குறைக்கப்படும்.<br><br>மின்நுகர்வு பதிவாகவில்லை யென்றாலும் கூட மேற்சொன்ன சூத்திரத்தில் கணக்கிடப்பட்ட இழப்பைக் மின் நுகர்வுடன் கூட்டிக் கொள்ளப்படும்.<br><br>(III) XXX |

| வ எண். | இருந்துவரும் வகைமுறை | திருத்தத்தினை உள்ளடக்கிய வகைமுறை |
|---|---|---|
| 10. | 7.<br>(8) xxx<br>(9) நுகர்வோர் மின்னளவு பிழையுள்ளதாகக் கருதினால், அவரது மின்னளவிகள் மீது உரிய சிறப்பு சோதனைகளைச் செய்யும் படி உரிமம்தாரருக்கு விண்ணப்பிக்கலாம். அத்தகைய சோதனைக்கான செலவை, அத்தகைய சோதனையின்போது மின்னளவி பழுதுற்று உள்ளதா அல்லது சரியாக உள்ளதா என்பதைப் பொருத்து, முறையே, உரிமம்தாரர் அல்லது நுகர்வோர் ஏற்க வேண்டும். ஐயத்திற்குரிய / குறைபாடுடைய மின்னளவிகள் உள்ளடங்கலான பூசலிலுள்ள மின் ஆற்றல் அளவிகளுக்காக மேலே சொல்லப்பட்டுள்ள சிறப்புச் சோதனையானது, சோதனை மற்றும் அளவுக் குறியிடுதலுக்கான தேசிய அங்கீகரிப்பு வாரியத்தால் (NABL) அங்கீகரிக்கப்பட்ட மூன்றாம் தரப்பினர் சோதனை ஆய்வகத்தில் செய்யப்படுதல் வேண்டும், மற்றும் மூன்றாம் தரப்பினர் மின் அளவு சோதனை ஏற்பாட்டு அமைப்பு நிறுவப்படும் அத்தகைய நேரம் வரையில், உரிமம்தாரர், தமிழ்நாடு அரசின் தலைமை மின் ஆய்வாளரால் நடத்தப்படும் சிறப்புச் சோதனையைச் செய்தல் வேண்டும்.] சட்ட விதிகளில் உள்ள பிழை வரம்புகளைக்காட்டிலும் கூடுதலான பிழை இல்லாத போது, மின்னளவி சரியாக உள்ளதாகவே கொள்ளப்படும். உரிமம்தாரர் அவரால் மறு அளவீடு செய்யப்பட்ட பிறகே நுகர்வோரின் சரிபார்ப்பு மின்னனவியை அவரது இருப்பிடத்தில் நிறுவிட இசைவு தர வேண்டும். அத்தகைய சரிபார்ப்பு மின்னளவி உயர் தரமும், உயர் சரித்தன்மையும் உயர் துல்லியமும் உள்ளதாகவும் மேலும் உரிமம்தாரரின் காப்பு இலச்சினை பொருத்தப்பட்டும். இருக்க வேண்டும். உரிமம்தாரரின் மின்னளவி பழுதுற நேர்ந்தால், சரிபார்ப்பு மின்னளவி பதியும் மின்னளவை எடுத்துக் கொள்ளலாம். | 7.<br>(8) xxx<br>(9) ஒரு மின்நுகர்வோர் மின்னளவி பழுதுள்ளதாகக் கருதினால் அல்லது மீட்டர் அளவீடுகள் தனது மின்நுகர்வுக்கு ஏற்ப இல்லை என கருதினால், அவர் உரிமம்தாரரின் ஆய்வகத்தில் தனது மின்னளவியினை சோதிக்கும்படி உரிமம்தாரருக்கு விண்ணப்பிக்கலாம். அந்த சோதனையானது 30 நாட்களுக்குள் உரிமம்தாரரால் மேற்கொள்ளப்பட வேண்டும். சோதனைக்கான செலவை, அத்தகைய சோதனையின்போது மின்னளவி பழுதுற்று உள்ளதா அல்லது சரியாக உள்ளதா என்பதைப் பொருத்து, முறையே, உரிமம்தாரர் அல்லது நுகர்வோர் ஏற்க வேண்டும்.<br>மின்பகிர்மான உரிமம்தாரர், அத்தகைய சோதனை செய்யும் காலத்தில் மின்நுகர்வோர் அவ்விடத்தில் இருப்பதற்கு ஏதுவாக சோதனைக்கான தேதி மற்றும் நேரத்தை மின் நுகர்வோருக்கு தெரிவிக்க வேண்டும். சோதனைக்குப் பிறகு, உரிமம்தாரர் மற்றும் மின்நுகர்வோர் ஆகிய இருவரும் முறையாக கையொப்பமிட்ட சோதனை அறிக்கையின் நகலை மின் நுகர்வோருக்கு வழங்கி, ஒரு நகலை ஒப்புதல் பெற்று வைத்திருக்க வேண்டும். எனினும், மின் நுகர்வோர் சோதனைக்காக தளத்தில் இருக்க விருப்பம் தெரிவிக்கவில்லை எனில், மின்பகிர்மான உரிமம்தாரர் அத்தகைய சோதனையை மேற்கொண்டு, அறிக்கையின் நகலை மின் நுகர்வோருக்கு அனுப்பவேண்டும். அத்தகைய சோதனையின் முடிவுகளை நுகர்வோர் மறுத்து, அத்தகைய சோதனைக்கான கட்டணங்களை ஏற்றுக்கொள்வதன் மூலம் மூன்றாம் தரப்பினரால் மறு–சோதனை கோரினால், உரிமம்தாரர் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட NABL அங்கீகாரம் பெற்ற மூன்றாம் தரப்பு சோதனை முகமைகளின் பட்டியலில் உள்ள சோதனை ஆய்வகத்தில் சோதனையை மேற்கொள்ள வேண்டும். பிழைகள் குறிப்பிடப்பட்ட வரம்புகளுக்கு அப்பாற்பட்டதாகவும், மின்பகிர்மான உரிமம்தாரர் செய்த சோதனையின் முடிவுகளுக்கு முரணாக இருப்பதாகவும் கண்டறியப்பட்டால், மின்பகிர்மான உரிமம்தாரரின் சோதனை ஆய்வகத்திலும் மற்றும் மூன்றாம் தரப்பு சோதனை ஆய்வகத்திலும் சோதனைகளை மேற்கொள்வதற்கான செலவுகள் மின்பகிர்மான உரிமம்தாரரால் திருப்பிச் செலுத்தப்படும். எனினும், சோதனையின் முடிவுகளும் மின்பகிர்மான உரிமம்தாரர் செய்த சோதனையின் முடிவுகளும் ஒன்றே என்று முடிவானால், அத்தகைய சோதனையை மேற்கொள்வதற்கான செலவு நுகர்வோரால் ஏற்றுக்கொண்டதாக கருதப்படும். மின்னளவி தரவு மற்றும் சோதனை முடிவுகள் மின்நுகர்வோருக்கு வழங்கப்பட்ட பிறகு கூறப்பட்ட முடிவுகள் இறுதியானது மற்றும் மின் நுகர்வோர் மற்றும் மின்பகிர்மான உரிமம்தாரர் இருவரையும் கட்டுப்படுத்த கூடியதும் ஆகும்.<br>ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட மூன்றாம் தரப்பு சோதனை முகமைகளின் அங்கீகரிக்கப்பட்ட பட்டியல் பல்வேறு மின்பகிர்மான அலுவலகங்களிலும் மின்பகிர்மான உரிமம்தாரரின் இணையதளத்திலும் இருத்தல் வேண்டும்.'' |

| *வ எண்.* | *இருந்துவரும் வகைமுறை* | *திருத்தத்தினை உள்ளடக்கிய வகைமுறை* |
|---|---|---|
| 11. | 7.<br>**(10) பழுதுற்ற, சேதமுற்ற, எரிந்த மின்னளவிகளைப் பதிலிட பின்வரும் வழி முறையைப் பின்பற்ற வேண்டும்.**<br>(i) உரிமம்தாரருக்குச் சொந்தமான அனைத்துப் பழுதுற்ற மின்னளவிகளையும் தனது செலவில் மாற்றப் பொறுப்புடையவராவர்.<br>(ii) மின்னளவியின் காப்புப் பொறுப்பு நுகர்வோரிடம் உள்ளதால் சேதமுற்ற மின்னளவியை மாற்றும் பணி நுகர்வோர் செலவில் செய்யப்பட வேண்டும்.<br>(iii) மின்னளவி எரிந்ததற்கான காரணம் நுகர்வோரே என நிறுவப்படாதவரையில் எரிந்த மின்னளவிகளை மாற்றிட வேண்டியது உரிமம்தாரரின் பொறுப்பாகும்.<br>(iv) நுகர்வோர் தனது சொந்த மின்னளவியையே தொடர்ந்து வைத்திருக்கத் தீர்மானித்தால் அல்லது தேர்ந்தெடுத்தால் அவரது உரிமையிலிருந்த மின்னளவி பழுதுற்றாலோ, சேதமுற்றாலோ, நுகர்வோரைச் சார்ந்த காரணங்களால் மின்னளவி எரிந்துவிட்டாலோ சரியான மின்னளவியை மாற்றிட வேண்டியது நுகர்வோரின் பொறுப்பாகும். அப்படியல்லாவிட்டால், உரிமம்தாரர் மின்னளவியைத் தனது செலவில் மாற்றி விட்டு அதை மின்னளவி வாடகை இசைவுப் பத்திரத்தில் பதிவு செய்து உரிய குறிப்பிட்ட வைப்புத் தொகைகளை வசூலிக்க வேண்டும். | 7.<br>**(10) பழுதுற்ற, சேதமுற்ற, எரிந்த மின்னளவிகளைப் பதிலிட வேண்டிய வழி முறைகள் பின்வருமாறு:.**<br>(i) உரிமம்தாரர் அனைத்துப் பழுதுற்ற மின்னளவிகளையும் தனது செலவில் மாற்றப் பொறுப்புடையவராவர். மின் நுகர்வோரின் புகாரின் பேரில் அல்லது மின்பகிர்மான உரிமம்தாரர் ஆய்வு செய்தபின், பதிவு நிறுத்தம், காட்சித்திரை நிறுத்தம், முத்திரை சேதம், எரிதல் அல்லது மின்னளவிக்கு சேதம் போன்ற குறைபாடுகள் உள்ள மின்னளவிகள், ஆணையத்தால் குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் மாற்றப்பட்டு ஒரு புதிய மின்னளவி மூலம் மின்விநியோகத்தை மீட்டுத்தரல் வேண்டும். கழற்றப்பட்ட குறைபாடுள்ள மின்னளவிகள் உரிமம்தாரரின் ஆய்வகத்தில் 30 நாட்களுக்குள் சோதிக்கப்படவேண்டும். சாத்தியமான இடங்களில், தரவு பதிவிறக்கம் செய்யப்பட வேண்டும். அனைத்து குறைபாடுள்ள மின்னளவிகளின் பதிவுகளும் அத்தகைய சோதனை முடிவுகளின் தொடர்புடைய ஆவணங்களுடன் இணைக்கப்பட வேண்டும். பதிவிறக்கம் செய்யப்பட்ட மின்னளவி அளவீடுகள் மற்றும் பட்டியலிடல் தொடர்பான பிற முக்கியமான தரவு நுகர்வோர் பேரேட்டில் (ledger) ஆவணப்படுத்தப்படும். உரிமம்தாரரின் ஆய்வகத்தில் சோதனை செய்யப்படாமல் குறைபாடுள்ள மின்னளவிகள் எதுவும் கிடங்கில் ஒப்படைக்கப்படமாட்டாது.<br>(ii) மின்னளவியினை பத்திரமாக காக்கும் பொறுப்பு நுகர்வோரை சார்ந்ததால், சேதமுற்ற மின்னளவியை மாற்றும் பணி நுகர்வோர் செலவில் செய்யப்பட வேண்டும்.<br>(iii) மின்னளவி எரிந்ததற்கான காரணம் நுகர்வோரே என நிரூபனம் செய்யப்படாதவரையில் எரிந்த மின்னளவிகளை மாற்றிட வேண்டியது உரிமம்தாரரின் பொறுப்பாகும்.<br>விசாரணைக்குப் பிறகு, மின் நுகர்வோர் தொடர்புடைய காரணங்களால் மின்னளவி பழுதடைந்திருப்பது அல்லது எரிந்திருப்பது கண்டறியப்பட்டால், புதிய மின்னளவியின் விலை மற்றும் பிற நிறுவக்கூடிய கட்டணங்கள் மின் நுகர்வோரிடமிருந்து அடுத்தடுத்த பட்டியலின் மூலம் வசூலிக்கப்படும். மின் நுகர்வோர் தெரிவிக்கும் போது அல்லது உரிமம்தாரர் பார்வையிடும்போது மின்னளவி பழுதடைந்ததாகவோ அல்லது எரிந்ததாகவோ கண்டறியப்பட்டால், மின் நுகர்வோரிடமிருந்து கட்டணம் எதுவும் வசூலிக்கப்படாது.<br>பழுதடைந்த / எரிந்த மின்னளவியை மாற்றுவதற்குக் கூறப்பட்ட கட்டணங்கள் தவிர, குறைபாடு உள்ள அல்லது தவறான நுகர்வுப் பதிவின் காலத்திற்கு தேவையான பட்டியல் திருத்தம், இந்த விதித்தொகுப்பின் வரைமுறைகளின்படி மேற்கொள்ளப்பட்டு, சோதனை முடிவுகள் மற்றும் கணக்கிடும்முறையுடன் எழுத்துப் பூர்வ தகவல்களை மின் நுகர்வோருக்கு அளித்து, மிகுதியான அல்லது குறைவான கட்டணங்கள் அடுத்தடுத்த பட்டியல்களில் நிலுவையில் சரி செய்யப்படும்.<br>பழுதடைந்த மின்னளவிகளை உரிய நேரத்தில் மாற்றுவதற்கு மின் உரிமம்தாரர் ஒவ்வொரு பிரிவு அலுவலகங்களிலும் தேவைக்கேற்ப சுழற்சிமுறையில் மின்னளவிகளை இருப்பு வைத்திருக்க வேண்டும். |

| வ எண். | இருந்துவரும் வகைமுறை | திருத்தத்தினை உள்ளடக்கிய வகைமுறை |
|---|---|---|
| | | (iv) நுகர்வோர் தனது சொந்த மின்னளவியையே தொடர்ந்து வைத்திருக்கத் தீர்மானித்தால் அல்லது தேர்ந்தெடுத்தால் அவரது உரிமையிலிருந்த மின்னளவி பழுதுற்றாலோ, சேதமடைந்தாலோ, நுகர்வோரைச் சார்ந்த காரணங்களால் மின்னளவி எரிந்துவிட்டாலோ அந்த மின்னளவியை மாற்ற வேண்டியது நுகர்வோரின் பொறுப்பாகும். அப்படியல்லாவிட்டால், உரிமம்தாரர் மின்னளவியைத் மாற்றி விட்டு குறிப்பிட்ட வைப்புத் தொகைகள் / நிர்ணயிக்கப்பட்ட தொகைகளை மின்நுகர்வோரிடம் வசூலிக்க வேண்டும். |
| 12. | 7<br>(1) to (10) xxx | 7<br>(1) to (10) xxx<br>(11) ஒருமுனை மின்னளவிகளில் மின்நுகர்வோர் பக்க மின் அமைப்பில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மின்நுகர்வோரின் பேஸ் அல்லது நியூட்ரல் மின் கம்பிகள் பொதுவானதாகவோ அல்லது ஒன்றோடு ஒன்று இணைக்கப்பட்டோ, இல்லா வண்ணம் மின்நுகர்வோர் உறுதிசெய்திடல் வேண்டும். பொதுவானதாகவோ அல்லது ஒன்றோடு ஒன்று இணைக்கப்பட்டோ, பேஸ் அல்லது நியூட்ரல் மின் கம்பிகள் இருப்பது உரிமம்தாரின் பார்வைக்கு வருமானால் அல்லது எர்த் கசிவு அறிகுறிகள் மின்னளவியில் காணப்பட்டால், சரியான மின்நுகர்வு பதிவுசெய்வதற்கு ஏற்ப அத்தகைய பிழையினை சரிசெய்ய வேண்டி உரிமம்தாரரால் எழுத்துப் பூர்வமாக மின்நுகர்வோருக்கு தெரிவிக்க வேண்டும். |
| 13. | **8. மின்னளவியின் அளவு எடுத்தலும், பட்டியலிடலும் அவற்றிற்கான கால இடைவெளிகளும்**<br>(1) xxx<br>(2) xxx<br>(3) வெறுமை | **8. மின்னளவியின் அளவு எடுத்தலும், பட்டியலிடலும் அவற்றிற்கான கால இடைவெளிகளும்**<br>(1) xxx<br>(2) xxx<br>(3) மின்பகிர்மான உரிமம்தாரரின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியால் நகர்ப்புறம் மற்றும் கிராமப்புறங்களில், ஒவ்வொரு பட்டியலிடல் சுழற்சி முறையிலும் ஒரு முறையாவது மின்னளவியின் அளவு எடுக்கப்படவேண்டும். அத்தகைய காலகட்டத்தின் வழக்கமான மதிப்பீட்டில் தற்போதுள்ள மின்னிணைப்புகள், முந்தைய பட்டியலிடல் சுழற்சியில் வழங்கப்பட்ட புதிய மின்னிணைப்புகள் மற்றும் துண்டிக்கப்பட்ட மின்னிணைப்புகள் போன்ற அனைத்து மின்னிணைப்புகளின் தற்போதைய நிலைகள் பதியப்பட வேண்டும். நவீன மின்னளவிகளில் (smart meter), ஒவ்வொரு பட்டியலிடல் சுழற்சி முறையிலும் ஒரு முறையாவது தொலைவிலிருந்து (remote) மின்னளவியின் அளவு எடுத்தல் வேண்டும். மற்ற முன்பணம் செலுத்தும் மின்னளவிகளில் மூன்று மாதங்களுக்கு ஒரு முறையாவது மின்பகிர்மான உரிமம்தாரரின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியால் மின்னளவியின் அளவு எடுத்தல் வேண்டும். தொலைநிலை மதிப்பீடு மற்றும் பட்டியலிடல் தொடர்பான தரவு, இணையதளம் அல்லது கைபேசி செயலி அல்லது குறுஞ்செய்தி மூலம் மின் நுகர்வோருக்குக் கிடைக்கும் படி செய்ய வேண்டும். நவீன முன் பணம் கட்டும் மின்னளவிகளைக் கொண்ட மின்நுகர்வோர் தங்கள் மின் அளவைச் சரிபார்க்க தேவையான தரவு அணுகல் வசதியை வழங்க வேண்டும். |
| 14. | 8.<br>(4) தாழ் அழுத்த மின்னிணைப்புகளைப் பொருத்தவரையில், மின்னளவின் கடைசி இலக்கம் ஒன்று முதல் ஐந்து வரையிலும் அதை உள்ளடக்கியதாகவும் உள்ள போது கீழ்ப் பத்தலகுப் பெருக்கலாகவும் (Lower multiple of 10 units) கடைசி இலக்கம் ஆறு முதல் ஒன்பது வரை உள்ள போது மேல் பத்தலகுப் பெருக்கலாகவும் (Higher multiple of 10 units) கொள்ள வேண்டும்.. | 8.<br>(4) நீக்கப்பட்டது |

| *வ எண்.* | *இருந்துவரும் வகைமுறை* | *திருத்தத்தினை உள்ளடக்கிய வகைமுறை* |
|---|---|---|
| 15. | 8.<br>(5) தாழ் அழுத்த மின்னிணைப்புகளைப் பொருத்தவரையில், மின்னளவுகள் எடுத்த பிறகு, மின்னளவுகளின் விவரங்களும், ஆற்றல் நுகர்வும் செலுத்த வேண்டிய கட்டணமும் நுகர்வோர் அட்டையில் குறிக்கப்பட வேண்டும். | 8.<br>(5) தாழ்வு அழுத்த மின்னிணைப்புகளைப் பொருத்தவரையில், மின்னளவுகள் எடுத்த பிறகு, மின்னளவுகளின் விவரங்களும், நுகர்வு அளவும் செலுத்த வேண்டிய கட்டணமும் நுகர்வோர் அட்டையில் குறிக்கப்பட வேண்டும்.<br>மின்னளவி அளவீடுகள், நுகர்வு அளவு, செலுத்த வேண்டிய கட்டணங்கள் மற்றும் கட்டணம் செலுத்துவதற்கான கடைசி தேதி போன்ற விவரங்கள் நுகர்வோருக்கு குறுஞ்செய்தி மற்றும் அஞ்சல் மூலம் பதிவு செய்யப்பட்ட கைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரிக்கு முறையே அனுப்பப்பட்டால், அத்தகைய தகவல் தொடர்பு இந்த ஒழுங்குமுறை விதித்தொகுப்பின் கீழ் உள்ள விதிகள் 8, 13 மற்றும் 14 ல் வரைமுறைகளின் படி பட்டியல் மற்றும் அறிவிப்பாக கருதப்படும்.<br>எந்த காரணத்திற்காகவும் மின் துண்டிக்கப்பட்டதற்கான தகவல் குறுஞ்செய்தி மூலம் நுகர்வோருக்கு துண்டிக்கப்பட்ட தேதி, இறுதி மின் அளவு, துண்டிக்கப்பட்டதற்கான காரணம் போன்ற விவரங்களுடன் தெரிவிக்கப்படும். |
| 16. | 8.<br>(6) நுகர்வோர், வழங்கப்பட்ட மின் ஆற்றலுக்கான கட்டணத்தை, உயர் அழுத்த மின்னிணைப்புகளைப் பொருத்தவரையில், மேலே சொன்னபடி மின்னளவு எடுத்து அதற்கான பட்டியல் தரப்பட்டதும், செலுத்த வேண்டும். தாழ் அழுத்த மின்னிணப்புகளைப் பொருத்தவரையில் மின்னளவி அட்டையில் மின் நுகர்வுக் கட்டணத்தைப் பதிவு செய்ததுமோ அல்லது மதிப்பீட்டு கணக்குச் சீட்டை அளித்ததுமோ செலுத்த வேண்டும். | 8.<br>**6) பட்டியல் தயாரித்தல் மற்றும் வழங்கல் வழிமுறை:**<br>(a) மேற்கூறப்பட்ட மின்னளவின்படி கணக்கிடப்பட்ட மின்வழங்களுக்கான கட்டணம் உயரழுத்த மின்னழுத்த மின்நுகர்வோருக்கு பட்டியல் வழங்கப்பட்டவுடன் மற்றும் தாழ்வழுத்த மின்நுகர்வோருக்கு மின்நுகர்வு கட்டணத்தை மின்னளவு அட்டையில் பதிவு செய்யப்பட்டவுடன் மின்நுகர்வோரால் செலுத்தப்பட வேண்டும்.<br>முன்பணம் செலுத்தும் சேவை வசதியுள்ள மின்அளவியை பொருத்தமட்டில், மின் அளவீட்டின் போது, மின்பகிர்மான உரிமம்தாரர் மின்நுகர்வோரின் கோரிக்கையின் பேரில் பட்டியலை வழங்குவார். முன்பணம் செலுத்தும் வசதியுள்ள மின்னளவிகளில் முன்பணம் செய்யப்பட்ட தொகை முழுவதும் செலவழிந்துவிட்டால் தானாகவே மின்விநியோகம் நிற்கும் வகையில் வடிவமைக்கப்படும். இருப்பினும், இது மின்துண்டிப்பாகக் கருதப்படாது மற்றும் மீட்டர் ரீசார்ஜ் செய்யப்படும் போதெல்லாம் மின் விநியோகம் மீண்டும் தொடரும்.<br>(b) மின்பகிர்மான உரிமம்தாரர், பட்டியல் அனுப்பப்பட்டதை குறுஞ்செய்தி / மின்னஞ்சல் மூலம் உயர் அழுத்த மின்நுகர்வோருக்கு அனுப்ப வேண்டும் மற்றும் தாழ்வழுத்த மின்நுகர்வோருக்கு மதிப்பீடு செய்யப்பட்ட நாளிலிருந்து, நான்கு நாட்களுக்குள் மின்நுகர்வோருக்கு தெரிவிக்க வேண்டும். இந்த தகவலில், செலுத்த வேண்டிய பண விவரமும், செலுத்த வேண்டிய கடைசி தேதியும் குறிப்பிட்டு இருக்க வேண்டும். மின்பகிர்மான உரிமம்தாரர் பட்டியல் உருவாக்கும் நாளில் அதன் இணையதளத்திலும் பட்டியலை பதிவேற்றம் செய்யவேண்டும். அனைத்து மின் நுகர்வோரின் குறைந்தபட்சம் கடந்த ஒரு வருடத்திற்கான பட்டியல் மற்றும் கட்டண விவரங்கள் மின்பகிர்மான உரிமம்தாரரின் இணையதளத்தில் இருத்தல் வேண்டும்.<br>(c) உரிமம்தாரர், உயர் அழுத்தம், LT CT மற்றும் தற்காலிக மின்னிணைப்புகளுக்கான முதல் பட்டியலை அதே பட்டியல் சுழற்சி காலத்தில் வழங்க வேண்டும். மற்ற வகை மின் இணைப்புகளுக்கு, முடிந்தவரை அதே பட்டியல் சுழற்சி காலத்தில் அல்லது புதிய மின் இணைப்பு வழங்கப்பட்ட தேதியிலிருந்து இரண்டு பட்டியல் சுழற்சி காலத்திற்குள் வழங்க வேண்டும். |

| வ எண். | இருந்துவரும் வகைமுறை | திருத்தத்தினை உள்ளடக்கிய வகைமுறை |
|---|---|---|
| | | (d) மின்நுகர்வோர் முதல் பட்டியலை குறிப்பிட்ட காலத்திற்குள் அல்லது வழக்கமான பட்டியலை அதற்குப் பிந்தைய காலகட்டங்களில் பெறவில்லையெனில், அவர் எழுத்துப்பூர்வமாக மின்பகிர்மான உரிமம்தாரரிடம் புகார் செய்ய வேண்டும். மின்பகிர்மான உரிமம்தாரர் ஏழு நாட்களுக்குள் பட்டியலை வழங்குவார். மின் நுகர்வோர் தனது பட்டியலின் விவரங்களை மின் பகிர்மான உரிமம்தாரரின் இணையதளத்திலிருந்தும் பெறலாம்<br>(e) மின்நுகர்வோர் மின்பகிர்மான உரிமம்தாரரிடமிருந்து நுகரப்படும் மின்சாரத்திற்கான கட்டணத்தை காலம் தவறாமல் முறையாக செலுத்துவதற்கு, சமமாக கடமைப்பட்டவராவார்.<br>(f) மின்பகிர்மான உரிமம்தாரர் ஒரு நிதியாண்டில் ஒரு மின் நுகர்வோருக்கு இரண்டுக்கும் மேற்பட்ட தற்காலிக பட்டியல்களை உருவாக்குதல் கூடாது. தவிர்க்க முடியாத சூழ்நிலை தவிர இரண்டுக்கும் மேற்பட்ட பட்டியிடல் சுழற்சி காலங்களுக்கு மேல் தற்காலிக பட்டியல் தொடர்ந்தால், மின்பகிர்மான உரிமம்தாரர் மின்னளவியின் உண்மையான மின்னளவினை வழங்கும்வரை மின்நுகர்வோர் நிலுவைத் தொகையை செலுத்த மறுக்கலாம்.<br>(g) பட்டியல் தொடர்பான குறைகள் அல்லது புகார்களை யாரிடம் தாக்கல் செய்ய அதிகாரமுள்ளதோ அத்தகைய அதிகாரமுள்ளவர் பற்றிய விவரங்களை பட்டியலுடன் இணைத்து வழங்கப்படுவதோடு, அவ்விவரங்கள் மின்பகிர்மான உரிமம்தாரரின் இணையதளத்திலும் இருக்குமாறு செய்ய வேண்டும்.<br>(h) வளாகம் காலியாகும் நிலையில், மின்பகிர்மான உரிமம்தாரர் மின் நுகர்வோரின் எழுத்துப்பூர்வ கோரிக்கையைப் பெற்றவுடன் மின்னளவியில் சிறப்பு மின் அளவினை எடுப்பதற்கு ஏற்பாடு செய்து, பட்டியல் தேதி வரை அனைத்து நிலுவைத் தொகைகளையும் சேர்த்து இறுதி பட்டியல் வழங்கவும் மற்றும் அத்தகைய இறுதிக் கட்டணம் பெறப்பட்டதிலிருந்து ஏழு நாட்களுக்குள் நிலுவைத் தொகை இல்லாத சான்றிதழையும் வழங்க வேண்டும். |
| 17. | **9. ஒப்பளித்த மின்தேவை போன்றவற்றில் மாற்றங்கள் உள்ளபோது மின்னளவியில் அளவெடுத்தல்**<br>**(1)** ஒப்பளித்த மின் தேவையில் மாற்றம் ஏற்படும் போது, முடிந்தவரையில் அந்த மாற்றத்தை அடுத்த மின்னளவு எடுக்கும் காலத்தோடு ஒன்றும்படி நடைமுறைப்படுத்த வேண்டும். இருந்தாலும் அப்படி செய்ய முடியாதபோது, மின்னளவியை மீளமைப்புக்குக் கொண்டு வந்து, முறையே, உரிய கால இடைவெளிகளில் பதிவாகும் பெரும் மின் தேவைகளின் விகிதத்தில், அக்கால இடைவெளிகளுக்குரிய பெரும மின் தேவைக் கட்டணங்களை கணக்கிட வேண்டும். | **9. ஒப்பளித்த மின்தேவை போன்றவற்றில் மாற்றங்கள் உள்ளபோது மின்னளவியில் அளவெடுத்தல்**<br>**(1)** ஒப்பளித்த மின் தேவையில் மாற்றம் ஏற்படும் போது, முடிந்தவரையில் அந்த மாற்றத்தை அடுத்த மின்னளவு எடுக்கும் காலத்தோடு ஒன்றும்படி நடைமுறைப்படுத்த வேண்டும். இருந்தாலும் அப்படி செய்ய முடியாதபோது, மின்னளவியை மீளமைப்புக்குக் கொண்டு வந்து, முறையே, உரிய கால இடைவெளிகளில் பதிவாகும் பெரும் மின் தேவைகளின் விகிதத்தில், அக்கால இடைவெளிகளுக்குரிய உச்ச மின் தேவைக் கட்டணங்களை கணக்கிட வேண்டும்.<br>திருத்திய சோதனை அறிக்கை (RTR) மின் தேவையின் தற்காலிகக் குறைப்பு தவிர, மின் தேவை மாற்றத்திற்கான அனைத்து தொடர்புடைய விவரங்களையும் உள்ளடக்கி எடுக்கப்படும். RTR இன் தேதியானது மின் தேவை மாற்றம் நடைமுறைக்கு வரும் தேதியிலிருந்து அமலுக்கு வரும். மின்னளவி விவரங்கள் / மின்னூட்ட மின்மாற்றியின் விவரங்கள் / இருப்பிலுள்ள / நிறுவப்பட்டுள்ள மின்னூட்ட மின்மாற்றியின் விகிதம், பெருக்கல் காரணி / மின்னளவி பெட்டியின் பாதுகாப்பு முத்திரைகள் செய்யப்பட்ட மாற்றங்கள், திருத்திய சோதனை அறிக்கை (RTR) யில் தெளிவாக ஆவணப்படுத்தப்பட வேண்டும். எனினும், மின் அளவீட்டு முறையில் எந்த மாற்றமும் இல்லாமல் மின் நுகர்வோர் கோரியபடி பருவகால அடிப்படையில் தற்காலிகமாக மின் தேவையைக் குறைப்பதற்கு, திருத்திய சோதனை அறிக்கை (RTR) தேவையில்லை. |

| வ எண். | இருந்துவரும் வகைமுறை | திருத்தத்தினை உள்ளடக்கிய வகைமுறை |
|---|---|---|
| | (2.) xxx | (1A) பருவகாலத் தேவைக்கு ஏற்ப மாறுகின்ற மின் தேவை குறைப்பு, மின் கட்டண வீதப்படி IIIB இன் கீழ் உள்ள தகவல் தொழில்நுட்ப சேவைகள் தவிர மற்ற தொழில்கள் மற்றும் மின் கட்டண வீதப்படி V இன் கீழ் உள்ள திருமண மண்டபங்களுக்கு பொருந்தும். விருப்பமுள்ள மின் நுகர்வோரின் விண்ணப்பத்தின் அடிப்படையில் மாறுகின்ற மின் தேவையின் குறைப்பு நடைமுறைப்படுத்தப்படும். அத்தகைய விண்ணப்பம் எளிமையான வடிவத்தில் நிகழ்நிலையில் (online) மேற்கொள்ளப்படும். ஆய்வு தேவையில்லை. மின் தேவையை தற்காலிகமாகக் குறைப்பதற்காக அளவீட்டு முறை திறனை குறைக்க வேண்டியதில்லை. விண்ணப்பத் தேதியைத் தொடர்ந்து, மின்னளவீடு மற்றும் உச்சமின்தேவை கணக்கீடு செய்யும் அடுத்த மதிப்பீட்டு தேதியிலிருந்து மின் தேவைக் குறைப்பு நடைமுறைக்கு வரும். ஒப்பந்தக் மின்தேவை மாற்றப்படாமல் அதே அளவில் சோதனை அறிக்கை மற்றும் ஒப்பந்தத்தில் மாற்றமின்றி தொடரும். திருத்திய சோதனை அறிக்கை தேவையில்லை.<br>மின் தேவைக் குறைப்பு குறைந்தபட்சம் ஒரு பட்டியல் சுழற்சி காலத்திற்கு பொருந்தும். ஒரு வருட காலதொகுப்பில் நான்கு முறை மின் தேவைக் குறைப்பு அனுமதிக்கப்படுகிறது. ஒப்பளித்த மின்தேவையிலிருந்து குறைக்கப்பட்ட மின்தேவைக்கு ஒப்புதல் வழங்கப்பட்ட முதல் பட்டியல் சுழற்சி கால தொடக்கத்திலிருந்து, ஒரு வருடத் காலத்தொகுப்பு கணக்கிடப்படும். ஒரு குறிப்பிட்ட ஒப்புதலுக்குப் பிறகு, மின் நுகர்வோர், மின்தேவை குறைப்பு அனுமதிக்கப்பட்ட பட்டியல் சுழற்சி காலம் முடிவடைவதற்குள் விண்ணப்பித்து, மின் தேவைக் குறைப்பு காலத்தை நீட்டிக்க முடியும், மேலும் மின்நுகர்வோரின் விருப்பத்தின்படி ஒப்புதல் அளிக்கப்பட்ட காலம் முடிந்த பின், மின்தேவையை ஒப்பளித்த மின்தேவை அளவிற்குள் அதிகரிக்கலாம். இவ்விரண்டு வகைகளிலும், கால நீட்டிப்புக்கான விண்ணப்பம் அல்லது விரும்பிய மின் தேவைக் குறைப்பைத் திருத்துவது, ஒரு வருடத்தில் அனுமதிக்கப்பட்ட நான்கு எண்ணிக்கையை முறைகளுக்குள் கணக்கிடும் நோக்கத்திற்காக எடுத்துக்கொள்ளப்படும்.<br>மேற்கூறிய மின் தேவைக் குறைப்புக் காலத்தின் காலாவதியாகிய உடன் குறைக்கப்பட்ட மின் தேவை தானாகவே காலாவதியாகும் தேதியில் ஒப்பந்த மின் தேவையின் அளவிற்கு மீண்டும் மாற்றப்படும். பட்டியல் சுழற்சி காலத்தில் குறைக்கப்பட்ட தற்காலிக மின் தேவையின் அளவை விட பதிவுசெய்யப்பட்ட மின் தேவை அதிகமாக இருந்தால், ஒப்பந்தம் செய்யப்பட்ட முழு மின் தேவைக்கான நிலையான கட்டணங்கள் அந்த பட்டியல் சுழற்சி காலத்திற்கு செலுத்தப்பட வேண்டும். குறிப்பிட்ட ஆண்டில் எந்த நேரத்திலும் ஒப்பந்த மின் தேவையை மீட்டெடுக்காமல் மின் நுகர்வோரால் அந்த வருடத்தின் தொடர்ச்சியான காலத்தில் தற்காலிக மின் குறைப்பு செய்யப்பட்டால் அல்லது நீட்டிக்கப்பட்டால், அத்தகைய ஒரு வருட காலப்பகுதியின் முடிவில் குறைக்கப்பட்ட மின் தேவையானது ஒப்பந்த மின்தேவையாக நிரந்தரமாக்கப்பட்டு திருத்தப்பட்ட RTR மற்றும் ஒப்பந்தத்துடன் நிரந்தரமாக்கப்படும். தேவைப்பட்டால், மின் அளவீட்டு முறையும் திறன் இறக்கம் செய்யப்படும். அதன்பிறகு, கூடுதல் மின் தேவை மின் நுகர்வோருக்கு தேவைப்பட்டால், அவர் கூடுதல் மின் தேவைக்காக புதிதாக விண்ணப்பிக்க வேண்டும், அத்தகைய விண்ணப்பத்தின் போது விதிமுறைகள் மற்றும் செலுத்த வேண்டிய அனைத்து கட்டணங்களும் பொருந்தும். அத்தகைய விண்ணப்பங்களுக்கு தனி முன்னுரிமை வரிசை கிரமம் வழங்கப்படும்.<br>உரிமம்தாரர் தடையற்ற செயலாக்கம் மற்றும் சீரான நடைமுறைக்காக விண்ணப்பபடிவம் மற்றும் பட்டியலியல் மென்பொருளில் தேவையான மாற்றங்களைச் செய்ய வேண்டும்.<br>(2.) xxx |

| வ எண். | இருந்துவரும் வகைமுறை | திருத்தத்தினை உள்ளடக்கிய வகைமுறை |
|---|---|---|
| 18. | **10. மின்னளவை எடுக்க மின்னளவியை அணுக இயலாமை**<br>(1) லிருந்து (5) வரை xxx | **10. மின்னளவை எடுக்க மின்னளவியை அணுக இயலாமை**<br>(1) லிருந்து (5) வரை xxx<br>(6) எதிர்பாராத இடர்பாடுகளின் காரணமாக உரிமம்தாரரால் மின் மதிப்பீடு செய்ய இயலாத நிலையில் / வலுக்கட்டாய நிகழ்வின் சூழ்நிலையில், மின்னிணைப்பின் பட்டியலுக்காக தேவைப்படும் மின்னளவு மற்றும் தேதியினை குறிப்பிட்டு மின்னளவியில் காணப்படும் மின் அளவீட்டுடன் கூடிய புகைப்படத்தை பதிவு செய்யப்பட்ட கைபேசி அல்லது மின்னஞ்சல் மூலமாக நியமிக்கப்பட்ட அதிகாரிக்கு அனுப்பி வைக்கும் முறையினை உரிமம்தாரர் மின்நுகர்வோருக்கு அளிக்கலாம். |
| 19. | **11. மின்னளவி இல்லாத, மின்னளவு பழுதுற்ற நிலைகளில் பட்டியலிடுவதற்கு மதிப்பீடு செய்தல்.**<br>(1) நுகர்வோருக்கு மின்னளவி ஏதும் வைக்காமல் மின் வழங்கலைத் தந்திருந்தாலோ அல்லது பொருத்தப்பட்டுள்ள மின்னளவி பழுதுற்றோ அல்லது செயல்படாமலோ இருந்தாலோ, மின் ஆற்றல் திருட்டோ வேறுவிதி மீறலோ நடந்திருப்பதற்கான ஐயம் ஏதும் ஏற்படாத நிலையில், மின்னளவி நிறுவப்படாத அல்லது நிறுவிய மின்னளவி பழுதுற்ற நிலைமைகளில் அக்கால இடைவெளியில் வழங்கப்பட்ட மின்சார அளவை பின்வரும் முறைகளில் மதிப்பீடு செய்ய வேண்டும்.. | **11. மின்னளவி பழுதுற்ற நிலைகளில் பட்டியலிடுவதற்கு மதிப்பீடு செய்தல்.**<br>(1) நிறுவப்பட்ட மின் அளவி பழுதடைந்ததாகவோ அல்லது எரிந்ததாகவோ அல்லது செயல்படுவதை நிறுத்திவிட்டதாக கண்டறியப்பட்டால், மின்திருட்டு அல்லது விதிமீறல் பற்றிய சந்தேகமில்லாத பட்சத்தில், பழுதடைந்த மின்னளவியிலிருந்து CMRI கருவியின் மூலம் இறக்குமதி செய்து ஆய்வு செய்யப்பட்ட தரவுகள், மின் சுமை வளைவு வரைபடம் போன்றவற்றின் மூலமாகவும் தள நிலையைக் கருத்தில் கொண்டும் மின்னளவி பழுதாகியுள்ள காலத்தில் வழங்கப்பட்ட மின்சாரத்தின் அளவு கணக்கிடப்படும். அவ்வாறு தரவிறக்கம் செய்ய முடியாத இடங்களில், மின்னளவி பரிசோதிக்காததற்கான காரணம் அல்லது குறைபாடுள்ள அல்லது எரிந்த மின்னளவியிலிருந்து தரவைப் பதிவிறக்காததற்கான காரணம் பதிவு செய்யப்பட்டு உரிமம்தாரரால் நியமிக்கப்பட்ட அதிகாரியால் கையொப்பமிடப்படும். தரவுகளை பதிவிறக்கம் செய்ய முடியாத இடங்களில், மின்னளவி பழுதடைந்த காலத்தில் வழங்கப்பட்ட மின்சாரத்தின் அளவு, கீழே குறிப்பிடப்பட்டுள்ளபடி மதிப்பிடப்படும். |
| 20. | (2) to (5) xxx<br>(6) xxx<br>(7) xxx | (2) to (5) xxx<br>(6) xxx.<br>மேற்கூறிய அனைத்து நிகழ்வுகளிலும், தொடர்புடைய சோதனை முடிவுகள் மற்றும் முந்தைய காலத்திற்கான அதாவது மின்னளவி பழுதடைந்ததாகக் கண்டறியப்பட்ட காலத்திற்கான கணக்கீட்டின் அடிப்படை மற்றும் கணக்கிடும் முறையை விளக்கும் தெளிவான பட்டியலை நுகர்வோருக்கு ஒப்புகையுடன் எழுத்துப்பூர்வமாக தெரிவிக்க வேண்டும்.<br>(7) xxx |

| *வ எண்.* | *இருந்துவரும் வகைமுறை* | *திருத்தத்தினை உள்ளடக்கிய வகைமுறை* |
|---|---|---|
| 21. | **14A தானியங்கி மின் பயனீட்டுக் கணக்கீட்டு அமைப்புமுறையின் கீழ் நுகர்வோருக்கான அறிவிப்பு:** இந்த விதித்தொகுப்பின் 5,8,13,14 மற்றும் 16 ம் ஒழுங்குமுறை விதிகளில் அல்லது மின்பகிர்மான விதித் தொகுப்பின் ஏதாவது வகைமுறைகளில் எது எவ்வாறு இருப்பினும், தானியங்கி மின் பயனீட்டுக் கணக்கீடு (AMR) தொழில்நுட்பவியல் மூலமான தானியங்கி மின் பயனீட்டுக் கணக்கீட்டு அமைப்புமுறை / வினைத்திறமிக்க மின்னளவிகளைப் பயன்படுத்தி மேம்பட்ட மின்னளவியிடல் கட்டமைப்பு (AMI) தொழில்நுட்பவியல் / வினைத்திறமிக்க மின்னளவியைப் பயன்படுத்தும் எதாவது பிற மாதிரி தொழில்நுட்பவியல் ஆகியவைகளை உரிமம்தாரர் எங்கெல்லாம் செயல்படுத்துகிறாரோ அங்கெல்லாம் பட்டியலிடல் விவரங்களான மின்நுகர்வு, மின்நுகர்வுக்கான கட்டணங்கள், கட்டணம் செலுத்துவதற்கான உரியனால், கூடுதல் பிணைவைப்புத் தொகைக்கான கேட்பு, ஏதாவது பிற கேட்பு / தகவல், முதலியன, மின்னஞ்சல் / குறுஞ்செய்தி / கைபேசிப்பயன்பாடு / ஆணையத்திற்கு தகவல் அளித்துவிட்டு பின்னர் தமிழ்நாடு மின்னுற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தால் பின்பற்றக்கூடிய ஏதாவது பிற மின்னணு முறைமை ஆகியவற்றின் மூலமாக தெரியப்படுத்தப்படுதல் வேண்டும் மற்றும் அத்தகைய செய்தியளிப்பானது நேர்வுக்கேற்ப அத்தகைய நோக்கத்திற்காக வெளியிடப்பட்ட அறிவிப்பாக கருதப்படுதல் வேண்டும். | **14A தானியங்கி மின் பயனீட்டுக் கணக்கீடு அமைப்பு முறையின் கீழ் நுகர்வோருக்கான அறிவிப்பு:** இந்த விதித்தொகுப்பின் 5,8,13,14 மற்றும் 16–ம் ஒழுங்குமுறை விதிகளில் அல்லது மின்பகிர்மான விதித் தொகுப்பின் ஏதாவது வகைமுறைகளில் எது எவ்வாறு இருப்பினும், தானியங்கி மின் பயனீட்டுக் கணக்கீடு (AMR) தொழில்நுட்பவியல் மூலமான தானியங்கி மின் பயனீட்டுக் கணக்கீடு அமைப்புமுறை / வினைத்திறமிக்க மின்னளவிகளைப் பயன்படுத்தி மேம்பட்ட மின்னளவியிடல் கட்டமைப்பு (AMI) தொழில்நுட்பவியல் / வினைத்திறமிக்க மின்னளவியைப் பயன்படுத்தும் எதாவது பிற மாதிரி தொழில்நுட்பவியல் அல்லது கணினிமயமாக்கப்பட்ட பட்டியல் ஆகியவைகளை உரிமம்தாரர் எங்கெல்லாம் செயல்படுத்துகிறாரோ அங்கெல்லாம் பட்டியலிடல் விவரங்களான மின்நுகர்வு, மின்நுகர்வுக்கான கட்டணங்கள், கட்டணம் செலுத்துவதற்கான உரிய நாள், கூடுதல் பிணைவைப்புத் தொகைக்கான கேட்பு, ஏதாவது பிற கேட்பு / தகவல், இடம் பெயர்ந்த சிதைவு அறிகுறிகள் முதலியன, பதிவு செய்யப்பட்ட கைபேசி / மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் / குறுஞ்செய்தி வழியாக அல்லது உரிமம்தாரரால் பின்பற்றக்கூடிய ஏதாவது பிற மின்னணு முறைமை ஆகியவற்றின் மூலமாக தெரியப்படுத்தப்படுதல் வேண்டும் மற்றும் அத்தகைய செய்தியளிப்பானது அத்தகைய நோக்கத்திற்காக வெளியிடப்பட்ட அறிவிப்பாக கருதப்படும்.<br>இந்த நோக்கத்திற்காக, அனைத்து நுகர்வோர்களும் தங்கள் கைபேசி எண் / மின்னஞ்சல் முகவரியை உரிமம்தாரரிடம் பதிவு செய்ய வேண்டும், மேலும் பதிவு செய்யப்பட்ட கைபேசி எண் / மின்னஞ்சல் முகவரியின் சரியான தன்மை மற்றும் அவ்வப்போது புதுப்பிப்பதை உறுதி செய்வது நுகர்வோரின் பொறுப்பாகும். இருப்பினும், உரிமம்தாரர் அத்தகைய சரிபார்ப்பு மற்றும் புதுப்பிப்புக்கு பொருத்தமான வசதியை வழங்க வேண்டும். |
| 22. | **15. கட்டணம் செலுத்தும் முறைமை Mode.**<br>(1) நுகர்வோரிடமிருந்து பெறும் ஒவ்வொரு கட்டணத்துக்கும் தொகைக்கும் உரிமம்தாரர் உரிய பற்றுச் சீட்டை (Receipt) வழங்கவேண்டும். | **15. கட்டணம் செலுத்தும் முறைமை Mode.**<br>(1) நுகர்வோரிடமிருந்து பெறும் ஒவ்வொரு கட்டணத்துக்கும் தொகைக்கும் உரிமம்தாரர் உரிய பற்றுச் சீட்டை (Receipt) வழங்கவேண்டும்.<br>மின்நுகர்வோர் தங்கள் விருப்பத்திற்கேற்ப நிகழ்நிலை (online) அல்லது நேரடியாக மின்கட்டணத்தை செலுத்தலாம். |
| 23. | 2) பல்வகை கட்டணங்கள் பொருட்டானவை உள் அடங்களான, உயரழுத்தப் பட்டிகள் அனைத்தும், பட்டியல் தேதியிலிருந்து உரிமம்தாரரால் குறிப்பிடப்பட்ட கொடுக்கப்பட வேண்டிய தேதிக்குள் செலுத்தப்படுதல் வேண்டும். உயர் அழுத்த மின்நுகர்வோர், ரொக்கமாக அல்லது உள்ளூர் வங்கியின் கேட்பு வரைவோலை மூலமாக அல்லது மின்பகிர்மான உரிமம்தாரரின் நியமனம் செய்யப்பட்ட அதிகாரியின் தலைமையிடத்திலுள்ள வங்கிக்கு வரையப்பட்ட காசோலை மூலமாக அல்லது மின்னணுவியல் செலுத்துகை மூலமாக அல்லது வங்கி கிளையின் முகப்பிடங்கள் வாயிலான வசூலிப்பு மூலமாக அல்லது மின்பகிர்மான உரிமம்தாரரால் குறிப்பிடப்பட்ட அஞ்சலகங்கள் மூலமாக பட்டிகளுக்கான தொகை செலுத்தப்படுதல் வேண்டும். ரூ.2000/– (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) மேற்பட்ட தொகைகளுக்கான செலுத்துகை, கேட்பு வரைவோலை / காசோலை (மூலமாகச் செலுத்தப்படும். சூழ்நிலைகளுக்கு ஏற்ப, மின்பகிர்மான உரிமம்தாரரின் நியமனம் செய்யப்பட்ட அதிகாரி ரொக்க செலுத்துகைகளை ஏற்றுக் கொள்தல் வேண்டும் மற்றும், மின் நுகர்வோரிடம் வருங்கால செலுத்துகைகளை கேட்பு வரைவோலை / காசோலை மூலமாகச் செய்யுமாறு ஆலோசனை | 2) இதர கட்டணங்கள் உட்பட அனைத்து உயர் அழுத்த மின் கட்டணங்களும், பட்டியல் தேதியிலிருந்து உரிமம்தாரர் நிர்ணயித்த கடைசி தேதிக்குள் செலுத்தப்படவேண்டும். உயர் அழுத்த மின் நுகர்வோர் 1000/– ரூபாய்க்கு மேல் உள்ள மின்பட்டியல் கட்டணத்தை, RTGS / NEFT / நிகழ்நிலை பணப் பரிமாற்றம் போன்ற மின்னணு முறையில் செலுத்த வேண்டும். சூழ்நிலைகளைப் பொறுத்து, மின்பகிர்மான உரிமம்தாரரின் நியமிக்கப்பட்ட அதிகாரி சிறப்பு சந்தர்ப்பங்கள் மற்றும் தவிர்க்க முடியாத சூழ்நிலைகளில் ரொக்கபணமாக ஏற்பார். பணம் செலுத்த அனுமதிக்கப்பட்ட காலாவதி தேதியிலிருந்து பதினைந்து நாட்களுக்குள் (அறிவிப்பு காலம்) பணம் பெறப்படாவிட்டால், மின் விநியோகம் துண்டிக்கப்படும். எவ்வாறாயினும், இந்த விதித்தொகுப்பில் குறிப்பிடப்பட்டுள்ளபடி தாமதச்செலுத்த உபரி கட்டணம் வசூலுக்கு உட்பட்டு, மின்பகிர்மான உரிமம்தாரரின் நியமிக்கப்பட்ட அதிகாரிக்கு செய்யப்பட்ட விண்ணப்பத்தின் பேரில், பணம் செலுத்த அனுமதிக்கப்பட்ட அறிவிப்புக் காலத்தின் காலாவதிக்கு அப்பால் நுகர்வோர் பணம் செலுத்துவதற்கு நேரத்தை நீட்டிக்க அனுமதிக்கலாம். |

| வ எண். | இருந்துவரும் வகைமுறை | திருத்தத்தினை உள்ளடக்கிய வகைமுறை |
|---|---|---|
| | வழங்குதல் வேண்டும். எவ்வகையான காரணத்தின் பேரிலும், காசோலைக்கு மதிப்பு மறுக்கப்படும் நேர்வில் அதன்பின்பு, உயர் அழுத்த மின் நுகர்வோர், உயர் அழுத்த மின்பட்டிகளுக்கு ரொக்கமாக அல்லது கேட்பு வரைவோலை மூலமாகச் செலுத்துமாறு கோரப்படுதல் வேண்டும். பணச் செலுத்துகை (அறிவிப்புக் காலமான) செலுத்துவதற்காக அனுமதிக்கப்பட்ட உரிய தேதி கழிந்ததிலிருந்து பதினைந்து நாட்களுக்குள் பெறப்படாதிருக்குமானால், மின் வழங்கல் மின் துண்டிப்பு செய்யப்படும். எனினும், மின் நுகர்வோர், இந்த விதித்தொகுப்பில் குறித்துரைக்கப்பட்டவாறு தாமதச் செலுத்துகைக்கான உபரிக் கட்டண (BPSC) விதிப்பிற்கு உட்பட்டு. மின்பகிர்மான உரிமம்தாரரால் நியமிக்கப்படும் அதிகாரியிடம் விண்ணப்பம் செய்வதன் பேரில் செலுத்துவதற்காக அனுமதிக்கப்பட்ட அறிவிப்புக் காலஅளவு முடிவடைந்த<br>பின்பும், செலுத்துகை செய்வதற்கு கால நீட்டிப்பு அனுமதிக்கப்படலாம். | |
| | (3) தாழ்வழுத்த நுகர்வோர், ரொக்கமாக அல்லது வரைவஞ்சல் மூலமாக அல்லது உள்ளூர் வங்கியின கேட்பு வரைவோலை மூலமாக அல்லது மின்பகிர்மான பிரிவு அலுவலகம் அமைந்துள்ள இடத்தில் உள்ள வங்கிக்கு வரையப்பட்ட காசோலை மூலமாக அல்லது மின்னணுவியல் செலுத்துகை வாயிலாக, அல்லது வங்கியின் கிளை முகப்பிடங்கள் வாயிலான வசூலிப்பு மூலமாக அல்லது மின் பகிர்மான உரிமம்தாரரால் குறிப்பிடப்பட்ட அஞ்சல் அலுவலகம் முதலியவை மூலமாக கொடுபடவேண்டிய தொகையைச் செலுத்ததல் வேண்டும். எனினும், உள்ளாட்சி அமைப்புகள், மற்றும் இருப்பூர்தியங்கள், தங்களுடைய அலுவலகம், அமைந்துள்ள இடத்திலுள்ள வங்கிகளுக்கு வரையப்பட்ட காசோலையை வழங்கலாம் மற்றும் உரிமம்தாரர், அத்தகைய மின்நுகர்வோரிடமிருந்து வசூலிப்பு கட்டணங்கள் எவையேனுமிருப்பின், அவற்றைக் கோரலாம். ரூ. 5000/– (ரூபாய் ஐயாயிரம் மட்டும்) –க்கு மேற்பட்ட தொகைகளுக்கான செலுத்துகை கேட்பு வரைவோலை / காசோலை மூலமாகச் செலுத்தப்படும். சூழ்நிலைகளுக்கு ஏற்ப, மின்பகிர்மான உரிமம்தாரரின் நியமனம் செய்யப்பட்ட அதிகாரி ரொக்கச் செலுத்துகைகளை ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும் மற்றும் வருங்கால செலுத்துகைகளை கேட்பு வரைவோலை / காசோலை மூலமாகச் செய்யுமாறு ஆலோசனை வழங்குதல் வேண்டும். | (3) குறைந்த மின்னழுத்த மின் நுகர்வோர் உரிமம்தரரால் நிர்ணயிக்கப்பட்ட முறையில் நிலுவைத் தொகையை ரொக்கமாகவோ அல்லது நிகழ்நிலையிலோ அல்லது உள்ளூர் வங்கியின் பண ஆணை அல்லது வரைவோலை மூலமாகவோ அல்லது மின்பகிர்மான பிரிவு அலுவலகம் அமைந்துள்ள பகுதியில் உள்ள வங்கியில் வரையப்பட்ட காசோலை மூலமாகவோ அல்லது வங்கியின் கிளை அல்லது தபால் அலுவலக வசூல் மையத்தில் மின்னணு கட்டண மூலம் செலுத்தலாம். எனினும், உள்ளாட்சி அமைப்புகளும், ரயில்வே துறையும் தங்கள் அலுவலகத்தின் இடத்தில் அமைந்துள்ள வங்கிகளில் காசோலையை வழங்கலாம் மற்றும் உரிமம்தாரர் அத்தகைய நுகர்வோரிடமிருந்து வசூல் கட்டணங்கள் ஏதேனும் இருந்தால் கோரலாம். ரூ.1000/–க்கு மிகுதியான செலுத்துதல் கேட்பு வரைவோலை / காசோலை / நிகழ்நிலை யாக செலுத்த விரும்பப்படுகிறது. எனினும் சூழ்நிலையை பொறுத்து மின் பகிர்மான உரிமம்தாரரின் நியமிக்கப்பட்ட அதிகாரி செலுத்தல்களை ரொக்கமாகவும் ஏற்றுக்கொள்வதோடு மற்றும் எதிர்காலத்தில் கேட்புவரைவோலை / காசோலை / நிகழ்நிலை யாக செலுத்தும்படி நுகர்வோருக்கு அறிவுறுத்த வேண்டும். |
| | (4) xxx | (4) xxx |

| வ எண். | இருந்துவரும் வகைமுறை | திருத்தத்தினை உள்ளடக்கிய வகைமுறை |
|---|---|---|
| 24. | **16. மின்கட்டணங்களை முன்னதாகச் செலுத்துவதற்கான தெரிவுரிமை :** மின் கட்டணங்களை முன்னதாகச் செலுத்துவதற்கு தெரிவு செய்துள்ள மின்நுகர்வோர் அவ்வாறு செய்வதற்கு அனுமதிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய வைப்பீடுகள், மின்நுகர்வோர் மின் அட்டையில் பதிவு செய்யப்படுதல் வேண்டும். அத்தகைய முன்பணத்தொகைக்கான வட்டியானது, வங்கி வீதத்தில் அல்லது ஆணையத்தினால் குறித்துரைக்கப்படும் வீதத்தில் மீதமுள்ள முன்வைப்பு தொகையில் கணக்கிடப்படுதல் வேண்டும் மற்றும் மின்நுகர்வோரின் பேரேட்டுக் கணக்கில் வரவு வைக்கப்படுதல் வேண்டும். | **16. மின்கட்டணங்களை முன்னதாகச் செலுத்துவதற்கான தெரிவுரிமை :** மின் கட்டணங்களை முன்னதாகச் செலுத்துவதற்கு தெரிவு செய்துள்ள மின்நுகர்வோர் அவ்வாறு செய்வதற்கு அனுமதிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய வைப்பீடுகள், மின்நுகர்வோர் மின் அட்டையில் பதிவு செய்யப்படுதல் வேண்டும். அத்தகைய முன்பணத்தொகைக்கான வட்டியானது, வங்கி வீதத்தில் அல்லது ஆணையத்தினால் குறித்துரைக்கப்படும் வீதத்தில் மீதமுள்ள முன்வைப்பு தொகையில் கணக்கிடப்படுதல் வேண்டும் மற்றும் மின்நுகர்வோரின் பேரேட்டுக் கணக்கில் வரவு வைக்கப்படுதல் வேண்டும்.<br>தொகையின் சிறிய மதிப்பின் பற்றாக்குறையின் காரணமாகவோ சொற்ப நிலுவைத்தொகையை (பட்டியலிட்ட மின்கட்டண தொகைக்கும் மின்நுகர்வோர் செலுத்திய அதிகப்படியான தொகைக்கும் உள்ள வித்தியாசம்) மின்நுகர்வோருக்கு வழங்க இயலாவிட்டாலோ அல்லது மின்நுகர்வோர் கவனக்குறைவாக கூடுதல் தொகை காசோலையை தயாரித்திருந்தாலோ, பாக்கி நிலுவைத்தொகை மின்நுகர்வோரின் வாய்மொழி ஒப்புதலுடன் மின்நுகர்வோர் கணக்கின் வைப்புத்தொகையில் வரவு வைக்கப்படும். |
| 25. | **17. மின் வழங்கலுக்கான இசைவுப் பத்திரம், கட்டணங்களை மீட்பது பற்றிய விபரங்கள்**<br>(1) முதல் (6) xxx வரை<br>(7) உரிமம்தாரர், (3)ஆம் உள்–ஒழுங்குமுறைவிதியில் குறிப்பிடப்படும் அறிவிப்பினைப் பெற்றதன் பேரில், நுகர்வோரால் செய்யப்பட்ட பிணைய வைப்புத்தொகை அல்லது கூடுதல் பிணைய வைப்புத்தொகை அல்லது ஏதேனும் பிற வைப்புத்தொகைக்கு எதிராக, நுகர்வோரிடமிருந்து நிலுவைகளைத் தீர்ப்பதற்கு அவசியமாகலாகும், நுகர்வோரிடமிருந்து கொடுக்கப்படவேண்டிய நிலுவைகளைச் சரிக்கட்டுதல் வேண்டும் மற்றும் சரிக்கட்டுதல் செய்த பின்பு, மீதி வைப்பீட்டுத்தொகை, ஏதேனுமிருப்பின், அதனை, (3) ஆம் உள்– ஒழுங்குமுறைவிதியில் குறிப்பிடப்படும் அறிவிப்புக் காலஅளவு முடிவடையும் தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் நுகர்வோருக்குத் திருப்பிக் கொடுத்தல் வேண்டும். | **17. மின் வழங்கலுக்கான இசைவுப் பத்திரம், கட்டணங்களை மீட்பது பற்றிய விபரங்கள்**<br>(1) முதல் (6) xxx வரை<br>(7) உள் ஒழுங்குமுறை விதியில் குறிப்பிடப்பட்டுள்ளபடி அறிவிப்பைப் பெற்றவுடன், உரிமம்தாரர், பாக்கி தொகையை கழிக்க தேவையுள்ள நிலையில் மின் நுகர்வோர் தனக்குச் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையை நுகர்வோரிடமிருந்து பெறப்பட்ட பாதுகாப்பு வைப்புத்தொகை அல்லது கூடுதல் பாதுகாப்பு வைப்புத்தொகை அல்லது வேறு ஏதேனும் வைப்புத்தொகை இருப்பின் அவைகளிலிருந்து நிலுவைத்தொகை சரிசெய்யப்பட்டு, அவ்வாறு சரி செய்த பின்னர் மீதமுள்ள வைப்புத்தொகை ஏதும் இருப்பின் அதனை, உள் ஒழுங்குமுறை விதி (3)ல் குறிப்பிடப்பட்டுள்ள அறிவிப்புக் காலம் முடிவடைந்த நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் மின் நுகர்வோர் வங்கி கணக்கு விவரங்களை தெரிவித்திருந்தால் மின் நுகர்வோருக்கு தகுந்த அறிவிப்புடன் மின் நுகர்வோரின் வங்கி கணக்கில் நேரடியாக திருப்பிச் செலுத்தப்படும். |
| 26. | 17<br>(8) நுகர்வோர் எவரும் ஒன்றுக்கு மேற்பட்ட மின்னிணைப்பு பெற்றிருக்கிறவிடத்து, அவர் மின்னிணைப்புகளில் எவையேனும் ஒன்று தொடர்பான நிலுவைத்தொகையினை செலுத்தத் தவறுவாரானால், உரிமம்தாரர், மின்னிணைப்புகள் தனிப்பட்ட இசைவுப் பத்திரங்களின் கீழ் உள்ளடங்கி இருந்தபோதிலும், அனைத்து மின்னிணைப்புகளுக்கான நிலுவைத் தொகைகள் அனைத்தையும் செலுத்தும் வரையில், உரிய அறிவிப்பு கொடுத்து, நுகர்வோரின் பெயரிலுள்ள பிற மின்னிணைப்புகள் துண்டிக்கப்படுமாறு செய்யலாம்.<br>9(a) to 9(c) xxx | 17<br>(8) எந்தவொரு மின் நுகர்வோர் ஒன்றுக்கும் மேற்பட்ட மின் இணைப்புகளை வைத்திருந்தால், சரிபார்க்கப்பட்ட தணிக்கையின் மூலம் சுட்டிக்காட்டப்பட்ட நிலுவைத் தொகைகள், மின் திருட்டு, அங்கீகரிக்கப்படாத மின் பயன்பாடு மற்றும் விதிமீறல் ஆகியவற்றிற்கான கட்டணங்கள், வைப்பு தொகை அளிப்பு பணிகளின் கீழ் தொடர்பான நிலுவைத் தொகைகள் உள்ளிட்ட கட்டணங்கள் போன்ற நிலுவையில் உள்ள கட்டணங்களை மின் நுகர்வோர் ஏதேனும் ஒரு மின் இணைப்பில் செலுத்த தவறினால், உரிமம்தாரர் அத்தகைய நிலுவைத் தொகையை மின் நுகர்வோரின் பெயரில் உள்ள பிற மின் இணைப்பில் (களில்) இணைத்து, அம்மின்னிணைப்பு (களை) மின் இணைப்பை கணக்கீடு முறையுடன் அத்தகைய நிலுவைத் தொகைகள் செலுத்தப்பட வேண்டிய அதிகாரத்தை மேற்கோள் காட்டி உரிய அறிவிப்பை மின்நுகர்வோருக்கு செலுத்தி அந்த மின் நுகர்வோரின் பெயரில் உள்ள அனைத்து மின் இணைப்புகளின் நிலுவைக்கட்டணங்களை முழுவதுமாக செலுத்தும் வரையில் மின் இணைப்புகள் தனித்தனி ஒப்பந்தங்களின் கீழ் உள்ள போதிலும் மின் துண்டிப்பு செய்யலாம்.<br>9(a) to 9(c) xxx |

| வ எண். | இருந்துவரும் வகைமுறை | திருத்தத்தினை உள்ளடக்கிய வகைமுறை |
|---|---|---|
| 27. | **19. அதிகாரமற்ற மின் சாரப் பயன்பாடு – புலனாய்வு மற்றும் அமலாக்கம் பற்றிய வழிவகைகள்**<br>(1) முதல் (5) xxx வரை<br>6) இதன்படியான மதிப்பீடு சட்டத்தின் துணைப்பிரிவு (5) இல் குறிப்பிட்டுள்ள மின்னிணைப்புகளுக்கான கட்டண வீதங்களின் இரண்டு மடங்கு வீதத்தில் விதிக்கப்படும்.<br>விளக்கம்:<br>xxx | **19. அதிகாரமற்ற மின் சாரப் பயன்பாடு – புலனாய்வு மற்றும் அமலாக்கம் பற்றிய வழிவகைகள்**<br>(1) முதல் (5) xxx வரை<br>(6) இந்தப் பிரிவின் கீழான மதிப்பீட்டை, மதிப்பீடு காலத்தின் போது மின்னளவியில் பதிவாகியிருந்த மின்நுகர்வு / மின்தேவைக்கான, நுகர்வோர் ஏற்கனவே செலுத்தியிருந்த கட்டணங்களை கழித்து, துணைப்பிரிவு (5)–இல் குறிப்பிட்டுள்ள காலத்தில் தவறாக பயன்படுத்தப்பட்ட மின்சுமையின் உபயோகத்திற்கு விதிக்கப்படக்கூடிய கட்டண வீதத்தில் இரண்டு மடங்காக விதிக்கப்படும்.<br>விளக்கம்:<br>xxx |
| 28. | **22. மின்வழங்கலை மீட்டுத்தரல் (Restoration)**<br>(1) மின் கட்டணத்தையோ அது போன்ற பிற தொகையையோ உரிமம்தாரருக்கு, துண்டித்து மீள இணைப்பதற்காகும் செலவினங்களையும் சேர்த்துக் கட்டியதும், உரிமம்தாரர் உடனடியாகவும் அப்படி முடியாத நிலையில், நகரப் பகுதியைப் பொறுத்தவரை 12 மணி நேரத்துக்குள்ளும் ஊரகப் பகுதிகளை பொறுத்தவரை 24 மனி நேரத்துக்குள்ளும் மின் வழங்கலை மீளத் தரவேண்டும்.<br>(2) t0 (5) xxx | **22. மின்வழங்கலை மீட்டுத்தரல் (Restoration)**<br>(1) நிர்ணயிக்கப்பட்ட மின் கட்டணம் அல்லது தொடர்புடைய நிலுவைத்தொகை மற்றும் இதர கட்டணங்களை பெறப்பட்டதும் மின்னுரிமதாரர் மின்னிணைப்பிற்கான மின்வழங்கலை உடனடியாக வழங்கவேண்டும்; எந்த சூழ்நிலையிலும் ஆறு பணிக்கால மணி நேரத்திற்கு மிகாமல் வழங்கப்படவேண்டும்.<br>(2) t0 (5) xxx |
| 29. | 22 (6).<br>(i) xxx<br>(ii) உரிமம்தாரரின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், அத்தகைய நுகர்வோர், நிலுவைத் தொகையைத் தவணைகளில் செலுத்தவும் மற்றும் உரிமம்தாரருக்குக் கொடுக்கப்பட வேண்டிய கணக்கினை முடித்த பின்பு, செலுத்தப்பட வேண்டிய மொத்த நிலுவைத் தொகையின் 40 விழுக்காட்டினைப்பெற்ற பின்பு மறு இணைப்பு வசதியைப் பயன்படுத்திக் கொள்ளவும் அனுமதிக்கலாம்.<br>அது பின்வருவனவற்றை உள்ளடக்கும்:–<br>(a) மின் துண்டிப்பு தேதியன்றுவுள்ள நிலுவை.<br>(b) (அறிவுப்புக்கால அளவு உள்ளடங்கலாக) மின் துண்டிப்புத் தேதியிலிருந்து ஆறு மாதக் கால அளவிற்குரிய குறைந்தபட்டச மின் கட்டண வீதம் மற்றும் மின்னளவிக்குரிய வாடகை.<br>(c) செலுத்துகைத் தேதி வரையில் பொருந்தத்தக்க காலந்தாழ்த்தி செலுத்தும் உபரிக்கட்டணம் (BPSC)/ வட்டி.)<br>(d) எஞ்சியுள்ள 60 விழுக்காட்டுத் தொகையானது, பத்து மாதாந்திரத் தவணைகளில் வசூலிக்கப்படுதல் வேண்டும்.<br>(e) மேலேயுள்ளவற்றிற்குக் கூடுதலாக, கணக்கு முடிக்கப்படுகையில், சரிக்கட்டப்பட்ட முழு பிணைய வைப்புத்தொகையானது, புதிய மின்னிணைப்பு கொடுக்கும் முன்பு ஒட்டு மொத்தமாக வசூலிக்கப்படுதல் வேண்டும்.<br>**விளக்கம்:** ஐயங்களை அகற்றும் பொருட்டு, மேற்சொன்ன திருத்தத்திற்கு முன்பு, (6) ஆம் உள்– ஒழுங்கு முறைவிதியின் அடிப்படையில் 2006 ஜூன் 21 ஆம் நாளுக்கு முன்பு அதாவது, ***தமிழ்நாடு அரசிதழில்*** 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் வழங்கல் (திருத்தம்) விதித் தொகுப்பு வெளியிடப்பட்ட தேதிக்கு முன்பு தமிழ்நாடு மின்சார | 22 (6).<br>(i) xxx<br>(ii) உரிமம்தாரரின் அதிகாரம் பெற்ற அலுவலர் நுகர்வோரின் கணக்கை முடித்த பிறகு உள்ள நிலுவை தொகையில் 40 % பெற்றுக்கொண்டு தவணை முறையில் செலுத்த அனுமதிக்கலாம். இதில் கீழ்குறிப்பிடப்பட்டவை அடங்கும்:–<br>(a) கணக்குகள் முடிவடைந்த தேதியில் நிலுவைத் தொகை.<br>(b) செலுத்தும் தேதி வரை பொருந்தக்கூடிய தாமதச்செலுத்த உபரி கட்டண (BPSC) / வட்டி.<br>(c) மீதமுள்ள 60% தொகை பத்து மாத தவணைகளில் வசூலிக்கப்படும். மேற்கூறியவற்றைத் தவிர, கணக்குகள் முடிவடைந்த போது சரிசெய்யப்பட்ட பாதுகாப்பு வைப்புத்தொகை முழுவதையும் ஒரே தொகுப்பாக மேற்கூறிய 40% பகுதியுடன், மின்வழங்களை மீட்டுத்தரலுக்கு முன்னர் வசூலிக்கப்படும்.<br>**விளக்கம்:** சந்தேகங்களை நீக்கும் நோக்கத்திற்காக, தமிழ்நாடு மின்சார வாரியம் தமிழ்நாடு மின்சார வழங்கல் விதித்தொகுப்பு (திருத்தம்), 2006 ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் தேதிக்கு முன் அதாவது 21 ஜூன் 2006 க்கு முன் உள் ஒழுங்குமுறை விதி(6) ன் அடிப்படையில் கூறப்பட்ட திருத்தத்திற்கு முன், தமிழ்நாடு மின்சார வாரியத்தால் வசூலிக்கப்பட்ட குறைந்தபட்ச கட்டணங்கள் திரும்ப அளிக்கப்பட வேண்டியதில்லை. |

| *வ எண்.* | *இருந்துவரும் வகைமுறை* | *திருத்தத்தினை உள்ளடக்கிய வகைமுறை* |
|---|---|---|
| | வாரியத்தினால் வசூலிக்கப்பட்ட குறைந்தபட்ச மின் கட்டண வீதம் எதுவும் தமிழ்நாடு மின்சார வாரியத்தினால் திருப்பிக் கொடுக்கப்பட தேவையில்லை என்று விளம்பப்படுகிறது. | |
| 30. | **23(AA) சட்டத்தின் 135ஆம் பிரிவில் விவரிக்கப்பட்டவாறான மின் திருட்டைப் பொறுத்தவரை, மின்கட்டணங்களை கணக்கிடுவதற்கான, மின் வழங்கலைத் துண்டிப்பதற்கான மற்றும் மின்னளவி, மின்தொடர், மின் தளவாடம் மற்றும் பிற கருவிகளைஅகற்றுவதற்கான நடைமுறை கீழே கொடுக்கப்பட்டுள்ளது: –**<br>(1) முதல் (6) வரை xxx<br>(7) மின் திருட்டு செய்யப்பட்டுள்ளது என்று நிரூபிக்கப்படுகிறவிடத்து அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், இந்த விதித்தொகுப்பிற்குரிய பிற்சேர்க்கையிலுள்ள படிவம் 8 இல் கொடுக்கப்பட்டுள்ள கணக்கீட்டு சூத்திரத்தின்படி கடந்த பன்னிரெண்டு மாதங்களுக்கான மின் நுகர்வின் அளவினைக் கணக்கிடுதல் வேண்டும் மற்றும் அத்தகைய நுகர்விற்காக பொருந்தத்தக்க கட்டண வீதத்தின் (அதாவது திருடப்பட்ட மின்சாரத்தினை பயன்படுத்தும் நோக்கத்திற்காக பொருந்தத்தக்கக் கட்டண வீதம்) இரண்டு மடங்குகள் கட்டணங்களுக்காகத் தற்காலிக கணக்கீட்டு ஆணையைத் தயார் செய்தல் வேண்டும். மற்றும் உரிய ரசீதின்படி குற்றம் சுமத்தப்பட்டவருக்குச் சார்பு செய்தல் வேண்டும். அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், அத்தகைய பட்டியலிடலுக்கான காலஅளவை, அது உண்மைகள் அல்லது குற்றம் சுமத்தப்பட்டவரின் எடுத்துரைப்பில் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் மூலம் கவனிக்கப்பட்ட அத்தகைய பிற சான்று எதன் மூலமாவது நிரூபிக்கப்படுமானால், குறைக்கலாம். மின்னனு அளவிகள் பொருத்தப்பட்டு காலமுறை தோறும் சுமை வளைவுகள் அறியப்படுகிற இடத்தெல்லாம், மின் திருட்டுக் காலஅளவு, அறிவியல்பூர்வமாக நிர்ணயிக்கப்படும் உண்மையான காலஅளவிற்கு வரம்பிடப்படுதல் வேண்டும். அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், பட்டியலிடல் கால அளவிலுள்ள அத்தகைய குறைப்பிற்கான காரணங்களை கணக்கீட்டு ஆணையில் பதிவு செய்தல் வேண்டும். மேற்சொன்ன படிவம் 8இல் குறிப்பிடப்பட்ட சூத்திரத்தின்படி அடையப் பெற்ற மின் நுகர்வு, ஆணையத்தின் மின் கட்டண வீத ஆணையின் மூலம் குறித்துரைக்கப்பட்ட வீதத்தின்படி அளவியினால் பதிவு செய்யப்பட்ட மின் நுகர்வு நீங்கலாக, கட்டணம் வசூலிக்கப்படுதல் வேண்டும்.<br>நுகர்வோர் வீடுகளில் மின்பகிர்மான உரிமம்தாரரால் நிறுவப்பட்ட மின்னளவியில் நுகரப்பட்ட மின்சாரத்தின் அளவு பதிவு செய்யப்படுமானால் ,அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், இந்த விதித் தொகுப்பின் பிற்சேர்க்கையில், படிவம் 8–ஆ– இல் கொடுக்கப்பட்டுள்ள மின்கணக்கீட்டு சுருக்க விதிமுறையின்படி அத்தகைய மின்நுகர்வினை கணக்கிடுதல் வேண்டும்.<br>(8) to (22) xxx | **23(AA) சட்டத்தின் 135ஆம் பிரிவில் விவரிக்கப்பட்டவாறான மின் திருட்டைப் பொறுத்தவரை, மின்கட்டணங்களை கணக்கிடுவதற்கான, மின் வழங்கலைத் துண்டிப்பதற்கான மற்றும் மின்னளவி, மின்தொடர், மின் தளவாடம் மற்றும் பிற கருவிகளைஅகற்றுவதற்கான நடைமுறை கீழே கொடுக்கப்பட்டுள்ளது : –**<br>(1) முதல் (6) வரை xxx<br>(7) மின் திருட்டு செய்யப்பட்டுள்ளது என்று நிரூபிக்கப்படுகிறவிடத்து அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், இந்த விதித்தொகுப்பிற்குரிய பிற்சேர்க்கையிலுள்ள படிவம் 8இல் கொடுக்கப்பட்டுள்ள கணக்கீட்டு சூத்திரத்தின்படி கடந்த பன்னிரெண்டு மாதங்களுக்கான மின் நுகர்வின் அளவினைக் கணக்கிடுதல் வேண்டும் மற்றும் அத்தகைய நுகர்விற்காக பொருந்தத்தக்க கட்டண வீதத்தின் (அதாவது திருடப்பட்ட மின்சாரத்தினை பயன்படுத்தும் நோக்கத்திற்காக பொருந்தத்தக்கக் கட்டண வீதம்) இரண்டு மடங்குகள் கட்டணங்களுக்காகத் தற்காலிக கணக்கீட்டு ஆணையைத் தயார் செய்தல் வேண்டும். மற்றும் உரிய ரசீதின்படி குற்றம் சுமத்தப்பட்டவருக்குச் சார்பு செய்தல் வேண்டும். அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், அத்தகைய பட்டியலிடலுக்கான காலஅளவை, அது உண்மைகள் அல்லது குற்றம் சுமத்தப்பட்டவரின் எடுத்துரைப்பில் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் மூலம் கவனிக்கப்பட்ட அத்தகைய பிற சான்று எதன் மூலமாவது நிரூபிக்கப்படுமானால், குறைக்கலாம். மின்னணு அளவிகள் பொருத்தப்பட்டு காலமுறை தோறும் சுமை வளைவுகள் அறியப்படுகிற இடத்தெல்லாம், மின் திருட்டுக் காலஅளவு, அறிவியல்பூர்வமாக நிர்ணயிக்கப்படும் உண்மையான காலஅளவிற்கு வரம்பிடப்படுதல் வேண்டும். அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், பட்டியலிடல் கால அளவிலுள்ள அத்தகைய குறைப்பிற்கான காரணங்களை கணக்கீட்டு ஆணையில் பதிவு செய்தல் வேண்டும். மேற்சொன்ன படிவம் 8இல் குறிப்பிடப்பட்ட சூத்திரத்தின்படி அடையப் பெற்ற மின் நுகர்வு, ஆணையத்தின் மின் கட்டண வீத ஆணையின் மூலம் குறித்துரைக்கப்பட்ட வீதத்தின்படி அளவியினால் பதிவு செய்யப்பட்ட மின்நுகர்வு நீங்கலாக, கட்டணம் வசூலிக்கப்படுதல் வேண்டும்.<br>எனினும் மின்திருட்டு தொடர்பான குற்றத்திற்கு கீழ்கண்ட காரணங்களுக்காக மட்டுமே பிரிவு 135 பயன்படுத்தப்படும்:<br>(i) மின்னளவியில் மின் ஆற்றல் பதிவு செய்யப்படாத / பகுதியாக பதிவு செய்யப்பட்ட காரணங்களுக்காக<br>(ii) துண்டிக்கப்பட்ட மின்னிணைப்பில் இருந்து சட்டவிரோதமாக மின்வழங்கலை மீட்டுத்தரல் / எந்த வகையிலும் துண்டிக்கப்பட்ட மின்னிணைப்பிற்கு மின்வழங்கலை மீட்டுத்தரல் காரணங்களுக்காக<br>(iii) விவசாயம் மற்றும் குடிசை மின்னிணைப்புகளில் இருந்து அனுமதிக்கப்படாத மின்சாரத்தை பயன்படுத்துதல் காரணங்களுக்காக.<br>(8) to (22) xxx |

| வ எண். | இருந்துவரும் வகைமுறை | திருத்தத்தினை உள்ளடக்கிய வகைமுறை |
|---|---|---|
| 31.<br><br><br><br><br><br><br>32. | படிவம் – 8<br>**(23 ஆம் ஒழுங்குமுறைவிதியின் (AA) ஆம் உள் ஒழுங்குமுறைவிதியின் ( 7ஆம் கூறினைப் பார்க்கவும்) மின்திருட்டு இனங்களில் மின் அளவினை மதிப்பிடுவதற்கான சூத்திரம்**<br>I. A முதல் D வரை xxx<br>E (i) xxx<br>ii. (a) உயர் மின் அழுத்த மின்னிணைப்புகளுக்கு பெரும் மின் தேவை இணைக்கப்பட்ட சுமையில் குறைந்தபட்சத்திற்குட்பட்டு ஆய்வின்போது இணைக்கப்பட்ட மொத்த சுமையில் 75 விழுக்காடு என மதிப்பிடப்படுதல் வேண்டும். 0,90 lag என்கிய மின் காரணி கிலோவோல்ட் ஆம்பியரிலிருந்து அல்லது கிலோவாட்டிலிருந்து மாற்றம் செய்ய பயன்படுத்தப்படலாம்.<br>(b) மின் தேவை கட்டணங்கள் மதிப்பீடு செய்தல்<br>பெரும் மின்தேவையில் உரிய உயர் அழுத்த மின்கட்டணவீதத்தில் இரண்டு மடங்கு<br>(II). மின் துண்டிப்பு செய்யப்பட்டுள்ள மின் இணைப்பில் சட்டப்புறம்பாக மின் வழங்கலை மீள் நிலப்படுத்தல் நேர்வில் மின் நுகர்வு அளவினை மதிப்பீடு செய்தல் பின்வருமாறு இருத்தல் வேண்டும்:–<br>(A) மதிப்பீட்டு கால அளவு மீறல் கண்டுபிடிக்கப்பட்ட நாளுக்கு உடனடியாக முந்திய பன்னிரண்டு மாதங்கள் அல்லது மின் இணைப்பு துண்டிக்கப்பட்ட நாளிலிருந்து சட்டப்புறம்பான மின் வழங்கலை திருப்பிக்கொடுத்த நாள் வரை இதில் எந்த கால அளவு குறைவானதோ அதுவாக இருக்கவேண்டும்.<br>(B ) 23 AA ஒழுங்குமுறைவிதியின், 7 ஆம் உள் ஒழுங்குமுறைவிதிக்கிணங்க மின்திருட்டுக்கான கட்டணங்களை மதிப்பிடுவதற்கான நுகர்வு செய்யப்பட்ட மின்னளவானது பின்வருமாறு இருத்தல் வேண்டும்<br>(I) மின்னளவு சரியாக இயங்கும்போது :– மின்னிணைப்பின் மின்துண்டிப்பு செய்யப்பட்ட நாளிலிருந்து மின்திருட்டு கண்டுபிடிக்கப்பட்ட நாள் வரை பதிவான யூனிட்டுகள்.<br>(II) மின்னளவி குறைபாடுடையதாக கண்டறியப்படும் போது :–மேற்குறிப்பிட்ட சூத்திரத்தை பயன்படுத்தி கணக்கிடப்பட்ட மின்னாற்றல் அளவு (U )<br>(C) மதிப்பீடானது பொருந்தக்கூடிய மின்னாற்றல் கட்டணங்களில் இரண்டு மடங்காகவும் மற்றும் பொருந்துமானால் பொருந்தக்கூடிய மின்தேவைக் கட்டணங்களில் இரண்டு மடங்காகவும் இருத்தல் வேண்டும் | படிவம் – 8<br>**(23 ஆம் ஒழுங்குமுறைவிதியின் (AA) ஆம் உள் ஒழுங்குமுறைவிதியின் ( 7ஆம் கூறினைப் பார்க்கவும்) மின்திருட்டு இனங்களில் மின் அளவினை மதிப்பிடுவதற்கான சூத்திரம்**<br>I. A முதல் D வரை xxx<br>E (i) xxx<br>ii) உ.அ. மின்னிணைப்புகளில் மின்தேவை அளவு கட்டணங்கள் மற்றும் தா.அ. மின்னிணைப்புகளில் நிலையான கட்டணங்களை மதிப்பிடுதல்:–<br>(a) அனைத்து மின்னிணைப்புகளிலும் உச்ச மின்தேவை, ஒப்பளித்த மின்தேவை / ஒப்பந்தம் பெற்ற மின்தேவை என்ற குறைந்தபட்சத்திற்குட்பட்டு ஆய்வின் போது இணைக்கப்பட்டிருந்த மொத்த சுமையில் 75 விழுக்காடு என மதிப்பிடப்படும். உயர் அழுத்தத்திற்கு 0.90 lag என்கிற காரணி மற்றும் தாழ்வழுத்தத்திற்கு 0.85 lag என்கிற காரணி கிலோவோல்ட் ஆம்பியர் மற்றும் கிலோவாட்டிர்க்கு இடையே மாற்றம் செய்ய பயன்படுத்தப்படும்.<br>(b) உ.அ. மின்னிணைப்புகளில் மின் தேவை கட்டணங்களை மதிப்பீடு செய்தல்:<br>உச்ச மின்தேவையில் உரிய உயர் அழுத்த மின்கட்டணவீதத்தில் இரண்டு மடங்கு<br>(c) தா.அ. மின்னிணைப்புகளில் நிலையான கட்டணங்களை மதிப்பீடு செய்தல்:<br>நிலையான கட்டங்களுக்கு உரிய தாழ்வு அழுத்த மின்கட்டணவீதத்தில் இரண்டு மடங்கு<br>II .மின் துண்டிப்பு செய்யப்பட்டுள்ள மின் இணைப்பில் சட்டப்புறம்பாக மின் வழங்கலை மீட்டுத்தரல் நேர்வில் மின் நுகர்வு அளவினை மதிப்பீடு செய்தல் பின்வருமாறு:–<br>(A) சட்டப்புறம்பான மின் வழங்கலை மீட்டுத்தரல் நாளுக்கு உடனடியாக முந்திய பன்னிரண்டு மாதங்கள் அல்லது மின் இணைப்பு துண்டிக்கப்பட்ட நாளிலிருந்து சட்டப்புறம்பான மின்வழங்கலை மீட்டுத்தரல் நாள் வரை, இதில் எந்த கால அளவு குறைவானதோ அந்தக்காலம்.<br>(B) சட்டப்புறம்பான மின்வழங்கலை மீட்டுத்தரலுக்கான மதிப்பீட்டு கட்டணங்களை மதிப்பிடுவதற்கு மற்றும் கணக்கிடுவதற்கு செய்யப்பட்ட மின்னளவானது பின்வருமாறு:<br>(i) மின்னளவு சரியாக இயங்கும் நிகழ்வில்:– மின்னிணைப்பின் மின்துண்டிப்பு செய்யப்பட்ட நாளிலிருந்து மின்திருட்டு கண்டுபிடிக்கப்பட்ட நாள் வரை பதிவான யூனிட்டுகள்.<br>மதிப்பீடானது, மின்னாற்றல் மற்றும் மின்தேவை / நிலையான கட்டணங்கள் இரண்டையும் உள்ளடக்கிய நிர்ணயிக்கப்பட்ட மின் கட்டண வீதத்தின் இரு மடங்கு இருத்தல் வேண்டும். மதிப்பீடு செய்யப்பட்ட காலத்தில் மின்னளவியில் பதிவான யூனிட்டுகள் / மின்தேவைக்கான மின் கட்டணங்கள் வசூலிக்கப்படாது. அவ்வாறு வசூலிக்க பட்டிருந்தால், அவை மின்நுகர்வோரின் கணக்கில் வரவு வைக்கப்படும்.<br>(ii) மின்னளவி குறைபாடுடையதாக கண்டறியப்படும் நிகழ்வில்:– சட்டப்புறம்பான மின்வழங்கலின்போது நுகர்வு செய்யப்பட்ட மின்னளவினை மேற்குறிப்பிடப்பட்ட பகுதி I ன் சூத்திரத்தின்படி கணக்கீடு செய்யப்படும்.<br>(C) மதிப்பீடானது மின்னாற்றல் மற்றும் மின்தேவை / நிலையான கட்டணங்கள் இரண்டையும் உள்ளடக்கிய நிர்ணயிக்கப்பட்ட மின் கட்டண வீதத்தின் இரு மடங்கு இருத்தல் வேண்டும்.<br>(D) மேற்கூறப்பட்ட மதிப்பீட்டுக் கட்டணங்கள் தவிர, குற்ற நிறுத்திசைவு (compounding of offence) தொடர்பான நிபந்தனைகள் உட்பட மின்வழங்கல் விதித்தொகுப்பின் உள் |

| வ எண். | இருந்துவரும் வகைமுறை | திருத்தத்தினை உள்ளடக்கிய வகைமுறை |
|---|---|---|
| | | ஒழுங்குமுறை விதி 23 (AA) கீழ் வகுக்கப்பட்ட நடைமுறைகள் பின்பற்றப்படவேண்டும்.<br>குறிப்பு:<br>மதிப்பீட்டிற்குக் குறிப்பிடப்பட்டுள்ள பொருந்தக்கூடிய மின் கட்டணமானது, அத்தகைய மதிப்பீட்டு காலத்தில் படிவம் 8–ல் கையாளப்பட்ட அனைத்து வகைகளுக்குமான மின்கட்டணமாகும். |
| 33. | படிவம் 8 – அ<br>(23(அஅ) (7) கூறின் வரம்புரையைக் காண்க)<br>2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் 135(1) (e) பிரிவில் குறிப்பிடப்பட்டவாறு, எந்த நோக்கத்திற்காக மின் பயன்பாடு அதிகாரமளிக்கப்பட்டுள்ளதோ அந்த நோக்கம் அல்லாத பிற நோக்கத்திற்கான மின்பயன்பாட்டினைப் பொறுத்தவரை, தவறாகப் பயன்படுத்தப்பட்ட மின்சாரத்தின் அளவினை கணக்கிடுவதற்கான சுருக்க விதிமுறை.<br>(i) தவறாகப் பயன்படுத்தப்பட்ட மின்சாரத்தின் அளவு:<br>(a) குறித்துரைக்கப்பட்ட கால அளவிற்கு வரம்பிடப்பட்ட அத்தகைய மீறுகைகள் இருந்தும் வரும் முந்தியக் கால அளவின்போது பதிவு செய்யப்பட்ட மொத்த மின்நுகர்வு,<br>(b) ஆய்வு செய்யும் போது காணப்பட்ட தவறாகப் பயன்படுத்தப்பட்ட மின் சுமை<br>(c) ஆய்வு செய்யும் போது காணப்பட்ட மொத்த மின் சுமை<br>இவ்வாறு இருக்கிறவிடத்து<br>U = a x ( b / c) கிலோ வாட் மணி<br>(ii) அனுமதியளிக்கப்படாத மின்சாரப் பயன்பாட்டிற்கான தண்டக் கட்டணங்கள்<br>u – தவறாகப் பயன்படுத்தப்பட்ட மின்சாரத்தின் அளவு, கிலோ வாட் மணி,<br>d – அனுமதியில்லாமல் பயன்படுத்தப்பட்ட மின்சாரத்திற்கான மின்கட்டணம்,<br>e– அனுமதியுடன் பயன்படுத்தப்பட்ட மின்சாரத்திற்கான மின்கட்டணம்,<br>இவ்வாறு இருக்கிறவிடத்து<br>= (2 x U x d) – (U x e)]<br>(iii) அனுமதியளிக்கப்படாத மின்சாரத்தைப் பயன்படுத்தும் கால அளவு<br>அ. பன்னிரெண்டு மாதக் கால அளவிற்காக,<br>ஆ. அனுமதியளிக்கப்படாத மின்சார பயன்பாட்டைக் கண்டுபிடிக்கும் நாளன்று உரிமம்தாரரின் அலுவலரால் செய்யப்படும், முந்திய ஆய்வு, ஏதேனுமிருப்பின், அந்த நாளிலிருந்தான கால அளவிற்காக,<br>(இ) மின்னிணைப்பு நாளிலிருந்து அனுமதியளிக்கப்படாத மின்சார பயன்பாட்க் கண்டுபிடிக்கம் நாள் வரை,<br>(ஈ) கால முறையில், மின்னணுவியல் மின்னளவிகள் நிறுவப்படும் மற்றும் மின்சுமை வளைவுகள் ஆய்வு செய்யப்படும் போதெல்லாம் அறிவியல் பூர்வமாக தீர்மானிக்கப்படக்கூடிய துல்லியமான கால அளவிற்கு அனுமதியக்கப்படாத மின்சார பயன்பாட்டுக்கால அளவு வரம்பிடப்படும்.<br>(உ) குற்றம் சுமத்தப்பட்டவரால் முன்னிலைப்படுத்தப்படும் செல்லத்தக்க ஆவணங்கள் அடிப்படையில், | ‘‘படிவம் 8–A<br>[ஒழுங்குமுறை 19 (6) ஐப் பார்க்கவும்]<br>மின்சார சட்டம், 2003 , 126–ஆம் பிரிவின்படி அனுமதியளிக்கப்படாத மின் பயன்பாட்டின் கணக்கிடுவதற்கான சூத்திரம்<br>(i) தவறாகப் பயன்படுத்தப்பட்ட மின்சாரத்தின் அளவு:<br>U = a x ( b / c) கிலோ வாட் மணி (kWh)<br>இதில்<br>a — விதிமீறல் கண்டறியப்பட்ட முந்தைய காலத்தில் வரையறுக்கப்பட்ட காலவரம்பிற்கான மொத்த மின் நுகர்வு<br>b – ஆய்வின் போது கண்டறியப்பட்ட தவறாகப் பயன்படுத்தப்பட்ட மின் சுமை<br>c – ஆய்வின் போது கண்டறியப்பட்ட மொத்த இணைக்கப்பட்ட மின் சுமை<br>(ii) அனுமதியளிக்கப்படாத மின் பயன்பாட்டின் மதிப்பீடு அளவு<br>= [(2 x U x d) – (U x e)] + [(2 x b x F1 ) – (b x F2 )]<br>இதில்<br>U – தவறாகப் பயன்படுத்தப்பட்ட மின் அளவு, கிலோ வாட் மணி (kWh)<br>d – அனுமதியளிக்கப்படாத பயன்பாட்டின் மின் கட்டணம்<br>e – அனுமதியளிக்கப்பட்ட பயன்பாட்டின் மின் கட்டணம்<br>F1– அனுமதியளிக்கப்படாத பயன்பாட்டின் மின் தேவை / நிலையான கட்டணங்கள்<br>F2– அனுமதியளிக்கப்பட்ட பயன்பாட்டின் மின் தேவை / நிலையான கட்டணங்கள்<br>b – கிவா / கிவோஆ –இல் அனுமதியளிக்கப்படாத மின் தேவை அளவு<br>(iii) அனுமதியளிக்கப்படாத மின் பயன்பாட்டின் கால அளவு<br>அதிகாரம் அளிக்கப்பட்ட அதிகாரி கீழ்கண்டவற்றின் அடிப்படையில் குறைந்தபட்ச காலத்திற்கான அனுமதியளிக்கப்படாத மின்சார பயன்பாட்டை கணக்கிடலாம்:<br>(a) பன்னிரண்டு மாத கால அளவிற்கு<br>(b) உரிமம்தாரரின் அதிகாரியின் முந்தைய ஆய்வு தேதி ஏதேனும் இருப்பின் அந்த தேதியில் இருந்து அனுமதியளிக்கப்படாத மின் உபயோகம் கண்டறியப்பட்ட தேதி வரையிலான காலத்திற்கு<br>(c) மின் இணைப்பு வழங்கப்பட்ட தேதியிலிருந்து அனுமதியளிக்கப்படாத மின் உபயோகம் கண்டறியப்பட்ட தேதி வரையிலான காலத்திற்கு<br>(d) எங்கெல்லாம் மின்னணு மின்னளவிகள் பொருத்தப்பட்டு மற்றும் மின்சுமை சுழற்சிகள் அவ்வப்போது ஆய்வு செய்யப்படுகின்றதோ அவ்விடத்தில் அனுமதியளிக்கப்படாத பயன்பாடு அறிவியல் ரீதியாக துல்லியமாக கண்டறியப்பட்ட காலஅளவு<br>(e) குற்றம் சாட்டப்பட்டவரால் வழங்கப்பட்ட செல்லத்தக்க ஆவணத்தின் அடிப்படையில்<br>(f) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் நியாயமான தீர்ப்பின் அடிப்படையில் மதிப்பிடப்பட்ட கால அளவு |

| வ எண். | இருந்துவரும் வகைமுறை | திருத்தத்தினை உள்ளடக்கிய வகைமுறை |
|---|---|---|
| | (ஊ) அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால், தம்முடைய நிதானிப்புடன் கணக்கிடப்படும் பிற நியாயமான கால அளவிற்கு,<br>அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் மேற்கண்டவற்றைக் கணக்கில் எடுத்துக் கொண்டு அனுமதியளிக்கப்படாத மின்சார பயன்பாட்டின் குறைந்தபட்ச கால அளவினைக் கணக்கிடலாம். | குறிப்பு: கட்டணத்தை மதிப்பிடுவதற்காக மேற்கூறப்பட்ட சூத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அங்கீகரிக்கப்படாத மின்பயன்பாட்டிற்கான மின்கட்டணமானது (d) மதிப்பீடு காலத்தில் நடைமுறையில் உள்ள மின்கட்டணத்தை குறிக்கும். |
| 34. | படிவம் 9<br>(ஒழுங்குமுறைவிதி 23 (AA) (8) ஐப் பார்க்கவும்)<br>2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் பிரிவு 135 /138இன் படி மின் திருட்டிற்கான தற்காலிக கணக்கீட்டு ஆணை<br>அனுப்புநர் (அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்)<br>பெறுநர் (எவருடைய பெயரில் மின்னிணைப்பு உள்ளதோ அந்த நபரின் அல்லது குடியிருப்பவரின் அல்லது அனுபோகதாரர், முதலியோரின் முழு முகவரி)<br>கடித எண் _______________ நாளிட்டது<br>ஐயா,<br>பொருள் – மின் திருட்டு எஸ்.சி.எண். .......... தற்காலிக கணக்கீட்டு ஆணை – குறித்து.<br>பொருள் – நாளிட்ட ஆய்வு அறிக்கை<br>xxxx<br>1.0. (ஆய்வுசெய்யப்பட்ட நாள், மாதம், ஆண்டு) ......................... அன்று (நேரம்) ) ......................... மணிகளில் எஸ்.சி.எண்ணிலுள்ள மின்னிணைப்பு...................இருப்பிடத்திலுள்ள கதவு எண்...........இல், எஸ், எப், எண் ........... இல், (மின்னிணைப்பின் முழு முகவரி) அது திரு/ திருமதி.............................. பெயரில் இருக்கிறது / இருந்தது அது என்னால், உனது / உங்கள் சார்பாளர் திரு/திருமதி........... முன்னிலையில் ஆய்வு செய்யப்பட்டது.<br>2.0. * ஆய்வின் போது மின் திருட்டு செய்யப்பட்டுள்ளது என்பது கண்டுபிடிக்கப்பட்ட து.....................(மின்னிணைப்பு துண்டிக்கப்பட்டதின் இணைப்பு / அனுமதி பெறாமல் மறு இணைப்பு செயற்கை வழியில் பெறப்பட்டுள்ளது என்று கண்டுபிடிக்கப்பட்டு அதன் விவரங்களுடன் திருட்டின் உள்ளபடியான முறையினை விவரிக்கவும்.)<br>மேற்சொன்ன குற்றத்தைச் செய்வதன் மூலம், நீர் உரிமம்தாரரை மோசடி செய்யும் உட்கருத்துடன் நேர்மையின்றி மின்சாரத்தைத் திருடியுள்ளீர், நுகர்ந்துள்ளீர் மற்றும் பயன்படுத்தியுள்ளீர்கள்.<br>மேலே சொன்ன சட்டமுரணான மின் திருட்டு, நுகர்வு மற்றும் பயன்பாடு, 2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் 135 ஆம் பிரிவின்படி தண்டனைக்குரியதாகும். | படிவம் 9<br>(ஒழுங்குமுறைவிதி 23 (AA) (8) ஐப் பார்க்கவும்)<br>மின்சாரச் சட்டம், 2003, பிரிவு *135 /138 இன் படி மின் திருட்டிற்கான / சட்டவிரோதமாக மின் வழங்கலை மீட்டுத்தரலுக்கான, தற்காலிக கணக்கீட்டு ஆணை<br>அனுப்புநர் (அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்)<br>பெறுநர் (எவருடைய பெயரில் மின்னிணைப்பு உள்ளதோ அந்த நபரின் அல்லது குடியிருப்பவரின் அல்லது அனுபோகதாரர், முதலியோரின் முழு முகவரி)<br>கடிதஎண் _________________ நாளிட்டது<br>ஐயா,<br>பொருள் – *மின் திருட்டு / சட்டவிரோதமாக மின் வழங்கலை மீட்டுத்தரல் – கண்டுபிடிக்கப்பட்டது உயர்வழுத்த/ தாழ்வழுத்த மின் இணைப்பு எண் ................மின்கட்டண வீதம் ........... தற்காலிக கணக்கீட்டு ஆணை – குறித்து.<br>குறிப்புரை – நாளிட்ட ஆய்வு அறிக்கை<br>xxxx<br>1.0. *................ அன்று (ஆய்வு செய்யப்பட்ட நாள், மாதம், ஆண்டு) ............ (நேரம்) மணியளவில், கதவு எண், எஸ். எப். எண்............ (மின்னிணைப்பின் முழு முகவரி)இல் உள்ள, திரு/திருமதி.................................. பெயரில் இருக்கின்ற/ *இருந்த, .........அவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கின்ற/ உபயோகப்படுத்தப்படுகின்ற மின் இணைப்பு எண்............ என்னால், தங்கள் / தங்களுடைய சார்பாளர் திரு/திருமதி............ முன்னிலையில் ஆய்வு செய்யப்பட்டது.<br>2.0. *ஆய்வின் போது மின் திருட்டு / சட்டமுரணாக மின் வழங்கலை மீட்டுத்தரல் செய்யப்பட்டுள்ள குற்றம் கண்டுபிடிக்கப்பட்டது. .......... (மின் திருட்டில் / துண்டிக்கப்பட்ட மின் இணைப்பிலிருந்து சட்ட விரோதமாக மின் வழங்கலை மீட்டுத்தரலில், பயன்படுத்தப்பட்ட செயற்கை வழியின் விவரங்களுடன் மின் திருட்டு முறையினை விவரிக்கவும்).<br>மேற்சொன்ன குற்றத்தைச் செய்ததன் மூலம், நீங்கள் உரிமம்தாரரை மோசடி செய்யும் உட்கருத்துடன் நேர்மையின்றி மின்சாரத்தைத் திருடியுள்ளீர்கள், நுகர்ந்துள்ளீர்கள் மற்றும் பயன்படுத்தியுள்ளீர்கள்.<br>மேலே சொன்ன சட்டவிரோத மின் திருட்டு, நுகர்வு மற்றும் பயன்பாடு, மின்சாரச் சட்டம், 2003, *135/138 ஆம் பிரிவின்படி தண்டனைக்குரியதாகும்.<br>மேற்கண்ட குற்றம் கண்டறியப்பட்ட தேதியில் மின்னிணைப்பு துண்டிக்கப்பட்டது. |

| வ எண். | இருந்துவரும் வகைமுறை | திருத்தத்தினை உள்ளடக்கிய வகைமுறை |
|---|---|---|
| | 3.0 தமிழ்நாடு மின்சார வழங்கல் விதித்தொகுப்பின் ஒழுங்குமுறை விதிகளுக்கிணங்க, நேர்மையின்றி மின்சாரம் திருடப்பட்டுள்ளது / சட்ட முரணாக மின்வழங்கலை மீட்டுத்தரல் செய்வதன் பொருட்டு உம்மால் ஏற்பட்ட தோராய இழப்பு ரூ.................(—————————————— ரூபாய்) மற்றும் இதனுடன் கணக்குப் பணித்தாள் இணைக்கப்பட்டுள்ளது.<br>4.0 மேலே சுட்டப்பட்டவாறான கணக்கீட்டுத் தொகை இந்த ஆணை பெறப்பட்ட தேதியிலிருந்து 7 நாட்களுக்குள் செலுத்தப்படுதல் வேண்டும்.<br>5.0 தற்காலிகக் கணக்கீட்டிற்கு எதிராக, மறுப்புரைகள், எவையேனுபிருப்பின், அவற்றைத்தாக்கல் செய்ய விரும்புவீர்களானால் தாங்கள் தங்களுடைய விளக்கத்தினை இந்த ஆணையைப் பெற்றத் தேதியிலிருந்து ஏழு நாட்களுக்குள் போதுமான நிருபணத்துடன் கீழே கையொப்பமிட்டவருக்கு முகவரியிட்டு அனுப்பலாம். கீழே கையொப்பமிட்டவரின் முன்பு விசாரணைக்காக தொடர்புடைய ஆவணங்களுடன் தாங்கள் நேரடியாகவோ அல்லது அதிகாரமளிக்கப்பட்ட சார்பாளர் மூலமாகவோ ஆஜராவதற்குத் தேர்ந்தெடுக்கவும் செய்யலாம்.<br>6.0. தாங்கள் உடனடியாக, இந்த ஆணையை பெற்றதற்கான ஒப்புகை அளிக்குமாறு கோரப்படுகிறீர்கள்.<br><br>தங்கள் உண்மையுள்ள,<br>(அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்)<br>இணைப்பு :<br>1. அறிக்கை<br>2. பதிவுச் செய்யப்பட்ட விவர அறிக்கை (ஏதேனுமிருப்பின் ) அதன்<br>3. மஹசர் – ஆகியவற்றின் நகல்கள்.<br>நகல் அனுப்பப்படுநர்...........................<br>நகல் பெறுநர்..........................<br>இந்த ஆணை குற்றம் சுமத்தப்பட்டவருக்கு நாளிட்ட ஒப்புகையுடன் சார்பு செய்யப்படுவதற்கு ஏற்பாடு செய்யுமாறும் மற்றும் இந்த அலுவலகத்திற்கு ஒப்புகையை அனுப்புமாறும் அவர் அறிவுறுத்தப்படுகிறார்<br>*எது பொருந்தத்தகாததோ அதனை அடித்து விடவும். | 3.0 சட்டவிரோதமாக, மின்சாரம் திருடப்பட்டுள்ளது / சட்டவிரோதமாக மின் வழங்கலை மீட்டுத்தரல் செய்ததன் பொருட்டு தங்களால் ஏற்பட்ட தோராய இழப்பு தமிழ்நாடு மின்சார வழங்கல் விதித் தொகுப்பின் ஒழுங்குமுறை விதிகளின் படி ரூ......... (........................ ரூபாய்) ஆகும். இதனுடன் கணக்கீடு விவரம் இணைக்கப்பட்டுள்ளது.<br>4.0 மேலே சுட்டப்பட்டவாறான கணக்கீட்டுத் தொகை இந்த ஆணை பெறப்பட்ட தேதியிலிருந்து 7 நாட்களுக்குள் செலுத்தப்படுதல் வேண்டும்.<br>5.0 தாங்கள், தற்காலிகக் கணக்கீட்டிற்கு எதிராக, மறுப்புரைகள், எவையேனுபிருப்பின், அவற்றைத்தாக்கல் செய்ய விரும்புவீரானால் , இந்த ஆணையைப் பெற்றத் தேதியிலிருந்து ஏழு நாட்களுக்குள் போதுமான நிருபணத்துடன் கீழே கையொப்பமிட்டவரின் முகவரிக்குத் தங்களுடைய விளக்கத்தினை தாங்கள் அனுப்பலாம். தாங்கள், கீழே கையொப்பமிட்டவரின் முன்பு விசாரணைக்காக தொடர்புடைய ஆவணங்களுடன் நேரடியாகவோ அல்லது அதிகாரமளிக்கப்பட்ட சார்பாளர் மூலமாகவோ ஆஜராவதற்குத் இந்த உத்தரவு கிடைக்கப்பெற்ற நாளிலிருந்து 10 நாட்களுக்குள் தேர்ந்தெடுக்கவும் செய்யலாம்.<br>6.0. தாங்கள் உடனடியாக, இந்த ஆணையை பெற்றதற்கான ஒப்புகை அளிக்குமாறு கோரப்படுகிறீர்கள்.<br><br>தங்கள் உண்மையுள்ள,<br>(அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்)<br>இணைப்பு :<br>1. ஆய்வு அறிக்கை<br>2. பதிவுச் செய்யப்பட்ட விவரஅறிக்கை (ஏதாவது இருப்பின்)<br>3. மகஜர்<br>4. படிவம் 8–இன் படி கணக்கீட்டு விவரம்.<br>நகல் அனுப்பப்படுநர்..........................<br>நகல் பெறுநர்..........................<br>இந்த ஆணை குற்றம் சுமத்தப்பட்டவருக்கு நாளிட்ட ஒப்புகையுடன் சார்பு செய்யப்படுவதற்கு ஏற்பாடு செய்யுமாறும் மற்றும் இந்த அலுவலகத்திற்கு ஒப்புகையை அனுப்புமாறும் அவர் அறிவுறுத்தப்படுகிறார்.<br>*எது பொருந்தத்தகாததோ அதனை அடித்து விடவும். (மின்திருட்டு குற்றம் என்றால், பிரிவு 135 பொருந்தும், பிரிவு 138ஐ அடித்துவிடவும். சட்டவிரோத மின் வழங்கலை மீட்டுத்தரல் என்றால், பிரிவு 135 மற்றும் 138 ஆகிய இரண்டும் பொருந்தும்.) |
| 35. | படிவம் 10<br>(ஒழுங்குமுறைவிதி 23 (AA) (15) ஐப் பார்க்கவும்)<br>2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் பிரிவு 135 ஆம் பிரிவின்படி மின் திருட்டிற்கான இறுதிக் கணக்கீட்டு ஆணை<br>அனுப்புநர்<br>(அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்)<br>பெறுநர்<br>(எவருடைய பெயரில் மின்னிணைப்பு உள்ளதோ அந்த நபரின் அல்லது குடியிருப்பவரின் அல்லது அனுபோகதாரர், முதலியோரின் முழு முகவரி) | படிவம் 10<br>(ஒழுங்குமுறைவிதி 23 (AA) (15) ஐப் பார்க்கவும்)<br>மின்சாரச் சட்டம், 2003, பிரிவு *135 /138–இன் படி மின் திருட்டிற்கான / சட்டவிரோதமாக மின் வழங்கலை மீட்டுத்தரலுக்கான இறுதி கணக்கீட்டு ஆணை<br>அனுப்புநர்<br>(அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்)<br>பெறுநர்<br>(எவருடைய பெயரில் மின்னிணைப்பு உள்ளதோ அந்த நபரின் அல்லது குடியிருப்பவரின் அல்லது அனுபோகதாரர் முதலியோரின் முழு முகவரி) |

| வ எண். | இருந்துவரும் வகைமுறை | திருத்தத்தினை உள்ளடக்கிய வகைமுறை |
|---|---|---|
| | கடித எண் ________________________________<br>நாளிட்டது<br>ஐயா,<br>பொருள் – மின் திருட்டு –கண்டுபிடிக்கப்பட்டது எஸ்.சி.எண். ............. தற்காலிக கணக்கீட்டு ஆணை – குறித்து.<br>பொருள் – 1. தற்காலிக கணக்கீட்டு ஆணை. ........<br>2. தங்களின் பதிலுரை....................<br>1.0. (ஆய்வுசெய்யப்பட்ட நாள், மாதம், ஆண்டு) ......................... அன்று (நேரம்) ) ......................... மணிகளில் எஸ்.சி.எண்ணிலுள்ள மின்னிணைப்பு...................இருப்பிடத்திலுள்ள கதவு எண்...........இல், எஸ், எப், எண் ........... இல், (மின்னிணைப்பின் முழு முகவரி) அது திரு/ திருமதி.......................... பெயரில் இருக்கிறது / இருந்தது அது என்னால், உனது / உங்கள் சார்பாளர் திரு/திருமதி........... முன்னிலையில் ஆய்வு செய்யப்பட்டது.<br>2.0. * ஆய்வின் போது மின் திருட்டு செய்யப்பட்டுள்ளது என்பது கண்டுபிடிக்கப்பட்டது.....................(மின்னிணைப்பு துண்டிக்கப்பட்டதின் இணைப்பு / அனுமதி பெறாமல் மறு இணைப்பு செயற்கை வழியில் பெறப்பட்டுள்ளது என்று கண்டுபிடிக்கப்பட்டு அதன் விவரங்களுடன் திருட்டின் உள்ளபடியான முறையினை விவரிக்கவும்.) மேற்சொன்ன குற்றத்தைச் செய்வதன் மூலம், நீர் உரிமம்தாரரை மோசடி செய்யும் உட்கருத்துடன் நேர்மையின்றி மின்சாரத்தைத் திருடியுள்ளீர், நுகர்ந்துள்ளீர் மற்றும் பயன்படுத்தியுள்ளீர்கள்.<br>மேலே சொன்ன சட்டமுரணான மின் திருட்டு, நுகர்வு மற்றும் பயன்பாடு, 2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் 135 ஆம் பிரிவின்படி தண்டனைக்குரியதாகும்.<br>3.0 பார்வையில் சுட்டப்பட்டுள்ள தற்காலிகக் கணக்கீட்டு ஆணை தங்களுக்க வழங்கப்பட்டது மற்றும் தமிழ்நாடு மின்வழங்கல்ல விதித்தொகுப்பின் ஒழுங்குமுறை விதிகளுக்கிணங்க, தங்களுடைய மறுப்புரைகளைத் தாக்கல் செய்வதற்கும் மற்றும் விசாரணையில் ஆஜராவதற்கும் தாங்கள் அனுமதிக்கப்படுவீர்கள்.<br>4.0 விவரமான ஆய்வின் பேரிலும், தங்களுடைய கடிதத்தில் / நேர்முக விசாரணையின் போது தங்களால் முனையப்பட்ட விளக்கம், அளிக்கப்பட்ட பொருண்மைகள் மற்றும் பதிவுருக்களைப் பரிசீலித்தன் பேரிலும் கீழே விவரிக்கப்பட்டவாறு மின் திருட்டு தங்களால் செய்யப்பட்டுள்ளது என்பது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.<br>(அறிவிக்கப்பட்ட விளக்கம் மற்றும் முடிவுகளின்படியான மின் திருட்டை பரிசீலனைக்கு எடுத்துக்கொண்ட சம்பந்தப்பட்ட அலுவலரால் பிறப்பிக்கப்பட்ட நியாயமான / விவரமான ஆணை, திருட்டு உள்ளது தொடர்பாக மேற்சொன்ன மின் திருட்டு பொறுத்து நுகர்வோரின் ஈடுபாடு அல்லது பங்கு தொடர்பாக உரிமம்தாரரின் கோரிக்கைக்கு ஆதரவான பொருட்கள் தொடர்பாக செய்யப்பட வேண்டிய சுட்டுகை) | கடிதஎண் ________________ நாளிட்டது<br>ஐயா,<br>பொருள் – *மின் திருட்டு / சட்டவிரோதமாக மின் வழுங்கலை மீட்டுத்தரல் – கண்டுபிடிக்கப்பட்டது உயர்வழுத்த/ தாழ்வழுத்த மின் இணைப்பு எண்....... மின்கட்டணவீதம் .......... இறுதிக் கணக்கீட்டு ஆணை – குறித்து.<br>குறிப்புரை – 1. பொருள் – 1. தற்காலிக கணக்கீட்டு ஆணை.............<br>2. தங்கள் பதிலுரை.....................<br>XXXX<br>1.0. *................ அன்று (ஆய்வு செய்யப்பட்ட நாள், மாதம், ஆண்டு) ............. (நேரம்) மணியளவில், கதவு எண், எஸ். எப். எண்............. (மின்னிணைப்பின் முழு முகவரி)இல் உள்ள, திரு/ திருமதி.................................. பெயரில் இருக்கின்ற/*இருந்த, .............அவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கின்ற/ உபயோகப்படுத்தப்படுகின்ற மின் இணைப்பு எண்.............. என்னால், தங்கள் / தங்களுடைய சார்பாளர் திரு/திருமதி........... முன்னிலையில் ஆய்வு செய்யப்பட்டது.<br>2.0. *ஆய்வின் போது மின் திருட்டு / சட்டமுரணாக மின் வழுங்கலை மீட்டுத்தரல் செய்யப்பட்டுள்ள குற்றம் கண்டுபிடிக்கப்பட்டது. ........................................................................................... (மின் திருட்டில் / துண்டிக்கப்பட்ட மின் இணைப்பிலிருந்து சட்ட விரோதமாக மின் வழுங்கலை மீட்டுத்தரலில், பயன்படுத்தப்பட்ட செயற்கை வழியின் விவரங்களுடன் மின் திருட்டு முறையினை விவரிக்கவும்). மேற்சொன்ன குற்றத்தைச் செய்ததன் மூலம், நீங்கள் உரிமம்தாரரை மோசடி செய்யும் உட்கருத்துடன் நேர்மையின்றி மின்சாரத்தைத் திருடியுள்ளீர்கள், நுகர்ந்துள்ளீர்கள் மற்றும் பயன்படுத்தியுள்ளீர்கள். மேலே சொன்ன சட்டவிரோத மின் திருட்டு, நுகர்வு மற்றும் பயன்பாடு, மின்சாரச் சட்டம், 2003, *135/138 ஆம் பிரிவின்படி தண்டனைக்குரியதாகும்.<br>3.0 பார்வையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள தற்காலிகக் கணக்கீட்டு ஆணை தங்களுக்கு வழங்கப்பட்டது மற்றும் தமிழ்நாடு மின் வழங்கல் விதித் தொகுப்பின் ஒழுங்குமுறை விதிகளுக்கிணங்க, தங்களுடைய மறுப்புரைகளைத் தாக்கல் செய்வதற்கும் மற்றும் விசாரணையில் ஆஜராவதற்கும் தாங்கள் அனுமதிக்கப்பட்டீர்கள்.<br>4.0 தாங்கள் எந்த ஆட்சேபனையும் அல்லது விண்ணப்பமும் செய்யாததால் / தங்களுடைய கடிதத்தில் / நேர்முக விசாரணையின் போது தங்களால் கொடுக்கப்பட்ட விளக்கம், அளிக்கப்பட்ட பொருண்மைகள் மற்றும் பதிவுருக்களைப் விவரமான ஆய்வின் மூலம் மற்றும் கவனமாக பரிசீலித்ததன் பேரில், கீழே விவரிக்கப்பட்டுள்ளபடி இறுதி ஆணை இங்கே வழங்கப்படுகிறது :–<br>(கண்டறியப்பட்ட மின்திருட்டு, ஆய்வு அறிக்கை, வழங்கப்பட்ட விளக்கம் மற்றும் கண்டுபிடிப்புகள், முதலியன பற்றிய முழுமையான பகுப்பாய்விற்குபின் சம்பந்தப்பட்ட அலுவலரால் பிறப்பிக்கப்படவுள்ள நியாயமான / தெளிவான விவரமான ஆணை, மின்திருட்டு செய்யப்பட்டுள்ளதாக கோரப்பட்டதற்கு ஆதரவான தடையங்கள்/ஆவணங்கள் பற்றிய குறிப்பு, கூறப்பட்ட மின்திருட்டு தொடர்பாக மின்நுகர்வோரின் ஈடுபாடு அல்லது பங்கு, மின் நுகர்வோரின் கடமைகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பான விதிகள் மற்றும் ஒழுங்குமுறைவிதிகள், குற்றம் சாட்டப்பட்ட நபர் தனது எழுத்துப்பூர்வ பதிலில் சமர்பித்த சமர்ப்பிப்புகள் மற்றும் அவரது தனிப்பட்ட விசாரணையின் போது, அவர் சமர்ப்பித்த ஆவணங்கள் / பொருட்கள் போன்றவை மற்றும் அதை ஏற்றுக்கொள்வதற்கும் நிராகரிப்பதற்கும் காரணங்கள் |

| வ எண். | இருந்துவரும் வகைமுறை | திருத்தத்தினை உள்ளடக்கிய வகைமுறை |
|---|---|---|
